**South Harrow Food & Wins**
தமிழ்க் கடை
Tel: 0181-4236321
234 Northolt Road, South Harrow, Middlesex Ha2 8 du
தரமான இலங்கை Groceries
கடலுணவு வகைகள் மரக்கறி வகைகள்
CD Audio's அத்துடன் புதிய தமிழ் திரைப்படங்கள் வாடகைக்கு
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
(மொத்தமாகவும் சில்லறையாகவும் பெறலாம்)
We Accept All Credit cards & Cheques

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு

பிரித்தானியா

Eelamurasu Weekly

முரசு: 4 09 – 15 ஜூலை 1998 முழக்கம்: 182

**Sakthy** *Video*
Video Filming for Wedding's B'day's & any other Occasion's
By 3 CCD CAMERA'S
Please Cont: 0181 6956822
Mob: 0961313436
K.R.S.
33 Lee High Road, Lewisham Se -13
Tel: 0181-2979432

# வன்னியில் கேணல் கிட்டு பீரங்கிப் படையணி

## ஜெயசிக்குறுவை அனுமதிப்பதில்லை என தலைவர் முடிவு செய்துள்ளார்.

### மூத்த தளபதி கருணா அம்மானின் விசேட செவ்வி



'எதிரியின் முன்னைய நடவடிக்கைகளான ரிவிரச, சத்ஜெய, எடிபல நடவடிக்கைகளை ஆராய்ந்து அவற்றிலிருந்து எதிரியின் நகர்வு எப்படி இருக்கும் என்பதைக் கணித்து அதற்கு ஏற்ப திட்டங்களை வகுத்து, தலைவர் அவர்கள் தளபதிகளையும், போராளிகளையும் நன்கு தயார்ப்படுத்தி வைத்திருந்தார். ஜெயசிக்குறுயின் உள்நோக்கத்தையும், முக்கியத்துவத்தையும் தலைவர் அவர்கள் தெளிவாக உணர்ந்திருந்தார். அதனால் இதனை அனுமதிப்பதில்லை என முடிவெடுத்தார்' என விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கருணா அம்மான் அவர்கள் பத்திரிகைகளுக்கு அளித்த விசேட பேட்டியில் கூறியுள்ளார்.

'ஜெயசிக்குறுய்' போர்முனையில் கொல்லப்படும் படைகள் அனைவருமே நன்கு பயிற்சியும் அனுபவமும் பெற்ற சிங்களத்தின் முன்னணிப்படையணிகளாகும். இது ஓர் நீண்டகால பின்னடைவை எதிரிக்கு ஏற்படுத்தும். இதை இலகுவில் ஈடுசெய்வது சிரமமானது என 'ஜெயசிக்குறுய்' போர்முனையில் விடுதலைப் புலிகளின் தரைப்படை அணிகளை வழிநடாத்தும் தளபதி கருணா அவர்கள் தெரிவித்துள்ளார்.

(ஈ 2ம் பக்கம்)

## சிறிலங்கா பீரங்கித்தளங்களை கண்டறிய புலிகளிடம் நவீன ராடர் கருவிகள்?

சிறிலங்கா இராணுவத்தின் ஆட்டிலெறி மற்றும் பீரங்கித் தளங்களை கண்டறிய விடுதலைப் புலிகள் நவீனரக ரேடார் கருவிகளை பயன்படுத்துவதாக கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது 22 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான இவ் ராடார்கருவிகள் மூன்று மாதங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகளால் கொள்வனவு செய்யப்பட்டு தற்பொழுது வன்னிப் போர்முனைக்கு நகர்த்தப் பட்டுள்ளதாகவும் அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## கரும்புலிகள் நாளில் கொழும்பு நகரில் பதற்றம்

(கொழும்பு)

கரும்புலிகள் நாளை முன்னிட்டு கொழும்பு நகரில் தாக்குதல்கள் நடைபெறலாம் என்ற அச்சம் காரணமாக கொழும்பில் படையினரின் கெடுபிடிகள் தீவிரமாக இருந்ததாக

**வாசகர் கவனத்திற்கு!**

14.07.98 செவ்வாயன்று பாரிசில் வெளிவர வேண்டிய எமது அடுத்த வாரப் பத்திரிகை பிரெஞ்சு விடுமுறை தினத்தை முன்னிட்டு 15.07.98 புதனன்று வெளிவரும் என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

# முல்லை கடற்பரப்பில் பாரிய சமர்

**டோரா சேதம் - பல படையினர் பலி - 7 டோராக்களுடன் புலிகள் 6 மணிநேர சமர்**

முல்லை கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்குமிடையில் ஆறு மணிநேர பாரிய சமரொன்று கடந்த புதனன்று நடைபெற்றுள்ளது. செய்தித் தணிக்கை காரணமாக தமது தரப்பு இழப்புகளை சிறிலங்கா தரப்பு உடனடியாக வெளியிடாத போதும், தற்போது தாக்குதல் பற்றிய விபரங்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

குச்சவெளி பகுதியிலிருந்து முல்லைத்தீவு நோக்கி வந்த கடற்புலிகளின் அணியொன்றினை சிறீலங்கா டோரா போர்க்கலங்கள், முல்லைத்தீவிற்கு அண்

(ஈ 2ம் பக்கம்)

## டக்ளசிற்கு நிரந்தர நரம்புத் தாக்கம்?

களுத்துறை சிறைச்சாலையில் சிறிலங்கா அரசினால் பயங்கரவாத தடுப்பு சட்டத்தில் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளினால் தாக்குதலுக்கு உள்ளான ஈ.பி.டி.பி. டக்ளஸ் தேவானந்தா தொடர்ந்தும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவிலேயே தங்கவைக்கப்பட்டுள்ளார்.

இவரது மூளை நரம்பு மண்டலத்தில் பலமான சேதம் ஏற்பட்டுள்ளதால் நிரந்தரமான நரம்புத் தாக்கிற்கு உட்பட்டவா

(ஈ 2ம் பக்கம்)

## கொழும்பு

## உயர் பாதுகாப்பு வலையமாக பிரகடனம் தமிழர்கள் பெருமளவில் கைது

கொழும்பு மாநகரப் பகுதியினை உயர் பாதுகாப்பு வலையமாக சிறீலங்கா அரசு கடந்த வாரம் அறிவித்துள்ளது. ஜனாதிபதி சந்திரிகாவின் நேரடி பணிப்பின் பேரில் அரச வர்த்தமானியூடாக இப் பிரகடனம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 29ம் திகதி தொடக்கம் 31ம் திகதிவரை 'சார்க்' மாநாடு கொழும்பில் நடைபெற இருப்பதாலேயே கொழும்பு மாநகர் பகுதி முழு

(ஈ 2ம் பக்கம்)

**லண்டனில்** நம்பிக்கை = நாணயம் = உத்தரவாதம் = குறைந்த விலை
மங்கையர் நெஞ்சங்களில் குறுகிய காலத்தில் இடம்பிடித்தவர்கள்
**RATHY JEWELLERS**
தாலிக்கொடி தயாரிப்பில் கைதேர்ந்தவர்களின் கைவண்ணத்தில் சகல நகைகளையும் செய்தும், இறக்குமதி செய்து வழங்குபவர்கள்



28 Ealing Road, Wembley, Middx. HA0 4TL
Tel: 0181-903 3063
Fax: 0181-903 9711
Mon.-Sat. 10.00 A.M. - 6.30 P.M.
Sunday 12.00 Noon - 6.30 P.M.

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

Siege Social
18 & 26, Rue Perdonnet,
75010 Paris.
RCS PARIS
B 399 073 110 (95B01491)
Directeur de la publication:
P. Velupillai
Redacteur:
P. Sivaguru
Impression:
IMPRIMERIE MEAULLE

தொடர்பு முகவரி
EELAMURASU
22, Rue Perdonnet
75010 Paris, France
E.Mail: eelamurasu@aol.com

Tel.: 01 40 37 63 69
Fax: 01 40 37 64 64

Tel: 03 04 35 29 23
Tel / Fax: 02 151 39 73 83

Q.R.
Stadion Alee - 30, 1th
7430 Ikast, Denmark.
Tel + Fax: 75310546

Verlag: People Shop
Henrich Str-85: 8005 Zurich.
Druckerei: Frankreich,
Tel: 01-271 7374

Tel: 0958908145
Tel: 0956277718

VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

JAFFNA FOOD -
Tel: 22425527

Tel: 076 5425804

# கல்முனை தாக்குதலில் பொலிஸ் அதிகாரி பலி

கல்முனையிலிருந்து மருத முனை நோக்கி சென்று கொண்டிருந்த சிறீலங்கா பொலிஸ் வாகனமொன்றின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்தியபோது உதவி பொலிஸ் அதிகாரியான சிங்கள உட்பட இருவர் பலியாகியுள்ளனர்.

கடந்த 5ம் திகதி மாலை 6.30 மணியளவில் நடாத்தப்பட்ட இத்தாக்குதலில் வாகனத்தின் சாரதி அவ்விடத்திலேயே பலியாகியுள்ளார். படுகாயமடைந்த அதிகாரி அம்பாறை வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டபோது மரணமடைந்துள்ளார்.

## வெள்ளவத்தையில் கடத்தப்பட்ட தமிழ் வர்த்தகரின் நிலை என்ன?

இனந்தெரியாத ஆயுததாரிகளால் வெள்ளவத்தை பகுதியில் கடத்திச் செல்லப்பட்ட தமிழ் வர்த்தகரின் நிலை என்ன என்பது பற்றி இதுவரை தெரியவில்லை.

பிரபல வர்த்தகரான இவரது வீட்டிற்கு வந்த ஆயுததாரிகள் ஆயுத முனையில் ஆட்டோ ஒன்றில் கடத்திச் சென்று பின்னர், இவரை வானொன்றுக்கு மாற்றிக்கொண்டு சென்றதாகவும் தெரியவருகிறது.

இவரை கடத்தியது சிறீலங்கா படையினரின் இரகசியக் குழுவாக இருக்கலாமென்ற சந்தேகம் கொழும்பு தமிழ் வர்த்தகர் களிடையே நிலவி வருகின்றன.

இவர் கடத்திச் செல்லப்பட்ட வானின் இலக்கத்தினை சில அயலவர்கள் பொலிசாருக்கு அறிவித்தபோது, அவ் இலக்கம் அமைச்சு ஒன்றின் வாகனத் திற்குரியது எனவும், கடத்தல்காரர்கள் அவ் இலக்கத்தினை தமது வாகனத்திற்கு உபயோகித்துள்ளார்கள் எனவும் பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

# ராஜீவ் கொலை. மேல்விசாரணையில் சர்வதேச பார்வையாளர்கள்

ராஜீவ் கொலைவழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு மரணதண்டனை வழங்கப்பட்டுள்ள 26 பேரின் சார்பாக மேன்முறையீடு செய்யப்பட்டு நடைபெறவிருக்கும் விசாரணைகளில் சர்வதேச பார்வையாளர்களை அனுப்ப இந்தியாவின் சித்திரவதைகளுக்கு எதிரான அமைப்பின் தலைவர் இணக்கம் கொண்டிருப்பதாக இவ் வழக்கை முன்னின்று நடத்தும் தமிழக சட்டத்தரணி திரு. துரைசாமி அவர்கள் தெரிவித்துள்ளார்.




(1ம் பக்கத் தொடர்ச்சி)

### வன்னியில்...

'சிறீலங்காவின் காலாட் படையணிகள் விடுதலைப் புலிகளால் பெருமளவில் அழிக்கப்பட்டு வருவதால் அவர்களது இராணுவத்தின் உள்ளரண் உடைந்து வருகின்றது. அத்துடன் கவச ஊர்திகள், கொமாண்டோ கள் கொல்லப்படுவதும் இலகுவில் ஈடுசெய்யப்பட முடியாதது ஒன்று.'

'மேலும், ஏராளமான இளநிலை அதிகாரிகள் கொல்லப்படுவதும், காயப்படுத்தப்படுவதும் அவர்களுக்கு நீண்ட கால பின்னடைவை ஏற்படுத்துகிறது' எனக் குறிப்பிட்டுள்ள அவர் சீன இராணுவ விஞ்ஞானியான சிட் சன்சூவின் பிரபலமான தத்துவமாகிய, இராணுவ நடவடிக்கையின் இலக்கு வெற்றி அது வேகமாக கிடைக்க வேண்டும். அப்படிக் கிடைக்காவிட்டால் இலக்கு அடையப்பட்டாலும்கூட தோல்வியே ஏற்படும் என்பதை சுட்டிக்காட்டி சிறீலங்கா அரசு தோற்கப்போவது உறுதியானது எனத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளினால் புதிதாகப் பயிற்றுவிக்கப்பட்ட கேணல் கிட்டு பிரங்கிப் படையணிகளே எமது வெல்லாச் சமரின் பிரதான பலம் என்றும், தளபதி பானு தலைமையில் இப் படையணி வன்னிப் பகுதியில் எதிரி மீது குறிதவறாது தாக்குதல்களை நடாத்தி அவர்களுக்கு பேரிழப்புக்களை கொடுக்கின்றார்கள் என்று தளபதி கருணா கூறியதுடன், 1300 போராளிகளின் உயிர்த்தியாகத்தால்தான் எதிரியின் திட்டங்கள் தகர்வுகள் தடுக்கப்பட்டன. விபரிக்க முடியாத கஷ்டமான சூழ்நிலையிலும் எமது பெண் போராளிகளும் எதிரியை முன்னேறி இலக்கை அடைய விடாமல் தாக்கிவருகிறார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

[illegible]

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### கொழும்பு...

[illegible] பாதுகாப்பு [illegible] பிரகடனப்படுத்தியுள்ளார் [illegible] எடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றியும் மிக நுணுக்கமாக ஆய்வு செய்து வருகிறது.

இதே நேரம் கொழும்பில் தமிழர் அதிகமாக வாழும் இடங்களையும், தமிழ் வர்த்தக நிலையங்களையும் படையினர் முற்றுகையிட்டு தேடுதலை நடாத்தி வருகின்றனர். செட்டியார் தெருப் பகுதியில் நடாத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது பலர் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### முல்லை...

[illegible] போது இப் பாரிய சமர் மூண்டுள்ளது.

முன்னிரவு 11 மணியளவில் ஆரம்பித்த இச் சமரானது மறுநாள் காலை 5 மணிவரை நீடித்துள்ளது. 7 பேரைக் கொண்ட படகுகளில் வந்த புலிகள் மிகவும் வீராவேசமாக போரிட்டனர். எதிரிகளை விரட்டியடித்து மற்றும் தன்னியக்க ஆயுதங்களைக் கொண்டு இரு தரப்பினரும் போரிட்டனர். அப்பகுதி வெடியோசைகளால் அதிர்ந்தது. இரவு நேரமானதால் கடற்படையினருக்கு உதவி வழங்க வான்கலங்களும் வரவில்லை.

தாக்குதலுக்கு முகம்கொடுக்க முடியாது பேராக்கம் அதிகாலை பின்வாங்கத் தொடங்கிய போதிலும், கடற்புலிகள் அவற்றை துரத்தித், துரத்தி தாக்குதலை தொடுத்தனர். அப்போது டோரா ஒன்று அநியாயமாக சேதமடைந்ததுடன், அதிலிருந்த படையினரும் கொல்லப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு பகுதியில் எடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையின் மூலம் கடற்புலிகளின் முல்லைத்தீவு — வாகரை தொடர்புகள் சீர்குலைக்கப் பட்டுவிட்டதாக சிறீலங்கா அரசு பிரச்சாரப்படுத்திய சில மணி நேரத்திலேயே இப் பாரிய சமர் நடைபெற்றுள்ளது.

இத் தாக்குதல் பற்றிய விபரங்களை வெளியிடுமாறு செய்தியாளர்கள் பாதுகாப்பு அமைச்சிடம் கேட்டபோது, ஒரு டோரா படகு சிறிதளவு சேதமானதாகவும் இரு கடற்படையினர் காயமடைந்ததாகவும் மட்டுமே தெரிவித்துள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### டக்ளசிற்கு...

[illegible] தெரிவித்திருக்கின்றன.

முன்னதாக, யாழ் வைத்திய அதிகாரிகளினால் சுமார் மூன்று மணிநேர சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட தேவானந்தா செயற்கை சுவாசக் கருவியின் உதவியுடனே மூன்று நாட்கள் சுவாசத்தினை பெற்றுக் கொண்டிருந்தார்.

தற்போது தேவானந்தாவின் உடல் நிலையில் சிறிது முன்னேற்றம் காணப்படுவதாக வைத்தியர்கள் தெரிவித்தபோதிலும் எதிர்காலத்தில் இவரது உடல் நிலை எப்படியிருக்கும் என்பதை உறுதியாக தெரிவிக்க முடியாதென்றும் குறிப்பிட்டுள்ளனர்.

தேவானந்தா அனுமதிக்கப் பட்டுள்ள வைத்தியசாலையின் பாதுகாப்பு ஏற்பாடுகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன.

(விரிவான கட்டுரை உள்ளே)

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### கரும்புலிகள்...

தெரிவிக்கப்படுகிறது. வாகனங்கள், கட்டடங்கள் தீவிர சோதனைக்கு உள்ளாகியதுடன், பயணிகளும் கடும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கரும்புலிகள் கொழும்பிற்கு [illegible]

[illegible] உள்ளதாக சிறீலங்கா படைகள் எச்சரிக்கை செய்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புதிய வரவு IATA உடனுக்குடன் பிரயாண ரிக்கெற் பெற்றுக்கொள்ளலாம்

ERRANCES TRAVELS
Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc, 75010 Paris.
Mº: La Chapelle ou Louis Blanc

à partir de

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900Frs |
| Delhi | - | 3,900Frs |
| Bangkok | - | 3,400Frs |
| Colombo | - | 3,800Frs |
| Singapour | - | 3,670Frs |
| Madras | - | 4,300Frs |
| Londres | - | 790Frs |
| New york | - | 2,300Frs |
| Montreal | - | 2,800Frs |
| Oslo | - | 2,010Frs |
| Toronto | - | 2,800Frs |
| Nepal | - | 4,820Frs |

Li: 075 95 01 37

# தலதா மாளிகை குண்டு வெடிப்புக்கு பொலிசாரே பொறுப்பு
## - விசாரணைக்குழு அறிக்கை -

(கொழும்பு, ஜூலை 2)

கண்டி தலதா மாளிகையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்கு கண்டிப் பொலிஸாரின் கவனக்குறைவே காரணம் என்றும், அதனால் அதற்கான பொறுப்பை அவர்களே ஏற்க வேண்டும் என்றும் அது தொடர்பாக விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட கமிட்டி தெரிவித்துள்ளது.

1998-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25ம் திகதி கண்டி தலதா மாளிகையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தினுடைய பின்னணிகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவினால் நியமிக்கப்பட்ட இந்தக் கமிட்டி தனது அறிக்கையை கடந்த மாதம் 16ம் திகதி அரசாங்கத்திடம் கையளித்துள்ளது.

அந்த அறிக்கையில்,

கண்டி நகரில் போதுமான அளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுருக்கவில்லை. தலதா மாளிகையின் பாதுகாப்புக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்கள் பற்றி கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை. அத்தோடு அத்தகைய அச்சுறுத்தலுக்கு முகங்கொடுப்பதற்கு தகுந்த முன்னேற்பாடுகளைச் செய்யாததால், அது தலதா மாளிகையையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலுமிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகளில் பலத்த குறைபாடுகளை ஏற்படுத்தியிருந்தது.

கண்டிப் பொலிஸாரிடம் இருந்த இந்தக் குறைபாடுகளைச் சரி செய்ய கொழும்பு பொலிஸ் தலைமையகம் முயற்சி எடுக்கவோ ஆலோசனை வழங்கவோ முயலவில்லை.

குண்டு வெடிப்பு இடம்பெற்ற தினம்வரை கண்டிப் பொலிஸாரின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் பல ஓட்டைகள் இருந்தன. சம்பவதினத்திற்கு ஒரு வாரத்துக்கு முன்பே குண்டுத் தாக்குதல் தொடர்பான தகவல் கிடைத்திருக்கிறது. எத்தகைய அச்சுறுத்தலுக்கு முகங்கொடுக்க வேண்டிவரும் என்று தெளிவாகத் தெரிந்திருந்தும் அதை எதிர்கொள்வதற்கு தகுந்த முன்னேற்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை.

குறைந்த பாதுகாப்பு ஏற்பாடுகளினால் நிகழ்ந்த அவமானத்திற்கு கண்டிப் பொலிஸ் அதிகாரிகளே (நேரடியாக) பொறுப்பேற்கவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணைக் கமிட்டி கண்டி தலதா மாளிகை நிர்வாகம், பொதுமக்கள், பாதுகாப்புப் படையினர், மற்றும் பல்வேறு தரப்பினரிடமிருந்து 09 க்கும் அதிகமான சாட்சியங்களை பதிவு செய்திருந்தது.

# கொழும்புத் துறைமுகத்திற்கருகில் கடலில் பாரிய எண்ணெய்க் கசிவு

(கொழும்பு, ஜூலை 2)

சிறீலங்கா பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு சுத்திகரிக்கப்படாத எண்ணெய்யை எடுத்துவரும் கிரேக்கக் கப்பலில் குழாய் ஒன்றில் ஏற்பட்ட வெடிப்புக் காரணமாக கொழும்புத்துறைமுகத்துக்கு அண்மித்த கடற்பகுதியில் பாரிய எண்ணெய்க் கசிவு ஏற்பட்டுள்ளது.

கொழும்புத் துறைமுகத்திலிருந்து 7 அல்லது 8 கிலோமீற்றர் தொலைவிலுள்ள கடலில் ஏற்பட்டுள்ள இந்த எண்ணெய்க் கசிவால் கொழும்பைச்சூழவுள்ள கடற்பகுதி மாசடைவதோடு கொழும்புத்துறைமுகத்தில் கடற்படுக்கைகளைச் சுத்திகரிப்பு அமைப்பு முறையும் பாதிப்புக்குள்ளாகக்கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிரேக்கத்தில் பதிவு செய்யப்பட்ட 'கிரோஸ் ராகோஸ்' என்ற இந்த எண்ணெய்த் தாங்கிக் கப்பல், கடலிலுள்ள சிறீலங்கா பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எண்ணெய்க் குழாய்களுக்குள் எண்ணெயைச் செலுத்திக்கொண்டிருந்த நேரத்திலேயே அதன் எண்ணெய் செலுத்தி குழாய்களில் வெடிப்பு ஏற்பட்டு அதன் மூலம் எண்ணெய் கடலில் கசிந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

தற்போது இந்தக் கப்பல் எண்ணெய் செலுத்துவதை நிறுத்தியபோதிலும் 70 முதல் 75 தொன் மசகு எண்ணெய் கடலில் கலந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கப்பல் 88 ஆயிரம் தொன் எண்ணெயை ஈரானிலிருந்து ஏற்றி வந்திருந்தது.

# ஜேர்மனியில் தமிழ் இளைஞர் கொலை

(எசன்)

ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்கள் தடுத்து வைத்திருக்கும் சிறைச்சாலை ஒன்றில் வடமேறு சோகராதன் அல்லது இலங்கநாதன் என அழைக்கப்படும் இளைஞர் ஒருவர் கட்டில் தடியால் அடித்துக்கொல்லப்பட்டுள்ளார். ஜேர்மனியில் Buren என்ற இடத்தில் கடந்த 01.07.98 புதன்கிழமையன்று இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. அந்தத் தடுப்புச் சிறையில் இன்னொரு தமிழரே கோபமுற்றவராக கட்டில் தடியால் அடித்துக்கொன்றுவிட்டு, அவரது கழுத்தை இடுப்புப் பட்டியால் நிலைப்பட கட்டி அறையில் தொங்கவிட்டு அவர் தற்கொலை செய்துகொண்டுள்ளதாக காட்ட முற்பட்டதாக சொல்லப்படுகிறது.

இந்தக் கொலைக்கான காரணம் எதுவும் இதுவரை தெரியவில்லை. பொலிஸார் தொடர்ந்து விசாரணை செய்துவருகின்றனர்.

# வாந்திபேதி நோய்க்கு இருவர் பலி

மன்னார், வன்னி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் தற்பொழுது பரவிவரும் வாந்திபேதி நோய்க்கு இதுவரை இருவர் பலியானதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மன்னார் பகுதியில் 61 வயதுடைய பெண்ணொருவரும், புதுக்குடியிருப்புப் பகுதியில் இன்னொருவருமே மேற்படி பலியானவர்களாவர். இதேவேளை மடு அகதி முகாமில் தங்கியிருந்த ஒருவருக்கு வாந்திபேதி நோயின் அறிகுறிகள் காணப்பட்டதால் அவர் மடு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பில் பலியான வாந்திபேதி நோயாளி அண்மையில் வவுனியாவுக்குச் சென்றிருந்தபோதே நோய்த் தாக்கத்திற்கு இலக்காகியிருக்கலாமென முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

புதுக்குடியிருப்புப் பகுதியில் மேலும் எழுவருக்கு வாந்திபேதி நோய் அறிகுறி காணப்பட்டுள்ளதால் அவர்களும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# வன்னிக்கு சித்த வைத்திய நிலையங்கள்

புதுக்குடியிருப்பு, அக்கராயன் ஆகிய பகுதிகளில் இரு சித்த வைத்திய நிலையங்களை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. முழுமுழுதான சித்த வைத்திய சிகிச்சைகளை மேற்கொள்ளக்கூடியதாக அமைக்கப்படவுள்ள இவ் வைத்தியசாலைகளில் வைத்தியர்களும், ஊழியர்களும் தங்கியிருக்கக் கூடியதான விடுதிகளும் அமைக்கப்படவுள்ளன.

வன்னிப் பகுதிக்கு சிறீலங்கா அரசு மேற்கத்தைய மருந்துப் பொருட்களை அனுப்பப் பெரும் கட்டுப்பாடுகளை தொடர்ந்தும் விதித்துவருவதால் இச் சித்த வைத்தியசாலைகளின் சேவை பெரும் பிரயோசனமாயிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மேஜர் கல்கி, மேஜர் வர்ணகாந்தன் வீரச்சாவு

மன்னார் உயிலங்குளம் பொலிஸ் ரோந்து அணி மீதான தாக்குதலில் கடந்த 27.06.98 அன்று மேஜர் கல்கி (நாகலிங்கம் சுதாகரன் - மட்டக்களப்பு) வீரச்சாவை தழுவிக்கொண்டார். இத் தாக்குதலில் 3 பொலிசார் கொல்லப்பட்டனர். 29.06.98 அன்று மட்டக்களப்பில் இராணுவ சுற்றிவளைப்பின் போது மேஜர் வர்ணகாந்தன் ஜெயசிறீ (சதாசிவம் சந்தசாமி - மட்டக்களப்பு) உட்படமூன்று போராளிகளும் வீரச்சாவை தழுவிக்கொண்டுள்ளனர் என வன்னி செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கடந்த நாலாம் திகதி எதிர்பாராத வெடிவிபத்தொன்றில் பத்து போராளிகள் வீரச்சாவை தழுவிக்கொண்டுள்ளனர்.

# வலி. கிழக்கு மக்களின் விபரங்கள் படையினரால் திரட்டல்

வலிகாமம் கிழக்குப் பகுதிகளான நீர்வேலி, அச்சுவேலி, கோப்பாய் பகுதிகளில் வசிக்கும் மக்களின் சுய விபரங்களை சிறீலங்காப் படையினர் திரட்டி வருகின்றனர்.

அதிகாலை 5 மணியளவில் முற்றுகை தேடுதல் நடவடிக்கையூடாக இவ் ஊர்களுக்குள் பிரவேசிக்கும் படையினர் மாலை வரை தரவு திரட்டும் பணியில் ஈடுபடுவதுடன், சந்தேகத்திற்கு இடமானவர்களை கைது செய்தும் வருகின்றனர்.

காலை முதல் மாலை வரை நடைபெறும் இந் நடவடிக்கை காரணமாக இப்பகுதி மக்கள் எங்கும் வெளியேற அனுமதிக்கப்படாமையால் கூலித்தொழிலாளர்களும், ஏனைய ஊழியர்களும் தமது கடமைகளுக்குச் செல்லமுடியவில்லை.

விடுதலைப் புலிகளின் நடமாட்டம் இப் பகுதியில் அதிகரித்து வருவதால் இவ்வாறான நடவடிக்கையில் இறங்கியுள்ள படைத்தரப்பு, மக்களின் சுயவிபர தரவுகளைச் சேகரித்து தமிழ் குழுக்கள் மூலமாக அதனை ஆராய்ந்து வருவதாகவும் தெரியவருகின்றது.




# மன்னாரில் தாக்குதல் 3 பொலிசார் பலி

மன்னார் உயிலங்குளம் பகுதியில் ரோந்து சென்ற சிறீலங்கா பொலிஸ் அணி ஒன்று விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

இதன்போது மூன்று பொலிசார் பலியாகியுள்ளனர். அவர்களிடமிருந்து ஆயுத தளபாடங்களும் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் நடமாட்டம் பற்றி கண்காணிக்கச் சென்ற பொலிஸ் அணியே தாக்குதலுக்கு உள்ளானதாகும். கடந்த 27ம் திகதி நடாத்தப்பட்ட இத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரமரணமடைந்துள்ளார்.

## கட்டுநாயக்கா விமான நிலைய சுற்றாடலில் கொள்ளைகள்

சிறீலங்காவின் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையச் சுற்றாடலில் பல கொள்ளைச் சம்பவங்கள் நடைபெறுவதாகத் தெரியவருகிறது. வெளிநாடுகளிலிருந்து திரும்பிவரும் பயணிகளின் உடைமைகளை ஆயுததாரிகளான சிலர் கொள்ளையடித்துச் செல்கின்றனர். கடந்தவாரம் மட்டும் இவ்வாறாக இரண்டு கொள்ளைச் சம்பவங்கள் அதிகாலைவேளையில் நடைபெற்றுள்ளன. சிங்கப்பூரிலிருந்து வர்த்தக நோக்கோடு சில உடைமைகளைக் கொண்டுவந்த வர்த்தகர்களை வழிமறித்த ஆயுததாரிகள், அவர்களிடமிருந்து உடைமைகளையும், பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இவ் வர்த்தகர்கள் தமிழர்கள் எனக் கூறப்பட்ட போதிலும் அதனை உறுதிப்படுத்தமுடியவில்லை. இதே தினம் இரவு 11.30 மணியளவில் விமான நிலையத்திலிருந்து நகரப் பகுதிக்குச் செல்லும் வாகனமொன்றும் இதே பாணியில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

## ஜேர்மனியில் தமிழ் அகதி மரணம்! 3 நாட்களின் பின் பிணம் கண்டுபிடிப்பு

(இரெக்பெல்ட்)

ஜேர்மனியிலுள்ள இரெக்பெல்ட் நகரில் வசித்து வந்த செல்வராசா வரதேவன் என்பவரே கடந்தவாரம் இவ்வாறு மரணமாகியுள்ளார். தமிழீழம் வேலணையைப் பிறப்பிடமாகக்கொண்ட இவர் இரெக்பெல்ட் அகதி முகாம் தங்கும் அறையில் மரணமடைந்துள்ளார். இவர் மரணித்த தகவல் மூன்று நாள் கழித்தே வெளியே தெரியவந்தது. இவரது மரணத்திற்கு அதிக குடிபோதை காரணமாக இருக்கலாம் எனச் சொல்லப்படுகின்றது.

இவரது உடலைப் பொறுப்பேற்று இறுதிக் கிரியைகளைச் செய்வதற்கு உறவினர்கள் யாரும் அங்கு இல்லாததாலும் அவர்கள் பற்றிய விபரம் தெரியாததாலும் இரெக்பெல்ட் தமிழர் ஒன்றியம் அதைச் செய்யும் பொறுப்பை எடுத்துள்ளதாக அறிவித்துள்ளது.

## திருநெல்வேலியில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு

யாழ். திருநெல்வேலிப் பகுதியில் கடந்த ஒருமாத காலமாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இரவு நேரங்களில் திருடர் கோஷ்டி ஒன்று இப் பகுதி வீடுகளிற்குள் புகுந்து உடைமைகளை திருடிச் சென்றுவிடுகின்றது. கடந்தவாரம் நாவலர் வீதியில் உள்ள வீடொன்றுக்கு மேற்படி திருட்டுக் கோஷ்டி பிரவேசித்து அங்கு நித்திரையில் ஆழ்ந்திருந்த பெண்ணின் கழுத்தில் இருந்த சங்கிலியையும் அவர்களது வேறு நகைகளையும் திருடிச் சென்றுள்ளது. இத் திருட்டுச் சம்பவங்களால் இரவு வேளையானதும் இப் பகுதி மக்கள் கண்விழித்திருக்கவேண்டிய அவல நிலை எழுந்துள்ளது.

## நீதிக்கும், சமாதானத்திற்குமான தூதுக்குழு யாழ். விஜயம்

அங்கலிக்கன் திருச்சபையின் சர்வதேச நீதிக்கும் சமாதானத்திற்குமான அமைப்பைச் சேர்ந்த நான்கு பேர்கொண்ட தூதுக்குழு இருநாள் விஜயமாக யாழ்ப்பாணத்திற்குச் சென்றுள்ளது. இத்தூதுக்குழுவில் பனாமா நாட்டைச் சேர்ந்த பேராயர் ஜேம்ஸ்ஒட்லி, அமெரிக்காவை சேர்ந்த வணபிதா கனொன் பிரையன், பிஜிசியாவைச் சேர்ந்த ஜெனிநுபா ஆகியோருடன் வணபிதா சர்வானந்தன் சிறில் தேவானந்தன் ஆகியோரும் சென்றுள்ளனர். இக்குழுவினர் யாழ்குடாவில் பல்வேறு பகுதிகளைப் பார்வையிட்டதுடன், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மதத் தலைவர்கள் ஆகியோருடனும் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர். பொது மக்களும் இக் குழுவினரிடம் தமது இன்னல்களை எடுத்துக்கூறியுள்ளதாகத் தெரியவருகிறது.

## மயிரிழையில் உயிர் தப்பிய ஐ.தே.க உறுப்பினர்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும், சிறீலங்கா இராணுவத்திற்கும் இடையில் மோதல் இடம்பெற்ற பொழுது மட்டக்களப்பு மாவட்ட ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் அலிஸாகிர் மௌலானாவும் எம். ஷச்சாம். இருவரும் மயிரிழையில் உயிர் தப்பிக்கொண்டதாக தெரியவருகிறது. கொழும்பிலிருந்து பொலநறுவையில் நடைபெற்ற ஐ.தே.க வின் மாகாண சபைக்கான வேட்பாளர் தெரிவுக் கூட்டமொன்றில் கலந்துவிட்டு ஏறாவூர் திரும்பும் வழியிலேயே இச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இத் தாக்குதலுக்கு இலக்கு இவர்களின் வாகனம் அகப்பட்டதனால் அதற்குப் பலத்த சேதம் ஏற்பட்டது ஆனாலும் இவர்கள் வாகனத்தின்கீழ் பதுங்கிக்கொண்டதனால் உயிர் தப்பிக்கொண்டார்கள்.

## வன்னியில் சிறுவர்களுக்கான மதிய உணவுத் திட்டம்

வன்னிப் பகுதியில் உள்ள சிறுவர்களுக்கான மதிய உணவுத் திட்டம் ஒன்றினை மனித முன்னேற்ற நடு நிலையத்தினர் அறிமுகப்படுத்தியுள்ளனர். மனித முன்னேற்ற நடு நிலையத்தின் பணிப்பாளர் வணபிதா சே. ஜெயக்குமார் அண்மையில் வன்னிப் பிரதேசத்திற்குச் சென்று இத் திட்டத்திற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை பூர்த்தி செய்துள்ளார். மதிய உணவுத் திட்டம் பற்றி வணபிதா அவர்கள் தெரிவிக்கையில், வன்னியில் வாழ்கின்ற சிறுவர்களின் போசாக்கு நிலைமை மிகவும் மோசமாக உள்ளதால் சிறார்களுக்கான மதிய உணவுத் திட்டத்தை அவசரமாக ஆரம்பிக்க எமது நிலையம் திட்டமிட்டது. இத்திட்டத்தின்படி 27 பாலர் பாடசாலைகளில் பயில்கின்ற சுமார் 700 பிள்ளைகளுக்கு மதிய வேளையில் பால்உணவு வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் பரந்தன், இரணைப்பாலை போன்ற இடங்களில் இலவசப் பாலர் பாடசாலைகளும் நடாத்தப்பட்டுவருவதாக வணபிதா மேலும் தெரிவித்தார்.

## மட்டுவிலில் 2 ஈ.பி.டி.பி.யினரின் சடலங்கள்

யாழ் தென்மராட்சி மட்டுவில் ஆயத்தடிப் பகுதியில் கடந்த 30.06.98 செவ்வாய் அதிகாலை 2 ஈபிடிபி உறுப்பினர்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கண்கள் கட்டப்பட்ட நிலையில் இவர்களின் சடலங்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் காணப்பட்டன. இந்த இரு சடலங்களும், 25 முதல் 30 வயது மதிக்கத்தக்க இளைஞர்களுடையவை என்றும், இவர்களை தாம் அதற்கு முன் இந்த பகுதியில் பார்த்திருக்கவில்லை எனவும் மட்டுவில் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். ஆயினும் ஈபிடிபி கட்சி யாழ்ப்பாண தலைமைப்பீடம் சுட்டுக்கொல்லப்பட்ட இருவரும் சர்செல்வகுமார் (காந்தி), கி. பிரதீப்குமார் (திருக்கோணமலை) எனவும் அவர்கள் தமது உறுப்பினர்கள் எனவும் உறுதிப்படுத்தியிருக்கிறது.

## செனகலில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விடுதலை

செனகல் நாட்டிலிருந்து கடந்த மார்ச் மாதம் சிறீலங்காவிற்குத் திருப்பி அனுப்பப்பட்ட 95 தமிழ் இளைஞர் யுவதிகள் கடந்த வாரம் நீர்கொழும்பு நீதி மன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். செனகலில் இருந்து திரும்பிய இவர்களை தடுத்து வைத்திருந்த சிறீலங்கா இரகசியப் பொலிசார் இவர்கள் மீது கடுமையான விசாரணைகளை மேற்கொண்டனர். ஆனால் இவர்கள் யாவரும் எவ்வித குற்றமும் இழைக்காதவர்கள் என்பதால் இவர்களை விடுதலைசெய்ய ஆட்சேபம் ஏதும் இல்லையென குறிப்பிட்ட நீதிமன்றம், இவர்களை விடுவிக்குமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளது.

## தேர்தலை நடத்தாவிடில் நாடு தழுவிய போராட்டம் - ஜே.வி.பி. -

திட்டமிட்டபடி மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் நடத்தாவிட்டால் நாடு தழுவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களையும், போராட்டங்களையும் நடாத்தப்போவதாக ஜே.வி.பி அறிவித்துள்ளது.

இன்றைய அரசு தேர்தலை நடாத்தப் பின் நிற்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. யுத்தத்தினைக் காரணமாகக் கூறிக்கொண்டு அசாதாரண விதிகளின் கீழ் இத் தேர்தலை ஒத்திவைக்க அரசு முயலுமானால் ஜே.வி.பி அதனை ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை. அண்மைக் காலங்களில் நாட்டில் இடம் பெற்ற அனைத்துத் தேர்தல்களும் யுத்த சூழ்நிலையில்தான் நடந்துள்ளன. ஆனால் இப்போது மட்டும் தேர்தலை பிற்போடுவதில் அர்த்தமேதுமில்லை. எனவே திட்டமிட்டபடி தேர்தலை நடாத்தவேண்டும், இல்லாவிடில் எமது போராட்டம் ஆரம்பமாகும் எனவும் ஜே.வி.பி. வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 50-இற்கும் மேற்பட்ட தமிழர்கள் கைது

கொழும்பில் புறக்கோட்டை, மருதானை, கொம்பனித்தெரு, கொட்டாஞ்சேனை ஆகிய இடங்களில் சிறீலங்கா படையினர் நடத்திய சுற்றிவளைப்புக்களில் ஐம்பதுக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கைது செய்து கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் பெண்களும் அடங்குவர்.

## திருமலையில் 2363 குடும்பங்களுக்கு நிவாரண நிறுத்தம்

திருமலை மாவட்டத்தில் சிறீலங்கா இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்களில் 2363 குடும்பங்களுக்கான நிவாரணத்தினை தற்பொழுது நிறுத்திவிட அரசு முடிவு செய்துள்ளது.

முகாம்களிலும் முகாம்களுக்கு வெளியேயும் வாழும் இக் குடும்பங்களிற்கு நிவாரணம் திடீரென்று நிறுத்தப்பட்டதினால் அவர்கள் தற்பொழுது திக்கற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

சிறீலங்காவின் அத்தியாவசிய சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்பட்ட இம்முடிவினை திருமலையிலுள்ள தொண்டர் நிறுவனங்களும், பிரதேச செயலக வட்டாரங்களும் கண்டனம் செய்துள்ளன.

## கொள்ளுப்பிட்டியில் தமிழர் வீட்டில் கொள்ளை

கொள்ளுப்பிட்டிப் பகுதியில் உள்ள தமிழர் ஒருவரது வீட்டிலிருந்து ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளும், பணமும் கொள்ளையடித்துச் செல்லப்பட்டுள்ளன. சிறீலங்கா மின்சார சபையில் பொறியியலாளராகக் கடமையாற்றும் இவரது வீட்டில் அதிகாலை 4.30 மணியளவில் பிரவேசித்த ஆயுததாரிகளே இக் கொள்ளையை நடாத்திவிட்டுச் சென்றுள்ளனர்.

## ஜனசக்தியின் விளையாட்டு விழா

முல்லை ஜனசக்தி சிறுவர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா கடந்த 2ம் திகதி பிற்பகல் நடைபெற்றுள்ளது. பாடசாலை பொறுப்பாளர் செல்வி. பி.மனோரஞ்சிதம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவானது தேசியக்கொடி ஏற்றல், மங்கல விளக்கு ஏற்றல் ஆகிய நிகழ்வுகளுடன் ஆரம்பமானது. பெற்றோர்களும், பொது மக்களும் இவ் விழாவில் கலந்து கொண்டு சிறார்களை உற்சாகப்படுத்தினர்.

## வவுனியாவில் மாணவர் கைது

வவுனியா பகுதியைச் சேர்ந்த 18 வயதான யோகராஜா அற்புதன் என்ற மாணவர் சான்றிதழ் ஒன்றினைப் பெறுவதற்குச் சென்றபொழுது சிறீலங்காப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் தற்பொழுது வவுனியா இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

Tamileelam Archive

## தமிழீழச் செய்தித் தொகுப்பு

# தேசமெங்கும் எழுச்சிமிகு கரும்புலிகள் நாள்

சிறீலங்காப் படையினருக்கு சிம்மசொப்பனமாக விளங்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கரும்புலிகளின் எழுச்சி நாள் தமிழ்த் தாயகமெங்கும் கடந்தவாரம் எழுச்சியாகக் கொண்டாடப்பட்டுள்ளது.

வன்னி மற்றும் தென்தமிழீழப் பகுதிகளில் நடைபெற்ற இவ் விழாவில் பல கலை நிகழ்வுகளும், விளையாட்டுப்போட்டிகளும் நடாத்தப்பட்டதாக தாயக செய்திகள் தெரிவிக்கின்றன. கரும்புலி வீரர்களின் வீரத்தினையும், தியாகத்தினையும் எடுத்துக்கூறும் அலங்கார வளைவுகளும், ஓவியங்களும் வீதியோரங்கள் மற்றும் முக்கிய சந்திகளில் நிறுவப்பட்டிருந்தன. அத்துடன் வீதிகள் யாவும் அலங்கரிக்கப்பட்டும் காணப்பட்டது.

புதுக்குடியிருப்பு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை வளாகத்திலிருந்து ஆரம்பமான எழுச்சிப் பேரணியொன்று முல்லைத்தீவு மகாவித்தியாலய மைதானத்தை வந்தடைந்துள்ளது. இப் பேரணியில் பாடசாலை மாணவர்களும், ஏராளமான பொது மக்களும் கலந்துகொண்டிருந்தனர். முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் கரும்புலிகளின் தியாகம்பற்றி பலர் எடுத்துரைத்தனர். இதேவேளை புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் பல விளையாட்டுப்போட்டிகளும் நடாத்தப்பட்டுள்ளன.

இவ் விளையாட்டுப் போட்டியில் படகுச்சவாரி சிறப்பாக நடைபெற்றிருந்தது. இவ்விழாக்களில் கலந்துகொள்ளும் மக்களுக்கு தமிழீழ போக்குவரத்துச் சேவைப் பிரிவினர் விசேட பேருந்துச் சேவைகளை நடாத்தியிருந்தனர்.

## அரச அதிகாரிகள் மீது படையினர் வேட்டை

மட்டக்களப்புப் பகுதியில் உள்ள அரசாங்க அதிகாரிகள், வழிபாசகர் மீது சிறிலங்காப் படையினர் தமது வேட்டையினை ஆரம்பித்துள்ளனர். விடுதலைப் புலிகளிடம் தொடர்பு கொண்டவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் பட்டிருப்பு மாநகர சபையின் பொறியியலாளரான வில்சன் என்பவரும் வழிபாசரான ராஜன் என்பவரும் படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம் கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளரான வர்ணகுலசிங்கம் என்பவரையும் ஓட்டமாவடி பிரதேசசபை நிர்வாக அதிகாரியையும் படையினர் கைதுசெய்து தடுத்து வைத்துள்ளனர். விடுதலைப் புலிகளுடன் இவர்களுக்குத் தொடர்பு கிடையாதென பல் வேறு தரப்பினர் இராணுவத்திடம் எடுத்துக் கூறியபோதிலும் இவர்களை விடுதலை செய்ய இராணுவத்தினர் தொடர்ந்தும் மறுத்து வருகின்றனர்.

இக் கைதுகள் காரணமாக மட்டக்களப்பு அரசாங்க அதிகாரிகளிடையே பதட்டம் நிலவி வருகிறது.

## வடமராட்சியில் ஒருவர் சுட்டுக்கொலை

வடமராட்சி மணற்காடு பகுதியைச் சேர்ந்த செல்லத்துரை யோகராஜா என்ற 35 வயது நபர் சிறிலங்காப் படையினரால் வல்லிபுரம் விஷ்ணு ஆலயத்திற்கருகாமையில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இவரது சடலத்தை மந்திகை வைத்தியசாலையில் ஒப்படைத்த படையினர், இவர் சுட்டுக் கொல்லப்பட்டதற்கான காரணம் எதனையும் தெரிவிக்கவில்லை.

பின்னர் இவரது சடலத்தை உறவினர்கள் பொறுப்பேற்றுச் சென்றுள்ளனர்.

## வாந்திபேதி விழிப்பு கருத்தரங்குகள்

வட தமிழீழப் பகுதிகளில் பரவ ஆரம்பித்துள்ள வாந்திபேதி நோயினை மேலும் பரவாது தடுக்கும் நோக்குடன் தமிழீழ சுகாதார சேவைப் பிரிவினரின் ஆதரவுடன் வாந்திபேதி நோய் பரவுவதை தடுப்பது தொடர்பான விழிப்பு கருத்தரங்குகள் பரவலாக நடாத்தப்பட்டு வருகின்றன.

குறிப்பாக உணவுச் சாலைகளின் உரிமையாளர்களுக்கும் அங்கு பணிபுரிபவர்களுக்குமான விசேட கருத்தரங்கு ஒன்று கடந்த 2ம் திகதி புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் நடாத்தப்பட்டுள்ளது.

முல்லை மாவட்ட வைத்தியசாலை அதிகாரி [illegible] பல வைத்தியர்கள் கலந்துகொள்ளும் இக் கருத்தரங்குகள் மூலமாக வாந்திபேதி நோய் பரவாது தடுக்கும் வழிமுறைகள் மக்களுக்கு விரிவாக எடுத்துச் சொல்லப்படுகின்றன.

அத்துடன் வாந்திபேதி தொற்றுள்ள இடங்களுக்கு பிரயாணம் செய்வதனையும் இயன்றளவு தவிர்த்துக்கொள்ளுமாறு வலியுறுத்தப்பட்டும் வருகின்றது.

இதேவேளை ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகராலயம், எல்லைகளற்ற மருத்துவர்சங்கம், கெயார், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகிய தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளும் மல்லாவியில் கூடி வாந்திபேதி தொடர்பான தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்துள்ளனர்.

## யாழ்.நகரில் சுற்றிவளைப்புக்கள் அதிகரிப்பு

யாழ் நகரப்பகுதியில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாக சிறிலங்கா புலனாய்வுத்துறை யாழ் இராணுவத்தினரை எச்சரித்ததையடுத்து யாழ் நகரில் அடிக்கடி சுற்றிவளைப்புகளை படையினர் மேற்கொண்டு வருகின்றனர். திடீரென நகர்ப்பகுதியைச் சுற்றிவளைக்கும் இராணுவத்தினர், நகரில் குழுமியிருக்கும் மக்களை குறிப்பிட்ட சில பகுதிகளுக்கு அழைத்துச்சென்று, அங்கு தீவிர விசாரணைகளை மேற்கொள்ளுகின்றனர். விசாரணைகளின் முடிவில் கைது செய்யப்படும் பொது மக்கள் இராணுவ முகாமிற்குக் கொண்டு செல்லப்படுகின்றனர்.

இதேவேளை யாழ் நகரில் வீதிச் சோதனைச் சாவடிகளினூடாக செல்பவர்களும் பல விதமான இராணுவக் கெடுபிடிகளுக்கு ஆளாகிவருகின்றனர். மினிவண்டிகளில் பயணிப்பவர்கள் சோதனைச் சாவடிகளின் முன்னால் மினிவண்டியிலிருந்து இறங்கிச் செல்லவேண்டும் எனவும் பணிக்கப்பட்டுள்ளது.

## மிருசுவிலில் கொடூரம்
## படையினரின் பாலியல் வல்லுறவு-படுகொலை

தென்மராட்சி மிருசுவிலில் 26 வயதான கந்தசாமி கலாநிதி என்ற பெண்ணை கட்டாய பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்திய சிறீலங்கா சிப்பாய்கள் பின்னர் அப் பெண்ணை சுருக்கிட்டு படுகொலை செய்துள்ளனர்.

கடந்த 25ம் திகதி இடம்பெற்ற இக் கொடூரச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது, இப் பகுதியிலுள்ள முகாமொன்றின இராணுவ அதிகாரி ஒருவர் தனக்கு கீழே கடமையாற்றும் சிப்பாய்களில் ஒருவரை மணம் செய்யுமாறு இப் பெண்ணை வலியுறுத்தியுள்ளதுடன், சம்பந்தப்பட்ட அச் சிப்பாயை இப் பெண்ணின் நெற்றியில் குங்குமப் பொட்டினை வைக்குமபடியும் உத்தரவிட்டுள்ளார்.

இதனை எதிர்த்த அப் பெண் அச் சிப்பாயை தான் மணம் முடிக்க மாட்டேன் எனவும் உறுதியாக திரும்ப திரும்ப தெரிவித்ததுடன், தன்னை காப்பாற்றும் படி உரத்துச சத்தமிட்டுள்ளார். ஆத்திரமடைந்த அதிகாரி அப் பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துமாறு சிப்பாகளிடம் உத்தரவிட்டுள்ளார். இதனைத் தொடர்ந்துசமார் பத்துச் சிப்பாய்கள் அப் பெண் மீது மிருகத்தனமான பாலியல் வல்லுறவினை மேற்கொண்ட பின்னர் அவரின் கழுத்தில் சுருக்கிட்டு படுகொலை செய்துவிட்டனர்.

சடலத்தை பிரேத பரிசோதனை செய்ய அனுமதிக்காத படையினர் நடந்த சம்பவம் பற்றி ஒருவருக்கும் தெரிவிக்க கூடாதெனவும் குடும்பத்தினரை எச்சரித்துள்ளதுடன், சிறிய தொகை பணத்தினையும் கொடுக்க முன்வந்துள்ளனர்.

இச் சம்பவத்தினால் தென்மராட்சி பகுதியில் பெரும் அச்சம் நிலவி வருகிறது.


**ரியூசன் வகுப்புகள்**

குறுகிய காலத்தில் சர்வதேச முறையில்
(Intenrnational Method)
ரியூசன் கற்பிக்கப்படும்

சனி:
ஞாயிறு: 8.00 மணி தொடக்கம் 13.00 மணிவரை

திங்கள்:
செவ்வாய்: 14.00 மணி தொடக்கம் 18.00 மணி வரை

ஆசிரியர் S.S தில்லைச்சிவம்
56, Rue Riquet, 75019 Paris. M°: Riquet
Tel: 01 40 37 56 69

Pub.


## பதிவுக்கான செய்திக் குறிப்புகள்

- கொண்டாவில் [illegible] ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகிறது.
- வன்னிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் சிறுபோக நெற்செய்கைக்கு [illegible] பயிர்ச் செய்கை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.
- உரும்பிராய் பகுதியில் இடம் பெற்ற வாகன விபத்தில் [illegible] சேர்ந்த [illegible] படுகாயமடைந்து யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
- [illegible] பகுதியிலுள்ள குடிநீர் தாங்கியை புனரமைப்பதற்கு [illegible] தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது. [illegible] இப் பகுதியில் [illegible] மக்கள் பெரும் குடிநீர் தட்டுப்பாட்டினை எதிர்நோக்குகின்றனர்.
- வடமராட்சியில் [illegible] அதிகரித்துள்ளது. [illegible] காரணமாகும்.
- [illegible] நடைபெற்று முடிவடைந்துள்ளது.
- திருமலை [illegible] குழந்தை ஒன்று [illegible] மரணமடைந்துள்ளது.
- யாழ் மாவட்டத்தில் 34 ஆயிரம் குடும்பங்களுக்கு இடம்பெயர்ந்தோர் நிவாரணம் நிறுத்தப்படவேண்டுமென அரசு எடுத்துள்ள முடிவை [illegible] அம்முடிவை மீளாய்வு செய்யும்படியும் அரசை வலியுறுத்தியுள்ளனர்.
- ஆசிய அபிவிருத்தி வங்கியைச் சேர்ந்த இரு அதிகாரிகள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ளனர்.
- திருமலை அலஸ்தோட்டம் பகுதியிலுள்ள ஐநா. அகதிகள் உயர்ஸ்தானிகராலய அகதிமுகாமில் கடந்த 4 வருடங்களாக தங்கியிருந்த மக்களை குச்சவெளியில் குடியேறுமாறு பணிக்கப்பட்டுள்ளது. அகதிகள் இப் பணிப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.
- யாழ். பல்கலைக்கழக புகுமுகப் [illegible] துறையில் இரண்டாவது உப செயலகம் பருத்தித்துறை வட. இந்து மகளிர் கல்லூரியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
- தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் உயரின தென்னங்கன்றுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

# ஓரங்கட்டப்படும் நாயகர்கள் போவது எங்கே?

'அரசியலில் நிரந்தர நண்பர்களும் கிடையாது; நிரந்தர எதிரிகளும் கிடையாது' என்ற கூற்றுக்கு அமைவாக, கடந்தவாரம் சிறீலங்கா அரசியலில் சில நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. கடந்த இதழில் இப் பத்திரிகை குறிப்பிட்டது போல ஐக்கிய தேசியக் கட்சியின் பிரமுகர்களான அநுரா பண்டாரநாயக்கா, ஏ.சி.எஸ்.ஹமீட் ஆகியோர் ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி பக்கம் சாயப்போகிறார்களா? என்ற ஐயத்தினை உறுதி செய்வதுபோல ஐ.தே.கட்சியில் சில மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. ஐ.தே.க வின் செயற் குழுவின் முடிவின்படி ஹமீட், அநுரா ஆகியோர் உட்பட 'எட்டு' உறுப்பினர்கள் ஐ.தே.க வேட்பாளர்களை நியமிக்கும் சபையிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். இந் நடவடிக்கையானது கொழும்பு அரசியலில் ஒரு ஆத்திரமான சலசலப்பையும், பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஒரு அரசியல் 'நிம்மதியையும்' ஏற்படுத்தியுள்ளது.

மாகாணசபைத் தேர்தல் அறிவிப்புக்கள் வெளிவந்துள்ள இந்த வேளையில் ஐ.தே.கட்சி ஏன் இப்படியான ஒரு நடவடிக்கையை எடுத்தது? கட்சியிலிருந்து இவர்கள் வெளியேற்றப்படுவதற்கு இது ஒரு ஆரம்ப நடவடிக்கையா? என்ற கேள்வி ஆய்வுக்குரிய ஒன்றாகவும் கிளம்பியுள்ளது. முன்னர் ஐ.தே.கவின் தலைவராகவும், பிரபலமிக்க ஒரு வெளிவிவகார அமைச்சராகவும், விடுதலைப் புலிகள் - ஐ.தேக பேச்சுவார்த்தைக் காலத்தில் ஒரு தூதுவராகவும் பணியாற்றிய ஹமீட் தற்பொழுது ஐ.தே.க விலிருந்து ஓரங்கட்டப்படுவது கட்சிக்குள் தோன்றக்கூடிய பிளவு ஒன்றினையே சுட்டிக்காட்டுகின்றது.



அடுத்து என்ன?

எப்படியாவது மாகாண சபைத் தேர்தலுக்கு முன்பாக ஐ.தே.கவினை 'வலுவற்ற அரசியல் கட்சி' எனவும், வலுவற்றுப்போன உறவு கொண்டோர் கட்சியிலிருந்து அகற்றப்பட்டுவிட்டார்கள் என்பதையும் தனது வாக்கு வங்கிக்குக் காட்டுவதற்கு ரணில் குழுவினர் பெரும் பிரயத்தனம் எடுப்பதன் விளைவே இச் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் என்பதும் மறுக்கப்படக் கூடியதல்ல. ஆனால், மறுபுறத்தே ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி விரைவில் வைக்கப்பட்டுள்ள 'அரசியல் பொறி' ஒன்றிலேயே இவர்கள் சிக்கிக் கொண்டார்களா? என்பதை நோக்கினால் கூட தெளிவான முடிவினைப் பெறமுடியாமல் உள்ளது. ஏனெனில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி

**பேம்பி**

யில் அநுரா மீண்டும் இணைந்து கொள்வாரா, அமைச்சரவையில் அவருக்கு இடம் கிடைக்குமா என்று கேள்விகளை செய்தியாளர்கள் சந்திரிகாவிடம் கேட்ட பொழுது, அவர் அதற்கு தெளிவான பதிலை வழங்காது வழுக்கிச் சென்றுள்ளார்.

இந்தவேளையில் பொதுஜன ஐக்கிய முன்னணி இடையே நடைபெற்ற அரசியல்காட்சிகளை நோக்கினால், சந்திரிகாவின் பிறந்தநாள் கொண்டாட்ட கலகலப்புகளை கொழும்புப் பத்திரிகைகளுக்கு சில சுவாரசியமான விசயங்களை வழங்கியுள்ளன. தனது 53 வது பிறந்தநாளை கடந்த வாரம் கொண்டாடிய சந்திரிகா, அவ் விழாவினை தனது தாயார், சகோதரி சுனேத்திரா, தனக்கு நெருங்கிய மூன்று அமைச்சர்கள் உட்பட சில பிரமுகர்களுடனேயே கொண்டாடியிருந்தார். வருகைதந்த பிரமுகர்களுள் சந்திரிகாவின் செய்தித் தொடர்பு ஆலோசகர் சனத் குணதிலகாவும் ஒருவராவார். சந்திரிகாவின் தனிப்பட்ட வாழ்வில் சனத் குணதிலகாவின் 'நெருக்கம்' பற்றி கொழும்புப் பத்திரிகைகள் எப்பொழுதுமே ஒரு 'பிடி' வைத்து செய்திகளைத் தருவதுதான் வழக்கம்.

இம்முறை அப் 'பிடி' மேலும் இறுகியுள்ளது. சந்திரிகாவின் பிறந்த நாளுக்காக சனத் குணதிலகா சிறியதொரு விருந்தினை ஒழுங்கு செய்திருந்தார். அவ் விழாவிற்கு சந்திரிகா வருவார் என யாரும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் விருந்து களைகட்டிக்கொண்டிருந்தவேளையில் திடீரென சந்திரிகா அங்கு வருகைதந்து விருந்தில் பங்கெடுத்துக்கொண்டார். நள்ளிரவு பன்னிரண்டு மணியளவில் சந்திரிகாவை எல்லோரும் வாழ்த்திய பொழுது, சனத் குணதிலகா சந்திரிகாவின் கன்னத்தில் முத்தமிட்டு வாழ்த்து தெரிவித்த போது கூட்டத்தின் விழிகள் 'அகல' விரிந்தன. நிலைமையை சமாளிக்க அரச ஊடகப் பிரமுகர் ஒருவர் முந்திக்கொண்டு, ஜனாதிபதியை அரச ஊழியர்கள் இவ்விதம் வாழ்த்துவது நல்ல பண்பாடு என அச் சம்பவத்தை 'சாதாரணமாக்கி' விட்டார்.

> மாகாணசபை அரசியலமைப்பு சட்டமானது, ராஜீவ் — ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தின் மூலமாக மாற்றியமைக்கப்பட்ட 13ம் அரசியலமைப்பு திருத்தத்தினூடாக கொண்டு வரப்பட்டதாகும். எனவே மாகாணசபைத் தேர்தலை அரசியலமைப்புச் சட்டவிதிகளின் கீழ் நடாத்த முடியாது.

பிறந்தநாள் கொண்டாட்டங்களை தொடர்ந்து மீண்டும் மாகாணசபை தேர்தல் தொடர்பான விவாதங்கள், அலசல்கள், சட்டப்புத்தகப் புரட்டல்கள் எல்லாவற்றிலும் அரசதரப்பு ஈடுபட்டது. வேட்பு மனுக்களை ஏற்றுக்கொண்ட பின்னர், அவசரகால சட்ட விதிகளின்படி தேர்தலை பின்போட வேண்டும் என்ற வாதம் அரசிடையே வலுத்துவருகிறது. ஆனால் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தையோ தேர்தலும் வேண்டாம் வேட்புமனுவும் வேண்டாம் என்ற நிலையிலேயே தொடர்ந்தும் இருக்கிறார் என்கின்றனர்.

தேர்தல் வந்தால் வாக்குச்சாவடி ஒவ்வொன்றிற்கும் தலா இரண்டு பொலிசார் வீதம் 5937 வாக்குச் சாவடிகளுக்கும் பாதுகாப்பு வழங்க பொலிசாருக்கு நான் எங்கே போவேன் என ரத்வத்தை கூற, சந்திரிகாவுக்கும், ரத்வத்தைக்கும் இடையே



தலைவிதியான தேர்தல்

வாதப் பிரதிவாதங்கள் எழுந்தன. வேட்புமனுக்களை ஏற்காது தேர்தலை பின்போடுமாறு ரத்வத்தை அழுத்தமாக கூற, அதனை மறுதலித்த சந்திரிகா, வேண்டுமானால் வேட்பு மனுக்களை ஏற்றுக்கொண்ட பின்னர் தேர்தலை தள்ளிப்போட முடிவு செய்யலாம் என்று விவாதம் சூடானது. இருவரின் விவாதங்களையும் அமைச்சர்கள் மௌனமாக செவிமடுத்துக் கொண்டிருந்தனர். பேராசிரியர் பீரிஸ் இவர்களுக்கு இடையில் புகுந்து நிலைமையை முடிவுக்கு கொண்டுவர பெரும் பிரயத்தனப்பட்டார். இக் கூட்டத்தைப் பற்றி குறிப்பிட்ட அமைச்சர் ஒருவர், இரண்டு எரிமலைகள் வெடித்துச் சிதறின என வர்ணித்துள்ளார்.

மாகாணசபைத் தேர்தல்கள் நடாத்துவதில் பெரும் சட்டப் பிரச்சினையை அரசு நோக்குவதற்கு காரணம் இல்லாமலில்லை. ஏனெனில் மாகாணசபை அரசியலமைப்பு சட்டமானது, ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தின் மூலமாக மாற்றியமைக்கப்பட்ட 13ம் அரசியலமைப்பு திருத்தத்தினூடாக கொண்டு வரப்பட்டதாகும். எனவே மாகாணசபைத் தேர்தலை அரசியலமைப்புச் சட்டவிதிகளின் கீழ் நடாத்த முடியாது. மாறாக மாகாணசபை தேர்தல் சட்ட விதிகளினூடாகவே நடாத்த முடியும். எனவே இந்தத் தேர்தல் விதியில் அவசரகால சட்ட விதிகளுக்கு அமைய தேர்தலை தள்ளிப்போட அனுமதி இருப்பதால் அரசு அதனை ஒரு துருப்பாக இன்னும் பொழுதும் நம்பியுள்ளது. இந்த நம்பிக்கையை ஐ.தே.கவினர் எவ்வளவு தூரம் சிதைப்பார்கள் என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

## குசும்புச் சித்தர் செப்பல்கள்

சி[illegible]

• • •

ப[illegible]

• • •

அ[illegible]

[illegible]

• • •

நா[illegible] சம்பந்தமானவர் [illegible]

• • •

க[illegible]

• • •

கோ[illegible]

• • •

யா[illegible] 40 [illegible]

• • •

க[illegible]


## ரவி வாகனசேவை



உங்கள் அனைத்து
வாகனத் தேவைகளுக்கும்
நீங்கள்
தொடர்புகொள்ள
வேண்டியது
தொலைபேசி:
0148765190 அல்லது
0607622689

# போர் இயலை புதிதாக புகட்டும் தமிழீழ போர்க்களம்

சிறீலங்கா, தமிழீழம் மேல் போர் தொடுத்து இரண்டு தசாப்தங்கள் முடிந்து விட்டன. அன்று அந்த இராணுவத்தை சிறு சிறு கெரில்லாத் தாக்குதல்கள் மூலம் சந்தித்த தமிழீழ விடுதலைப்புலிகள், இன்று பல படைப்பிரிவுகளைக் கொண்டு உலகின் மிகப் பெரும் கெரில்லா விடுதலை இராணுவமாக மாற்றம் பெற்றுள்ளார்கள்.

இந்த 20 வருட இடைவெளியில் இரண்டு தேச இராணுவங்களுடன் யுத்தம் புரிந்துள்ள விடுதலைப்புலிகள், இன்று சிறீலங்கா இராணுவத்தை மிகவும் உக்கிரமான நிலையில் நின்று எதிர்த்து வருகிறார்கள். இதே வேளை விடுதலைப் புலிகளுக்கெதிரான யுத்தத்தில் சிறீலங்கா அரசானது தனது சகல வளங்களையும் பயன்படுத்தி வருகின்றது. தனது வருடாந்த பாதுகாப்பு செலவினத்தை பல ஆயிரம் மடங்குகளாக அதிகரித்தது. பல ஆயிரம் கோடி பெறுமதியான ஆயுத தளபாடங்களை வாங்கிக் குவித்தது. வெளிநாடுகள் பலவற்றிலிருந்தும் யுத்த அதிகாரிகளும், பயிற்சியாளர்களும் சிறீலங்கா வந்து இராணுவத்துக்கு பயிற்சியளித்தார்கள். மிக நவீன இராணுவத் தொழில் நுட்பங்களை பயன்படுத்தும் பல நாடுகள் சிறீலங்காவின் உதவிக்கு வந்தார்கள். ஆனால் எல்லா தரப்பிலிருந்தும் விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தில் அதனால் வெற்றிகளை சம்பாதிக்கமுடியாது போகின்றது.

சிறீலங்காவின் இராணுவம் வீழ்ச்சி நிலையில் இறங்கிக் கொண்டிருக்கும் வேளை விடுதலைப்புலிகள் அதற்கு எதிர் மாறாக வளர்ச்சி நிலையைத் தொட்டுள்ளார்கள். விடுதலைப் புலிகளின் வளர்ச்சியானது ஈழப்போர் மூன்றின் போதே மிகத்துரிதமாக ஏற்பட்டது என்பதை மறுக்க முடியாது. சந்திரிகா குமாரணதுங்க தலைமையிலான மக்கள் முன்னணி அரசின் மிகப்பாரிய யுத்த முன்னெடுப்புத்தான் பிரதான காரணம் என்பதையும் மறுக்கமுடியாது.

சிறீலங்காவின் விமானங்களும், கப்பல்களும் மிக அதிகமான அளவில் அழிக்கப்பட்டதும் தென்னிலங்கையின் அதன் பொருளாதார வளங்கள் தாக்கப்பட்டதும் இந்த மக்கள் முன்னணி அரசின் காலத்தில் தான். விடுதலைப் புலிகளின் வளர்ச்சிக்கான அடிக்கல்லை இட்டது 'சூரியக் கதிர்' தான் எனலாம். அதாவது யாழ் குடாநாட்டிலிருந்து விடுதலைப்புலிகளின் பலம் சிதைவடைந்தது என்று நம்பப்பட்டது. ஆனாலும் வன்னிப் பெரும் நிலப்பகுதியில் மீள ஒழுங்கிணைக்கப்பட்ட பலத்துடன் தென்தமிழீழம் விடுதலைப்புலிகளிடம் வந்து சேர்ந்தது. ஆனாலும் சிறீலங்கா இராணுவம், எதிரி வசமுள்ள ஒரு நகரத்தையோ அல்லது ஒரு பிரதேசத்தையோ கைப்பற்ற முனைவது போன்றதொரு பாரிய இராணுவ நகர்வை வன்னிப் பெருநிலப் பகுதியில் பாதை திறப்பிற்காக ஆரம்பித்தது.



**சிறீலங்காவின் இராணுவம் வீழ்ச்சி நிலையில் இறங்கிக்கொண்டிருக்கும் வேளை விடுதலைப்புலிகள் அதற்கு எதிர் மாறாக வளர்ச்சி நிலையைத் தொட்டுள்ளார்கள். விடுதலைப் புலிகளின் வளர்ச்சியானது ஈழப்போர் மூன்றின் போதே மிகத்துரிதமாக ஏற்பட்டது என்பதை மறுக்க முடியாது. சந்திரிகா குமாரணதுங்க தலைமையிலான மக்கள் முன்னணி அரசின் மிகப்பாரிய யுத்த முன்னெடுப்புத்தான் பிரதான காரணம் என்பதையும் மறுக்கமுடியாது.**

சிறீலங்கா கடந்த வருடம் ஆரம்பித்த பாதை திறப்பிற்கான ஜெயசிக்குறுய் இன்றுவரை பல கட்டங்களாக தொடர்ந்து கொண்டிருக்கின்றது. சூரியக் கதிரின் மூலம் யாழ் குடாவை சிறீலங்கா கைப்பற்றிக்கொண்ட போது போர்த்துறையில் அனுபவம் மிகுந்த படைப்பிரிவுகளும் இராணுவத்தினரும் அங்கு முடக்கப்பட்டார்கள். அவ்வேளை விடுதலைப்புலிகள் வன்னிப் பெருநிலப் பரப்பில் பரவத் தொடங்கிய போது தான் சிறீலங்கா தான் புரிந்த பெரும் தவறை உணரத் தொடங்கியது. எத்தனையோ தளபதிகள் வன்னியில் முதலில் இராணுவ நகர்வை ஆரம்பித்து பின் யாழ் குடாவில் தொடரலாம் என ஆலோசனை கூறிய போதும் இராணுவத்தலைமை தனது சுயகௌரவத்திற்காக யாழ் குடாவில் உள்ள விடுதலைப்புலிகளை தோற்கடித்தால் அவர்களது மனோ நிலை குன்றிவிடும் பின்னர், மிக இலகுவாக பெருநிலப் பகுதியில் தாக்குதல் நடத்தி விடுதலைப் புலிகளை முழுமையாக தோற்கடிக்கலாம் எனக் கூறியது.

சிறீலங்கா அரசு அப்படியான நம்பிக்கையை வைத்திருந்ததில் உண்மையும் இல்லாமலில்லை. விடுதலைப் புலிகள் அன்று வன்னிப் பகுதியில் முகாம்களை அமைத்திருந்தனர். ஆனாலும் அவர்களது அதிகரித்த பலம் யாழ்குடாவிலேயே செறிந்திருந்தது. ஆனால் யாழ் குடாவில் இராணுவம் தாக்குதல்களை பலப்படுத்திய போது விடுதலைப்புலிகள் தமது படைப்பலத்தை தந்திரோபாயமான முறையில் வேறு பிரதேசத்திற்கு மாற்றிக்கொண்டார்கள். இதனை சிறீலங்கா அன்று அறிந்திருக்கவில்லை. 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கை முடிவுற்று யாழ் குடாவில் சிறீலங்கா படைகள் பரவி நடமாடியபோது, ஒரு இராணுவ ஆய்வாளர், 'சிறீலங்கா அரசு தற்போது வெற்றி பெற்றுள்ளது என்னவோ உண்மைதான். ஆனால் தாம் என்ன இலக்கு வைத்து இந்த இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தார்களோ, அதில் படுதோல்வியை சந்தித்துள்ளார்கள். யாழ் குடாவை எமது இராணுவம் கைப்பற்றிய போது விடுதலைப் புலிகளின் ஆயுத பலத்தையும், ஆட்பலத்தையும், அழித்தலையே முக்கிய இலக்காக கொண்டிருந்தது. ஆனால் அந்த இரண்டுமே சாத்தியப்படவில்லை. யாழ் குடாவை இராணுவம் கைப்பற்றிவிட்டாலும் இன்று கூட விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்றியதாக பெருந்தொகை ஆயுதங்களையோ, அல்லது கொல்லப்பட்ட விடுதலைப்புலிகளின் எண்ணிக்கையையோ, அறிந்துகொள்ள முடியவில்லை. காரணம் செய்தித் தணிக்கையை அமுல் செய்து, தான் விரும்பும் செய்திகளை மாத்திரம் அது தருகிறது. ஆனால் இன்று யாழ் குடாவில் எமது இராணுவம் பெற்றுள்ள வெற்றி திருப்தியானது அல்ல. இனி வன்னிப் பெருநிலப் பரப்பில் ஏற்படப்போகும் பெரும் யுத்தமே அதை நிரூபிக்கும்' எனக் கூறியிருந்தார். அந்தக் கூற்றின் உண்மை நிலையை இன்று சிறீலங்கா உணர்கிறது.

**ஆனால் தாம் என்ன இலக்கு வைத்து இந்த இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தார்களோ, அதில் படுதோல்வியை சந்தித்துள்ளார்கள். யாழ் குடாவை எமது இராணுவம் கைப்பற்றிய போது விடுதலைப்புலிகளின் ஆயுத பலத்தையும், ஆட்பலத்தையும், அழித்தலையே முக்கிய இலக்காக கொண்டிருந்தது. ஆனால் அந்த இரண்டுமே சாத்தியப்படவில்லை.**

யாழ் குடாவில் இருந்து புலிகளை வெளியேற்றி விட்டோம். இனி வன்னிக்காடுகளுக்குள் இருக்கும் அவர்களை தோற்கடிக்கும் யுத்தத்தை ஆரம்பிப்போம் என, தொடர்ந்து இரண்டு பகுதிகளில் இராணுவ நகர்வுகளை ஆரம்பித்தது. கிளிநொச்சிப் பகுதியில் சத்ஜெயவின் மூலமும், வவுனியா மன்னார் கரையோர எடிபலவின் மூலமும், விடுதலைப் புலிகளை வன்னிப் பகுதிக்குள் தனிமைப்படுத்தி அதன் பின் பாதை திறப்பு எனப்படும் ஒரு நகர்வின் மூலம், அவர்களை யுத்தத்திற்கு இழுத்து முழுமையாக தோற்கடிக்கும் திட்டத்தினை அது மேற்கொண்டது. ஆரம்பத்தில் இராணுவ நகர்வு ஆரம்பமானபோது அது தனது குறிக்கோள் நிறைவேறும் என நம்பியது. ஆனால் அடுத்து வந்த மாதங்கள் ஜெயசிக்குறுயில் சிக்கல்களையும், தாம் எவ்வளவு தூரம் விடுதலைப்புலிகளை குறைந்து மதிப்பிட்டுள்ளோம் என்பதையும், சிங்கள இராணுவத் தலைமையை உணர வைத்தது.

இந்த ஜெயசிக்குறுய் நடவடிக்கைக்காக யாழ் குடாவிலிருந்த அனுபவம் மிக்க இராணுவ அணிகள் வன்னிக்கு நகர்த்தப்பட்டன. போர்முனையில் விடுதலைப்புலிகளின் தொடர்ந்த மாறுபாடுகளைக் கொண்ட வீரத்திரமான இராணுவ நகர்வுகள், அங்கு நிலைகொண்டிருந்த இராணுவத்திற்கு பெருந்த உயிர்ச் சேதத்தை உண்டுபண்ணியது. தாம் எதிர்பார்த்திராத பகுதிகளில் இருந்தெல்லாம் விடுதலைப்புலிகள் தாக்கத் தொடங்கியதால், இராணுவத்திற்கு என்ன செய்வதென்று புரியவில்லை. சிறிது தூரம் முன்னேறியிருந்தால் அன்று சூரியக்கதிர் நடவடிக்கைபோல் திரும்பி ஓடிவிடலாம். ஆனால் நாட்டு மக்களுக்கு பெரும் நம்பிக்கைகளை ஏற்படுத்தி பல கிலோமீற்றர்கள் தூரம் நகர்ந்துவிட்டது.

இனி திரும்பிச்செல்ல முடியாது. எப்படியாவது முன்னோக்கித்தான் செல்ல வேண்டும் என்ற இக்கட்டான நிலையில் 'ஜெயசிக்குறுய்' தள்ளாடிக் கொண்டிருந்தது.

(இன்னும் வரும்)

### போர்முனை ஆய்வு



பண்ணையார்

# ஜெயலலிதா-பெர்னாண்டஸ் சந்திப்பு!

நாடாளுமன்ற கூட்டத் தொடரை அ.தி.மு.க. எம்.பிக்கள் புறக்கணித்ததைத் அடுத்து, மத்திய அரசுக்கு அ.தி.மு.க. ஆதரவு



தொடருமா? அமைச்சரவையிலிருந்து அ.தி.மு.க. விலகுமா? என்ற கேள்விகள் எழுந்தன. அ.தி.மு.க. எம்.பிக்களுடன் ஜெயலலிதா ஆலோசனை நடத்தி விட்டு முடிவை சனிக்கிழமை அறிவிப்பார் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. இந்த நிலையில் மத்திய அமைச்சர்கள் ஜோர்ஜ் பெர்னாண்டஸ், திலீப்ராய் ஆகியோர் அவரது இல்லத்தில் சனிக்கிழமை சந்தித்துப் பேசினர். முடிவை அறிய போயஸ் தோட்டத்தில் ஜெயலலிதா வீட்டின் முன்பு காலை முதலே நிருபர்களும் தனியார் தொலைக்காட்சியினரும் திரளாக கூடியிருந்தனர்.

மத்திய நிலக்கரித்துறை இணை அமைச்சர் திலீப் ராய் காலை 11 மணிக்கு ஜெயலலிதாவின் போயஸ் தோட்டத்திற்கு வந்தார். 11.30 மணிக்கு முன்னாள் அமைச்சர் பூட்டாசிங் வந்தார். பூட்டாசிங் இருக்கும் போதே மத்திய இராணுவ அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் மதியம் 12 மணிக்கு வந்தார். எவ்வித பாதுகாப்புமின்றி அவர் மட்டும் வந்திருந்தார். பிற்பகல் 2.30 மணிவரை ஜெயலலிதாவின் வீட்டில் அவர் இருந்தார். ஜெயலலிதாவுடன் இரண்டு



மணிநேர ஆலோசனையின் பின் நிருபர்களிடம் பெர்னாண்டஸ் கூறியதாவது:

ஜெயலலிதாவை சந்தித்ததில் மகிழ்ச்சி அடைகிறேன். நல்ல மதிய உணவு தந்தார். பல்வேறு பிரச்சினைகள் பற்றி ஜெயலலிதாவுடன் பேசினேன். வாஜ்பாய் அவர்களுக்கு நல்ல செய்தியை கொண்டு செல்கிறேன் என்றார்.

இதற்கு முன்னால் 9 மணிக்கு அ.தி.மு.க. எம்.பிக்களுடன் ஜெயலலிதா நடாத்திய ஆலோசனைக் கூட்டம் முடிந்திருந்தது. கூட்டத்தை முடித்துக்கொண்டு வெளியே வந்த நெடுஞ்செழியன் நிருபர்களைச் சந்தித்தார். அப்போது அவர், 'மத்தியில் பா.ஜ.க. கூட்டணி அரசுக்கு அ.தி.மு.க. அளித்து வரும் ஆதரவு தொடரும். அமைச்சர்கள் விலகல் இல்லை. வரும் திங்கள் கிழமை முதல் நாடாளுமன்றக் கூட்டத்தில் அ.தி.மு.க. உறுப்பினர்கள் கலந்து கொள்வர்' என அறிவித்தார்.

## மூப்பனார்-சோனியா ஒருங்கிணைவு நிறைவேறாத கனவு?

கடந்த சில வாரங்களாக நெருங்கி வந்த மூப்பனாரின் த.மா.கா. காங்கிரஸ் உறவுகள் தற்போது எதிரும் புதிருமாக விலகிச்





செல்ல தொடங்கியுள்ளன. தமிழகத்தில் தங்களுக்குள்ள வலிமையை வெளிப்படுத்தும் முயற்சியில் இருகட்சிகளும் தனித் தனியே மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

காங்கிரசுடன் இணைந்து செயல்பட விரும்புவதாக த.மா.கா. தலைவர் மூப்பனார் அறிவித்தார். ஆனால் தமது விருப்பத்தை அதிகார பூர்வமாக காங்கிரஸ் தலைவி சோனியாவுக்கு மூப்பனார் தெரிவிக்கவில்லை. பத்திரிகைச் செய்திகள் மூலம் அறிந்த சோனியா, ஒருங்கிணைப்பை சுலபமாக்க முயற்சி எடுக்கவில்லை.

ஒருங்கிணைப்பு திட்டம் பற்றிய ஊசலாட்டத்திற்கு, காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் சங்மாவின் கருத்து முற்றுப்புள்ளி வைத்தது. மூப்பனாரின் விருப்பத்தை தாங்கள் நிராகரிக்கவும் இல்லை ஏற்கவும் இல்லை. எவரது வருகைக்காகவும் காங்கிரஸ் காத்திருக்கவில்லை. அதே நேரத்தில் அவர் எப்போது வந்தாலும் வரவேற்போம் என்று கூறியுள்ளார் சங்மா. இந்நிலையில் காங்கிரசுடன் ஒருங்கிணைந்து செயல்பட மட்டும்தான் விருப்பம் தெரிவித்திருந்தோம்; இணைந்து விட நாங்கள் விரும்பவில்லை என த.மா.கா. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.




## காங்கிரஸ் ஆட்சியமைக்க விரும்பினால் ஜனதா தளம் ஆதரவு தரும்!

### முன்னாள் பிரதமர் அறிவிப்பு!

தற்போதைய பாரதிய ஜனதாவின் ஆட்சி அமைவதற்கு காங்கிரஸ் கட்சிதான் காரணம் என்பது அறிந்ததே. அப்போதைய ஆட்சியிலிருந்த ஜனதாதளம் அரசுக்கான ஆதரவை, காங்கிரஸ் கட்சி விலக்கிக்கொண்டதே



ஜனதா தள அரசு வீழ்வதற்கும் புதிய தேர்தல் வருவதற்கும் காரணம். ஆனால் தற்போதைய அரசியல் சூழ்நிலை, காங்கிரஸ் — ஜனதாதளம் ஆகியவற்றிற்கிடையே கூட்டணி அமைக்க வழிவகுத்துள்ளது. தற்போது ஆட்சியிலிருக்கும் பா.ஜ.கூட்டணி அரசு விரைவில் கவிழும் வாய்ப்புகள் உள்ளதாகவே அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். அந்நிலையில் இன்னொரு தேர்தலை சந்திக்க அரசியல் கட்சித் தலைவர்கள் தயாராக இல்லை. ஆதலால் மாற்று அரசொன்றை அமைப்பதிலேயே எல்லோரும் கவனம் செலுத்துகின்றனர். இந்நிலையில்தான் முன்னாள் பிரதமர் ஐ.கே. குஜ்ரால் தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

அவர் கூறியுள்ளதாவது: பாரதிய ஜனதாவுக்கு அடுத்தபடியாக பெரிய கட்சி காங்கிரஸ்தான்.

ஆட்சி அமைக்க அது முயல்வதில் தவறு ஏதும் இல்லை. ஆட்சி அமைக்க முயற்சிப்பது அரசியலமைப்பு சட்டத்தின் படி அதன் கடமையாகும். அப்படி காங்கிரஸ் ஆட்சி அமைக்கும் பட்சத்தில் அதற்கு ஜனதா தளம் ஆதரவு தரும் என்றார் அவர்.

ஏற்கனவே இரு இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளும், லாலு — முலாயம் சிங் அமைத்துள்ள கூட்டணியும் தமது ஆதரவுக் கருத்தை தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## சோனியா அதிகாரத்திற்கு வந்த பின்பும் தமிழ்நாட்டில் உட்பூசல் நீங்கவில்லையாம்!

சோனியாகாந்தி தலைவியான பின்பும் கட்சியில் ஒழுங்கீனமும் கட்டுப்பாடின்மையும் நிலவுவதாக தமிழ்நாடு காங்கிரஸ் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கட்சியிலுள்ள குமரி அனந்தன், பீ.வீ, அன்பரசு, திண்டிவனம் ராமமூர்த்தி ஆகியோர் தன்னிச்சையாக செயல்பட்டு வருவதாகவும் கட்சியின் விரோத போராட்டங்களிலே அவர்கள் கலந்து கொள்வதில்லை எனவும் அவர்கள், ஒவ்வொருமுறை டெல்லி சென்றுவிட்டு வரும் போதும் தமிழக தலைமைக்கு எதிராக அறிக்கை விடுவதும், தலைமை மாற்றப்படும் என்பது போன்ற செய்திகளை பரப்புவதும் வழக்கமாகிவிட்டது. அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி பலமுறை வலியுறுத்தியும் அகில இந்திய தலைமை கண்டுகொள்ளவில்லை. இந்நிலை தொடர்வது தொண்டர்களிடையே விரக்தியை ஏற்படுத்தியுள்ளது.

சோனியா தலைவராக வந்த போது உண்மையான தொண்டர்களுக்கு முன்னுரிமை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் மாற்றம் எதுவும் நிகழவில்லை என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஜெயலலிதாவின் உடன்பிறவா சகோதரியின் உறவினர்களும் பொலிஸ் வலையில்!

ஜெயலலிதாவின் உடன்பிறவா சகோதரி சசிகலாவின் உறவினர் எஸ். ஆர்.பாஸ்கரன். இவர் சென்னையில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் நகைப் பெட்டகங்கள் பராமரிக்கும் பணியில் உள்ளார்.

வருமானத்தை விட கூடுதலாக சொத்து சேர்த்ததாக சி.பி.ஐ. இவர்மீது வழக்கு பதிவு செய்துள்ளது. இவ்வழக்கின் விசாரணையின்போது தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியில் இவருக்கு பாதுகாப்பு பெட்டகம் இருப்பது தெரியவந்தது. அதனைத் திறந்து பார்த்த போது வெளிநாட்டு முத்திரைகள் பதிக்கப்பட்ட 60 தங்கக் கட்டிகள் இருந்தன. இவை பறிமுதல் செய்யப்பட்டு சி.பி.ஐ. வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றத்தில் அதிகாரிகளால் ஒப்படைக்கப்பட்டன.

பாஸ்கரனை மேலும் விசாரித்ததில் சென்னையில் மேலும் வீடுகள் இருப்பது தெரியவந்துள்ளன. இவரது வாக்குமூலங்கள் ஜெயலலிதா — சசிகலா வழக்குகளில் முக்கிய இடத்தைப் பெறும் என நம்பப்படுகின்றது.

**உங்கள் ஈழமுரசில்**

அடுத்த வாரம்.....

*** மாதம் ஒரு மனிதர்**

கனேடிய அணுசக்தித்துறை விஞ்ஞானி; ஈழத் தமிழர், பேராசிரியர் இலகுப்பிள்ளை அவர்களுடைய பேட்டி.

*** சிட்னி - கொழும்பு - வன்னி?**

விறுவிறுப்பான புதிய பயணத் தொடர்.

## எதிரும் புதிருமான கருணாநிதி - வைகோ ஒரே மேடையில் தோன்றுகிறார்கள்!

அரசியலில் ஒன்றாக இருந்து பின்னர் பிரிந்து இரு துருவங்களான கலைஞர் கருணாநிதியும், வைகோவும் ஒரேமேடையில் தோன்றுவதற்கு வாய்ப்பு கிட்டியுள்ளது.

முன்னாள் முதல்வர் குமாரசாமி ராஜா நூற்றாண்டு விழாவில் இருவரும் பங்கேற்பதாக விழா அழைப்பிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது. கருணாநிதியும் வைகோவும் மீண்டும் இணைவார்கள் என்ற அரசியல் ஊகங்கள் வெளிவந்திருக்கும் நிலையில் இச்சந்திப்பு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது.



# இந்திய நாடாளுமன்றத்தின் கூட்டத்தொடர் ஆரம்பம்

## அ.தி.மு.க புறக்கணிப்பு! வைகோ - வாழப்பாடி பங்கேற்பு!

இந்திய நாடாளுமன்றத்தின் நிதிநிலை அறிக்கை கூட்டத்தின் இரண்டாவது கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாகின்றது. இந்தக் கூட்டத்தொடர் இந்திய அரசியலின் பரபரப்பான மாற்றங்களுக்கு வழிவகுக்கும் என்று அரசியல் அவதானிகள் எதிர்பார்க்கின்றனர். எல்லாத் துறைகளிலும் அரசின் செயல்பாடு ஏமாற்றம் அளிப்பதாக கூறி, எதிர்க்கட்சிகள் தாக்குதல் தொடுக்கத் தயாராக இருக்கின்றன. இந்நிலையில் அரசாளும் பாரதிய ஜனதா கூட்டணியில் அங்கம் வகிக்கும் அதிமுக இக்கூட்டத்தொடரில் பங்கேற்க மாட்டார்கள் என்று தெரிகிறது. சென்னையில் 4, 5-ம் திகதிகளில் ஜெயலலிதாவுடன் நடைபெறும் கட்சிக் கூட்டத்திற்கு பிறகே மக்களவைத் தொடரில் அதிமுகவின் 18 எம்.பிக்களும் சென்னையில் முகாமிட்டுள்ளனர்.

ஆனால் அதிமுக கூட்டணியை சேர்ந்த, தமிழக ராஜீவ் காங்கிரஸ் தலைவரும், மத்திய அமைச்சருமான வாழப்பாடி





ராமமூர்த்தி, மதிமுக பொதுச் செயலாளர் வைகோ ஆகியோர் நாடாளுமன்ற கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்கு டெல்லி சென்றுள்ளனர். ஆனால் பாட்டாளி மக்கள் கட்சி டெல்லி செல்லவில்லை.

நாடாளுமன்ற கூட்டத்தொடரில் அதிமுக பங்கேற்பதில் காட்டும் தயக்கமும், முடிவெடுப்பதில் காட்டும் காலதாமதமும் 'தமிழகத்திற்கு தலைகுனிவு' என தமிழ்நாட்டில் இருந்து வெளிவரும் தமிழ் நாளிதழ்களில் ஒன்றான தினமணி ஆசிரியத் தலையங்கம் எழுதியுள்ளது.

## கோடம்பாக்கம் கனவுத் தொழிற்சாலை நொடிந்து விட்டதாம் தமிழ்ச் சினிமா உலகம் சென்னையில் ஊர்வலம்!

தமிழ்த் திரையுலகில் நாளுக்கு நாள் புதிய படங்கள் தயாரிப்பது குறைந்து வருகிறது. வெளிவந்து வரும் படங்களிலும் ஒன்றிரண்டு தவிர மற்ற படங்கள் தோல்வி அடைகின்றன. இதற்கு திருட்டு வீடியோ, வி.சி.டி. என திரையுலகத்தினர் கூறியுள்ளனர். திருட்டு வீடியோ, வி.சி.டி.யை ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அவற்றை வைத்திருப்பவர்களை குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது செய்து மூன்று ஆண்டு தண்டனை வழங்க வேண்டும். வீடியோ தியேட்டர் இருந்த வெளி அரங்குகளுக்கு அனுமதி வழங்கக்கூடாது. கேளிக்கை வரி சலுகை அளிக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன் வைத்து தமிழ் திரையுலகினர் ஒன்றாக திரண்டு சென்னையில் ஊர்வலம் செல்கின்றனர். தேனாம்பேட்டை காங்கிரஸ் திடலில் இருந்து ஊர்வலம் தொடங்குகின்றது. ஊர்வலத்தினை பழம் பெரும் நடிகர் சிவாஜி கணேசன் தொடக்கி வைக்கிறார். இப்பேரணியை ஒட்டி திரைப்பட படப்பிடிப்புகள் நிறுத்தப்படுகின்றன. இது தொடர்பாக ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பாரதிராஜா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

என் இனிய தமிழ் மக்களே! தமிழ்த் திரையுலகம் காலந்தோறும் பல சோதனைகளை சந்தித்து வந்துள்ளது. ஆனால் தமிழ் திரையுலகு இப்போது சந்தித்து வரும் சோதனை அதன் ஆணிவேரையே அசைத்து விடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்துகின்றது. திருட்டு வீடியோ என்னும் பெரும் நோய் காரணமாக தமிழ்த் திரையுலகம் திரண்டு ஒருமித்த கருத்தோடு ஊர்வலம் போகிறது. திரையுலகம் சமூக வாழ்வோடும் பொருளாதாரத்தோடும் சம்பந்தப்பட்டிருப்பதால் இது பொதுமக்கள் பிரச்சினை எனவும் கருதி பொது மக்களும் இந்த நியாயத்திற்கு துணை நிற்க வேண்டும் என கேட்டுள்ளார்.

## பாரம்பரிய மருத்துவ முறைக்கு ஆதரவு! இந்திய பிரதமர் வாஜ்பாய் அறிவிப்பு

டெல்லியில் அகில இந்திய ஆயுர்வேத மாநாடு நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு மாநாட்டை இந்தியப் பிரதமர் தொடக்கி வைத்தார். தொடக்க உரையில் அவர் தெரிவித்ததாவது:

இந்திய மருத்துவ முறைகளை ஊக்குவிக்க வேண்டும் என்ற எனது எண்ணம் நிச்சயம் செயல் வடிவம் பெறும். ஆயுர்வேதத்துக்கு சிறந்த எதிர்காலம் உள்ளது. அனைவருக்கும் மருத்துவ வசதி என்ற இலக்கை வைத்துள்ளோம். இந்திய மருத்துவ முறைகளை ஊக்குவிக்காமல் இதை எட்ட முடியாது. ஆயுர்வேத முறையில் நாடி பிடித்து பார்த்து உடலில் உள்ள நோயினை அறிகிறார்கள். ஆங்கில மருத்துவ முறையில் பல வேறு பரிசோதனைகள் நடத்தி தெரிந்து கொள்வதை இவர்கள் நாடியிலேயே அறிவது பாராட்டத்தக்கது.

ஆயுர்வேதம், சித்தர் போன்ற இந்திய மருத்துவ துறைகளை ஊக்குவிக்க தனி அமைச்சர் நியமிக்கப்படுவார் என்றும் அவர் தெரிவித்தார்.


# ஐரோப்பா தழுவிய குறும்படப் போட்டி = 1998

**கலைஞர்களே !**

உங்கள் கமராக் கண்களைத் திறவுங்கள், உங்கள் முன்னால் விரிந்து கிடக்கும் எம்மவர் பற்றிய பிரச்சினைகளை படமாக்கிக் கொள்ளுங்கள். சமூகத்தைப் பற்றிய பார்வையும் எதிர்காலம் பற்றிய தெளிவும் உங்கள் குறும்படத்தில் பிரதிபலிக்கட்டும்.

**குறும்படப் போட்டியில் பங்குபற்றுவோருக்கான விதிமுறைகள்**

1. இவ்வருட ஜூலை மாத இறுதிப் பகுதிக்குள் போட்டியில் பங்குபற்றும் அனைவரும் தங்களது விண்ணப்பங்களை தொலைபேசி மூலமாக பதிவு செய்து கொள்ளுங்கள்
2. குறும்படங்கள் எம்மை வந்து சேரவேண்டிய இறுதித் திகதி ஒக்ரோபர் 15 நிறைவு முன்.
3. ஆக்க தளம் - புலம் பெயர் வாழ்வின் அவலங்களை வெளிப்படுத்துவதாக இருந்தால் விரும்பத்தக்கது.
4. திரைக்கதை, இசை, பாடல், தொழில்நுட்பம் யாவும் சுயமானதாக இருத்தல் வேண்டும்.
5. இப்போட்டியில் கலைக்குழுக்களாகவோ, தனிநபர்களாகவோ கலந்து கொள்ளலாம்.

**மேலதிக விபரங்களுக்கு: தமிழர் கலை பண்பாட்டுக் கழகம் - பிரான்ஸ் (01 43 68 11 42)**


## வாய் மொழிகளும் கொசுறுச் செய்திகளும்

☺ அ.தி.மு.க.விற்கும் பாரதிய ஜனதாவிற்கும் இடையே அப்படி என்ன தான் பிரச்சினை?
எந்தப் பிரச்சினையும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இங்கே மாநிலத்தில் இருக்கிற சில பேர், கருணாநிதியுடன் சேர்ந்து கொண்டு அவர் என்ன சொல்லுகிறாரோ அதைச் செய்து கொண்டிருக்கின்றனர். இதனால் பத்திரிகைகளில் வருகிற செய்திகளில் பிரச்சினைகள் வருவதாக தெரிகிறதே தவிர வேறெந்த முரண்பாடுகளும் இல்லை.

*— அ.தி.மு.க முன்னாள் தமிழக அமைச்சர், அ.தி.மு.க.வின் தலைமைப் பொருளாளர் செங்கோட்டையன் அளித்த பேட்டியில்; தமிழன் எக்ஸ்பிரஸ் 1-7 ஜூலை 98*

☺ ☺ ☺

☺ தமிழக உளவுத்துறையிலேயே 'ஷேப்' எனும் பிரிவு உள்ளது. அன்றாடம் போஸ்ட் ஆபீஸுக்குச் சென்று அங்கு வரும் நபர்களின் சந்தேகத்திற்குரியவற்றைப் பிரித்து படிப்பது இவர்களது வேலை. படித்த சுவடு தெரியாமல் மறுபடி ஒட்டிவிடுகிறார்கள். பயங்கரவாதிகளால் ஆபத்தான காரியங்கள் ஏதும் திட்டமிடப்படுகின்றதா என்று முன்கூட்டிக் கண்டுபிடிக்கவே இந்த நடவடிக்கை!
இந்த 'ஷேப்' பிரிவில் உள்ள ஒரு போலீஸ் புள்ளி, சென்னையில் திடீரென பல லட்ச ரூபாய்க்கு வீடு கட்டியிருக்கிறார். சென்னை புறநகரிலேயே இன்னொரு இடத்தில் சொத்துக்கள் வாங்கிக் குவித்திருக்கிறார்.
எது பணம்? வெளிநாடுகளில் இருந்து இங்குள்ளவர்களுக்கு வரும் டிராஃப்ட்டுகளைச் சோதனைக்கு நடுவே இவர் எடுத்துப் பதுக்கிக் கொண்டதாக குற்றச்சாட்டு! அவை பல லட்ச ரூபாய் இருக்கும். விசாரணையில் மாட்டப்போகும் அந்த போலீஸ் புள்ளி தமிழக அமைச்சர் ஒருவரிடம் புகலிடம் கேட்டு ஓடியிருக்கிறாராம்.

*— 01.07.98 ஜூனியர் விகடனில்*

☺ ☺ ☺

☺ தமிழகத்தில் தமிழ் மீடியம் வகுப்புகள் மூடப்படும் அபாயம் பற்றி....?
'தமிழ்! தமிழ்! என்று சொல்லி வந்தவர்களின், தமிழை வேகமாக சாகடிக்கும் முயற்சி. அரசைச் சொல்லி பயனில்லை. உலகத்திலேயே தாய்மொழி பேசினால் கேவலம் என்று நினைக்கும் பெருமை பெற்றவர்கள் தமிழர்கள் மட்டுமே. தாய்மொழிப் பற்று வராத வரையில் 'பெயர்ப்பலகை' என்கிற மியூசியத்தில் மட்டுமே தமிழ் வாழும்.

*— 30.06.98 தமிழன் எக்ஸ்பிரஸ் கேள்வி பதிலில்*

☺ ☺ ☺

☺ உடலும் உயிரும் ஒன்றிப்பதே காமம் என்கிற விதியை மாற்றிப் பார்க்கிறது. வேறு எதையும் பரிமாறிக் கொள்ளும் முன் உள்ளக் கிடக்கையை பரிமாறிக்கொள்ள அழைக்கிறது இந்த இன்டர்நெட் அரட்டை தொழில் நுட்பம். நிஜ உலகில் கண்டதும் காதல் வருகின்றது. சைபர் உலகில் முதலில் நீங்கள் எண்ணங்களை வெளிப்படுத்துகிறீர்கள். அதனோடு ஒத்துப் போவோரோடு உறவு மலர்கிறது. பிறகு தான் நேரம் பார்த்து நேரில் பார்க்கிறீர்கள். இங்கே கண்ணும் கண்ணும் கொள்ளையடித்தால் காதல் என்று அர்த்தமில்லை. எண்ணமும் எண்ணமும் கொள்ளையடிக்க வேண்டும்.

*- 'வலையில் விளைகள்' 01.07.98 இந்தியா டுடே கட்டுரையில்*

☺ ☺ ☺

☺ சென்னைக்கு வந்து கணினிப் பயிற்சி பெற்றதும் தொடங்கியது தான் 'தமிழ் சினிமா இன்டர்நெட்'. தொடக்கத்தில் அதிக உறுப்பினர்கள் சேரவில்லை. ஆனால் இப்போது உலகம் முழுக்க 9 இலட்சத்திற்கும் அதிகமான வீடுகளில் தமிழ் சினிமாவை பார்க்கிறார்கள். தமிழ்ப் படங்கள் நடிகர் நடிகையர் கலைஞர்கள் பற்றிய செய்திகளை படத்துடன் பார்த்து ரசிக்கிறார்கள். இதெல்லாம் தொழில் முறையென்றாலும் எனக்கென ஒரு ஆசை உண்டு. தந்தை பெரியாரின் பொன்மொழிகளை உலகமெல்லாம் இன்டர்நெட்டில் பரவச் செய்ய வேண்டும் என்பதுதான் அந்த ஆசை.

*— 'சாட் வியூ' கணனி நிறுவனத்தை சேர்ந்த பீட்டர் 05.07.98 ராணி வாரமலரில்.*

☺ ☺ ☺



மீன் புடிக்கிற கொக்கை விடமாட்டாங்க போலிருக்கே?
அதனால்தான் மீன் மிஷ்டேக் பண்ணுறதாக்கூறி மீனவை புடிப்பீங்க பண்ணச் சொல்லி - பா.ம.க தலைவர்கள் பணம் சேர்க்கிறாங்களாம்.

நன்றி: தினக்குரல்




பாகிஸ்தான்

# எனது மகன் 'விஞ்ஞானியல்ல' கணக்காளரே!

பாகிஸ்தானின் அணுசக்தி விஞ்ஞானி எனக் கூறிக் கொண்ட ஒருவர், தன்னிடம் பாகிஸ்தானின் அணுசக்தித்திட்ட இரகசியங்கள் உள்ளதாகவும், தனக்கு அரசியல் தஞ்சம் வழங்கப்பட்டால் மாத்திரமே அவைகளை அமெரிக்க அரசிடம் ஒப்படைப்பதாக அமெரிக்க அதிகாரிகளிடம் கூறியுள்ளார். ஆனால் பாகிஸ்தானில் வாழ்ந்து வரும் அவரது தந்தையோ, தனது மகன் விஞ்ஞானியே அல்ல என்றும் அவர் ஒரு நிறுவனத்தில் உதவிக் கணக்காளராகவே நான்கு வருடங்களாக கடமையாற்றினார் என்றும் கூறியுள்ளார்.

இப்திகார் சௌதாரி கான் எனும் பாகிஸ்தானியர், கடந்த வாரம் அமெரிக்காவில் அரசியல் தஞ்சம் கோரினார். அதன் போது தான் பாகிஸ்தானின் அணுசக்தி அதிகாரி என்றும், பாகிஸ்தான் இந்தியா மீது அணுசக்தி தாக்குதலொன்றை நடத்த திட்டம் தீட்டியதாகவும் அந்தக் கூட்டத்தில் தானும் கலந்துகொண்டதாகவும் கூறியுள்ளார். அத்திட்டத்தில் தனக்கு உடன்பாடில்லாத நிலையில் அதனைத் தான் எதிர்த்ததாகவும் தனது உயிருக்கு ஆபத்து என்ற நிலையில் தன்னிடமிருந்த ஆவணங்களுடன் அமெரிக்கா தப்பி வந்ததாகவும் வழக்கறிஞர் மூலம் தெரிவித்துள்ளார்.

இது இப்படியிருக்க, அவரது தந்தையான சிக்கந்தர் கான், தனது மகன் பொய்யான தகவல்களை அமெரிக்காவிற்கு வழங்கியுள்ளார். தான் அங்கு வாழ்வதற்காகவே இவ்வாறு கூறியுள்ளார். உண்மையில் தனது மகன் விஞ்ஞானம் பயிலவேயில்லை. வர்த்தகம் மாத்திரமே கற்றார் என கூறியுள்ளார். அத்துடன் அவர் உதவிக்கணக்காளராக மாதம் 120 அமெரிக்க டொலருக்கு சமமான சம்பளம் வழங்கப்பட்டு தனது நிறுவனத்தில் நான்கு வருடங்கள் கடமையாற்றினார் என ஒருவர் கூறியுள்ளார்.

இதே வேளை பாகிஸ்தானிய தகவல் அமைச்சர் முஷாஹித் ஹுசைன், கான் சட்டவிரோதமாகவே அமெரிக்காவிற்குள் நுழைந்துள்ளதாகவும், உண்மையான 'நுழைவு அனுமதிக்காக' பல்லாயிரக் கணக்கானோர் காத்திருக்க, இவர் எப்படி அந் நாட்டுக்குள் நுழைந்தார் என்பதை சம்பந்தப்பட்ட நாடுகள் விசாரிக்க வேண்டும் என்று கூறியுள்ளார். இதேவேளை பாகிஸ்தானிய வெளியுறவு அமைச்சர் கோகர் அயூப்கான், கானின் கூற்றில் சற்றும் உண்மையில்லையென்றும் பாகிஸ்தான் அப்படியான எண்ணம் எதுவும் கொண்டிருக்கவில்லையென்றும் கூறியுள்ளார்.

அமெரிக்காவில் கானுக்காக வாதாடும் வழக்கறிஞர் மைக்கல் ஷெல்ட தனது வாடிக்கையாளர் வைத்திருக்கும் ஆவணங்களை பெற்றுக்கொள்ள பல மேற்கத்தேய நாடுகள் காத்திருக்கின்றன என்றும், அவை எந்த நாடுகள் என்பதையும் கூறமறுத்துள்ளார்.

# நெருக்கடியான காலகட்டத்தை இஸ்ரேல் சந்திக்கும் - அரபுத் தலைவர்கள்

எகிப்து, ஜோர்தான், பலஸ்தீன தலைவர்கள் கடந்த ஞாயிறன்று கெய்ரோவில் கூடி பலஸ்தீன, இஸ்ரேலிய இன்றைய நிலைகுறித்து ஆராயும் மாநாடு ஒன்றில் கலந்துகொண்டனர். ஜோர்தானிய மன்னர் ஹுசைன் தனது பிரதமர் அப்துல் சலாம் அல் மஜாலி மற்றும் நீதித் துறைத் தலைவர் பயஸ் அல் தாராவுடன் கெய்ரோ மாநாட்டில் பங்குபற்றினார். அது போல் பலஸ்தீனத் தலைவர் அரபாத் தலைமையிலான குழு ஒன்றும் கலந்துகொண்டது.

இம் மாநாட்டில் எகிப்திய தலைவர் ஹொஸ்னி முபாரக்கும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலிய பலஸ்தீனிய அமைதிப் பேச்சுக்கள் கடந்த 15 மாதங்களாக தேக்க நிலையை அடைந்துள்ளன. யூதக் குடியேற்ற விஸ்தரிப்புக்கள், பலஸ்தீன தற்கொலைத் தாக்குதல்கள் மற்றும் மேற்குக் கரையில் இஸ்ரேலிய படைகளின் அதிகரித்த நடமாட்டம் போன்றவைகள் இரு தரப்பினரிடையேயும் காழ்ப்புணர்வுகளைத் தோற்றுவதற்கு காரணமாக அமைந்தன. அண்மையில் இப்பேச்சுக்களை மீண்டும் ஆரம்பித்த அமெரிக்கா, இஸ்ரேல் மேற்குக்கரைப் பகுதியில் மேலும் 13 வீதமான பிரதேசத்திலிருந்து விலகிக்கொள்ள வேண்டும் என்றும், இதற்குப் பதிலாக பலஸ்தீனியர்கள் முஸ்லீம் கெரில்லாக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை வலுப்படுத்துவார்கள் எனவும்



கூறியது. இத் திட்டத்தை பலஸ்தீனியர்கள் ஏற்றுக்கொண்டாலும், இஸ்ரேலிய தரப்பு இதை நிராகரித்துவிட்டது.

இஸ்ரேலுடன் அமைதி ஒப்பந்தங்களில் இதுவரை எகிப்தும் ஜோர்தானுமே கைச்சாத்திட்டுள்ளன. நீண்டகாலமாக இழுபறி நிலையிலிருக்கும் அமைதிப் பேச்சுக்களில் இதேநிலை தொடருமானால் மீண்டும் நெருக்கடியான கால கட்டத்தினை இஸ்ரேல் சந்திக்கவேண்டி வரும் என அரபுத்தலைவர்கள் எச்சரித்துள்ளனர்.

கெய்ரோ மாநாட்டில் இஸ்ரேலிய அரசின் ஜெருசலம் விரிவாக்கத் திட்டம் எதிர்க்கப்பட்டது. எம்மால் முடிந்தவரை இந் திட்டத்தை ரத்துச் செய்யும் செயற்பாடுகளை மேற்கொள்ளுவோம் என, இத் திட்டத்தை தொடர்ந்து எதிர்த்து வரும் பலஸ்தீனத் தலைவர்கள் கூறிவருகின்றனர்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# அமெரிக்கா மன்னிப்புக் கேட்க வேண்டும் - ஈரான்

ஈரான் விமான நிறுவனத்திற்கு சொந்தமான எயார் பஸ் ரக பயணிகள் விமானம் 290 பயணிகளுடன் வளைகுடாவிற்கு மேலாக பறந்துகொண்டிருந்த போது அமெரிக்க போர்க்கப்பல் ஒன்று மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதல் ஒன்றின் மூலம் வெடித்துச் சிதறியது. அதில் பயணம் செய்த அனைவரும் கொல்லப்பட்டனர்.

இது நடந்தது 1988ம் ஆண்டு யூலை 3ம் திகதி. அதன் பத்தாவது நினைவுநாள் கடந்த வெள்ளியன்று நினைவுகூரப்பட்ட போது, ஈரான் தலைவர்கள், அமெரிக்கா தான் மேற்கொண்ட தவறுக்காக மன்னிப்புக் கோர வேண்டும் என கூறினார்கள். அமெரிக்க அரசானது ஈரானிய மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் அது ஈரானிய அரசிடமும், மக்களிடமும் உத்தியோகபூர்வமாக மன்னிப்புக் கோரவேண்டும் என ஈரானிய ஆயுதப் படைகளின் கமாண்டர் பிரிவு அதிகாரி மெஹ்தி சபர் தெரிவித்தார்.

அவ் விமானம் சுட்டுவீழ்த்தப்பட்ட ஓர்மோஸ் நீரிணைப் பகுதிக்கு விபத்தில் கொல்லப்பட்ட பயணிகளின் 80 உறவினர்கள் மற்றும் அரச அதிகாரிகள் போன்றோரைக் கொண்ட ஈரானின் ஓர் கப்பல், சென்றது. அங்கு கொல்லப்பட்டவர்களின் நினைவாக மலர்கள் தூவப்பட்டன. அக் கப்பலில் சென்றவர்கள் அணிந்திருந்த உடையில் அமெரிக்க சுதந்திரச் சிலை துப்பாக்கியால் விமானத்தை சுட்டுவீழ்த்துவது போன்ற படம் பொறிக்கப்பட்டிருந்தது. நிகழ்வின் போது அமெரிக்காவின் மரணம் என்பது போன்ற பாடல்களும் பாடப்பட்டன.

விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட போது பெற்றோரை இழந்த 13 வயதுடைய ஒரு சிறுமி அங்கிருந்த பத்திரிகையாளரிடம், 'அமெரிக்கர்களே ஏன் எம்மை மதிக்க மறுக்கிறீர்கள். என்னைப் பற்றி கவலைப்படாதீர்கள். ஆனால் கொல்லாதீர்கள் பலஸ்தீனியர்களிடம் இரக்கம் காட்டுங்கள்' எனக் கோரினார்.

சுட்டுவீழ்த்தப்பட்ட விமானத்தில் பயணம் செய்தவர்களில் 248 ஈரானியர்களும், 42 ஐக்கிய அரபு எமிரேட்டைச் சேர்ந்தவர்களும் இருந்தனர். இவர்களுக்கான நஷ்டஈடு ஒரு தொகையாக 300,000 அமெரிக்க டொலர்களை அமெரிக்கா வழங்கியுள்ளது.

# சீன-அமெரிக்க உறவுகளில் முதிர்ச்சி - கம்யூனிசக் கட்சி செய்தி -

அமெரிக்க அதிபர் பில் கிளின்டன் ஒன்பது நாள் சுற்றுப் பயணம் ஒன்றினை மேற்கொண்டு சீனா சென்று வந்தது அறிந்ததே. இவரது பயணமும், அதன் பின் இரு தரப்பினரிடையேயும் ஏற்



பட்டுள்ள கருத்து நிலை குறித்தும் சீன கம்யூனிசக் கட்சியின் இணைய தளச் செய்தி வெளியிட்டுள்ளது. அமெரிக்க அதிபரின் பயணத்தின் மூலம் இரு தரப்பு உறவுகளும் முன்னரைவிட மேலும் இறுக்கமடைந்துள்ளன.

இரு நாடுகளும் பரஸ்பர வர்த்தக பொருளாதார ரீதியிலான உடன்படிக்கைகளை மேற்கொண்டுள்ளன. இரு நாட்டு அதிபர்களும் நேரடியான பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு தமக்கிடையேயான வேறுபாடுகளை தீர்த்துக் கொள்வதன்றுடன் பரஸ்பர ஒத்துழைப்புக்கும் வழி கோலியுள்ளனர். அதேவேளை ஒருசில முரண்பாடுகளும் தோன்றியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. ஓர் கூட்டத்தில் அமெரிக்க அதிபர் 1989ம் ஆண்டு தியன்மென் சதுக்கத்தில் நடந்த அசம்பாவிதங்கள் குறித்தும், திபெத்தில் சீனாவின் ஆக்கிரமிப்புக் குறித்தும் கருத்து வெளியிட்டதை சீன அதிபர் ஏற்றுக்கொள்ளவில்லை.

அமெரிக்க அதிபர் சீனாவின் ஒருசில நடவடிக்கைகளையே எடுத்துக்கூறினாலும், பொதுவாக அவரது ஒன்பது நாள் பயணத்தின் நோக்கம் வர்த்தக ரீதியானதாகவே இருந்தது. இப் பயணத்தின் போது சீனாவும், அமெரிக்காவும் 3.1 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கான வர்த்தக ஒப்பந்தங்களை செய்து கொண்டன.

சீனா நோக்கி அமெரிக்கா வைத்துள்ள ஏவுகணைகளையும், அதேபோல் அமெரிக்கா நோக்கி சீனா வைத்துள்ள ஏவுகணைகளையும் திசை மாற்றும் உடன்படிக்கையினையும் இரு நாட்டு தலைவர்களும் மேற்கொண்டனர்.

இந் நடவடிக்கை, 'இனியும் இரு நாடுகளும் எதிரிகளல்ல, நண்பர்கள்' என்பதை எடுத்துக்காட்டுகிறது என ஆய்வாளர்கள் கூறினாலும், இவைகள் மீண்டும் பழைய நிலைகளுக்கு கொண்டுவர சிறுநேரம் எடுக்காது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ரஷ்யா

## ரஷ்யாவில் தென் கொரியர் நாடுகடத்தல்

ரஷ்யாவில் பொருளாதார பாதுகாப்பு இயக்கங்கள் பற்றிய உளவு வேலைகளில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட ஒரு தென்கொரிய இராஜதந்திரி ஒருவர் அந்நாட்டின் பாதுகாப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ரஷ்யாவின் FSB இரகசிய உளவுத்துறையினர், மேற்படி தென்கொரிய இராஜதந்திரியும் அவருக்கு உதவியாக ஒரு ரஷ்யப் பொலிசாரும் உளவு வேலைகளில் ஈடுபட்டுள்ளனர் என்பதைக் கண்டுபிடித்தனர். தென்கொரியாவின் ரஷ்யத்தூதரகத்தில் ஆலோசகராக கடமையாற்றிய இவர், ரஷ்ய பொலிஸ் அதிகாரி ஒருவருடன் தொடர்பு கொண்டிருந்தார் என்றும், இவர் மூலம் பல தகவல்களைப் பெற்று தனது நாட்டிற்கு அனுப்பிக்கொண்டிருந்தார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

தான் வகித்த பதவிக்கு ஏற்புடையதாகாத நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்றும் இரண்டாவது குற்றச்சாட்டினையும் தென்கொரியர் மீது பொலிசார் சுமத்தியுள்ளனர்.

மேற்படி தென்கொரிய இராஜதந்திரி மூன்று நாட்களுக்குள் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என பணிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவருக்கு தகவல்களை வழங்கி வந்த ரஷ்யர்; தேசத்துரோக குற்றம் சுமத்தப்பட்டு கடுமையான தண்டனையைப் பெறுவார் என்றும் கூறப்படுகிறது.

மத்திய கிழக்கு

## ஈராக்கிற்கும் ஜோர்தானுக்குமிடையே எண்ணெய் விநியோக உடன்பாடு

ஈராக்கும் ஜோர்தானும் தமது நாட்டிடையே மாற்று எண்ணெய் விநியோக குழாய் வழியை அமைப்பதற்கான பேச்சுக்களில் கடந்த வாரம் ஈடுபட்டன. இப் பேச்சுக்களின் மூலம் ஏற்படும் ஓர் உடன்பாட்டின் மூலம் 4.5 மில்லியன் ஈராக்கிய மசகு எண்ணெய் ஜோர்தானுக்கு விநியோகிக்கப்படும்.

ஈராக்கின் எரிபொருள் அமைச்சர் அமீர்முகமத் ரசீத் தலைமையிலான குழு, ஜோர்தானிய எரிசக்தி அமைச்சர் முகமத் அல்துறாணி தலைமையிலான குழுவுடன் பேச்சுக்களை மேற்கொண்டது. 750 கிலோ மீற்றர் நீளமான இவ் எண்ணெய் விநியோக வழி, பாக்தாத்தின் வடமேற்கு பிராந்தியத்தில் உள்ள ஹதீதா எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து ஜோர்தானின் சர்க்கா சுத்திகரிப்பு நிலையத்திற்கு அமைக்கப்படும். இவ் விநியோக வழியினை அமைப்பதற்கான நிதி உதவி எவ்வகையில்



பெறப்படும் என்பது அறியப்படவில்லை. ஆனால் இவ் விநியோக வழி அமைப்புத் திட்டமானது 1995ம் ஆண்டு இரு தரப்பினரும் கைச்சாத்திட்ட ஓர் உடன்படிக்கையின் மூலம் வடிவமைக்கப்பட்டது. ஈராக்கின் பொருளாதாரத் தடையினால் பெரும் சிக்கல்களை எதிர்கொண்டுள்ள ஈராக்கானது, தனது மசகு எண்ணெயை ஜோர்தானுக்கு வாகனங்கள் மூலமே அனுப்புகிறது. இதனால் ஏற்படும் செலவுகளைக் குறைப்பதற்கும் விநியோகத்தை இலகுவாக்குவதற்குமான ஓர் ஏற்பாடாகவே இவ் விநியோக வழி அமைக்க உத்தேசிக்கப்பட்டது.

ஜோர்தான் தனது எரிசக்தி தேவைகளுக்காக ஈராக்கையே நம்பியுள்ளது. ஈராக்கின் குவைத் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து ஏற்பட்ட யுத்தத்தின் பின், ஜோர்தான் ஈராக்கினோடு அதிக அளவிலான நெருக்கத்தை ஏற்படுத்திக்கொண்டது. இன்று தினமும் ஈராக்கிலிருந்து 75000 பீப்பாய்கள் மசகு எண்ணெய் ஜோர்தானுக்கு அனுப்பப்படுகிறது.

கடந்தவாரம் இரு நாடுகளிடையேயும் நடந்த பேச்சு வார்த்தையின்பின் பத்திரிகையாளருடன் பேசிய ஈராக்கிய அமைச்சர்; ஈராக் ஜோர்தானின் எரிசக்தி தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்யும் கடமையைக் கொண்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகளும் ஒப்பந்தங்களும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வருடமும் இவ் ஒப்பந்தம் புதுப்பிக்கப்படுகிறது. இவ் வருடம் 4.5 மில்லியன் தொன் மசகு எண்ணெய்யை ஈராக் மட்டுப்படுத்தப்பட்ட விலையில் ஜோர்தானுக்கு வழங்கும் என தெரிவித்தார்.

## நைஜீரிய எதிர்க்கட்சித் தலைவர் விடுதலை?

நைஜீரியாவிற்கு கடந்தவாரம் விஜயம் செய்த ஐ.நா.பொதுச் செயலர் கோபி அனான் அந்நாட்டின் ஜனாதிபதி எனக் கூறக்கூடியவரும் 1994ம் ஆண்டு



முதல் சிறைத்தண்டனை அனுபவித்து வருபவருமான மசூத் அபியோலாவை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று கூறினார். நைஜீரியாவின் முன்னாள் தலைவர் சானி அபாச்சாவினால் கைதுசெய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருந்த முப்பதிற்கும் அதிகமான முக்கிய அரசியல் வாதிகள் புதிய தலைவரான அப்துல்சலாம் அபூபக்கரினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நைஜீரியாவின் அரசியல் சீர்கான மாற்றம் ஒன்றினை விரைவில் ஏற்படுத்த வேண்டும் என அந்நாட்டின் வர்த்தகத்துறையில் பிரதான பங்காளரான அமெரிக்கா தெரிவித்துள்ளது. அது தனது உயர்மட்ட தூதுக்குழு ஒன்றினையும் நைஜீரியாவிற்கு அனுப்பியுள்ளது. அதே போன்று ஐரோப்பிய ஒன்றியமும் தனது தூதுக்குழுவினை கடந்தவாரம் நைஜீரியாவிற்கு அனுப்பியது. நைஜீரியாவில் ஜனநாயகத்திற்கு மக்கள் நம்பிக்கையைக் கொண்டிருக்கும் அபூபக்கர், தனது உதவியாளராக ஜனநாயக கருத்துப்பற்று அதிகமுடைய பேசப்படும் 'சீரா' அட்மிரல் மைக் அகிவெய்யை நியமித்துள்ளார். இவ்வாறு நிலைமையில் எப்படியாயினும் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டிய சூழ்நிலையில் 1999ம் ஆண்டு ஜனவரி மாதமளவில் அங்கு இராணுவ ஆட்சியை முடிவுக்கு கொண்டுவரும் முயற்சியில் புதிய தலைவர் ஈடுபட்டுள்ளார். இதற்காக எப்படியும் 1993ன் தேர்தலின்போது வெற்றி பெற்று பின் அத் தேர்தல் ரத்துச் செய்யப்பட்ட நிலையில் தன்னை ஜனாதிபதி எனப் பிரகடனப்படுத்திக் கொண்ட இரு மசூத் அபியோலா விடுதலை செய்யப்பட வேண்டும். ஆயினும், அவர் விடுதலையானவுடன், ஜனாதிபதி பதவியை ஏற்க மறுப்பார் என பரவலாக பேசப்படுகிறது.

அபியோலாவின் விடுதலை நிச்சயம் அவசியமானது. இதனை நைஜீரியாவின் புதிய அரச தலைவரே அறிந்துகொண்டுள்ளது. ஜனநாயக சமூக மாற்றத்தை அங்கு ஏற்படுத்துவதும் அதனைப் பலப்படுத்துவதும் சர்வதேச சமூகத்திற்கு இன்றுள்ள ஒரு இக்கட்டான நிலைமையே என பிரித்தானிய வெளிவிவகாரச் செயலர் றொபின்குக் லண்டனில் கோபி அனானைச் சந்தித்த பின் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

ஆபிரிக்காவில் 80 மில்லியன் மக்களைக் கொண்ட ஒரு பெரும் நாட்டில் மீண்டும் ஜனநாயகரீதியான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அந் நாட்டின் ஒவ்வொரு குடிமக்களினதும் பங்களிப்பு அவசியம் என கோபி அனான் கூறியுள்ளார்.

## துருக்கி நிலநடுக்கத்தினால் பாரிய உயிரிழப்பு

துருக்கியில் கடந்த ஜுலை மாதத்தில் ஏற்பட்ட இரு நில நடுக்கங்களினால் 150 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டும் 2000 இற்கும் அதிகமான மக்கள் காயங்களுக்கும் உள்ளானார்கள். துருக்கியின் மத்தியதரைக் கடல் கரைப் பகுதியின் கிழக்குப் பிராந்தியத்தில் உள்ள அனட்தோலியன் மண் பகுதியில் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுவது வழக்கம்.

கடந்தவாரத்தில் 27ம் திகதி ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் அடானா பகுதியில் 450 வீடுகள் அழிக்கப்பட்டு 144 பேர்கள் இறந்தும், 1500 இற்கும் அதிகமானோர் காயமுமடைந்தனர். மீண்டும் கடந்த சனியன்று இதே பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் 700 மக்கள் படுகாயமடைந்தனர். இதன்போதும் ஏராளமான வீடுகள் இடிந்து விழுந்தன. இப்பிராந்தியத்தின் மக்கள் தொடர்ந்தும் பயப்பீதியுடன் காணப்படுவதாயும் வீடுகளுக்குச் செல்ல அஞ்சுவதாயும் தெரிவிக்கப்படுகிறது.

பிராங்பேர்ட் மாநகரில்
ஆதவா
ஆசியா சென்ரர்

தங்க மாளிகை
ஜவுளியகம், நூலகம்
விமானப் பயணச் சீட்டுக்கள்
வீடியோ ஓடியோ விஷன்
எவர் சில்வர் பாத்திரங்கள்
மளிகைப் பொருட்கள்
மரக்கறி வகைகள்
கடலுணவுப் பொருட்கள்
தொலைபேசி அட்டைகள்
அன்பளிப்பு – அலங்காரப் பொருட்கள்
உங்கள் அனைத்துத் தேவைகளையும் ஒரே இடத்தில் மன நிறைவுடன் பூர்த்தி செய்ய நாடவேண்டிய ஒரே இடம்.
Adavaa Asiya Centar
Taunusstr. 19, 60329 Frankfurt/Main
Tel: 069/250361 + 250362 / Fax: 069/234045
Travels - 069/92919139
நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதம்

ஆரம்பமாகிவிட்டது

பிரித்தானியாவில்

# GNANAM Telecom Centers




| | | | |
|---|---|---|---|
| *சிறீலங்கா | – 0.35p | லண்டன் | – 0.04p |
| *இந்தியா | – 0.30p | லண்டன் Mobile | – 0.15p |
| கனடா | – 0.5p | அவுஸ்திரேலியா | – 8p |
| அமெரிக்கா | – 5p | சிங்கப்பூர் | – 0.20p |
| ஜேர்மனி | – 6p | சுவிற்சர்லாந்து | – 0.08p |
| பிரான்ஸ் | – 6p | | |

வர்த்தகர்களுக்கு விசேட கழிவு உண்டு. கீழ்காணும் முகவரியில் தொடர்புகொள்ளவும்

பாரிசில் மக்களின் நம்பிக்கையைப் பெற்ற ஞானம் தொலைபேசி அட்டைகளை இப்பொழுது லண்டனில் சகல வணிக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

## GNANAM Telecom Centers

180 High Street North
East Ham, London E6, U.K.
Tel: 0181-4708844 Fax: 0181-4708777

* இரவு 6 மணி முதல் காலை 7 மணி வரை



வெண்திரையில்....

# ஜெயசிக்குறுய் சமர்

களமுனைத் தளபதிகளின் நேரடி
அனுபவங்கள், விக்டர் டாங்கி எதிர்ப்பு
படையணி, ரீரங்கிப் படையணிகளின்
தாக்குதல் நடவடிக்கை
உள்ளிட்ட – சிறப்புப் பதிவாக
வெளிவந்துள்ளது

10.07.98 வெள்ளிக்கிழமை
மாலை 7.30 மணிக்கு
Shalom Centre
395 High Street North
Manor park, London E126PL

17.07.98 வெள்ளிக்கிழமை
மாலை 7.00 மணிக்கு
Angel Comunity Centre
Ranham Road, Uper Edmonton
London N9

18.07.98 சனிக்கிழமை
மாலை 6.30 மணிக்கு
Waltham Forest Road
Walthamstow, London E 17

18.07.98 சனிக்கிழமை
மாலை 6.30 மணிக்கு
Merton Hall, 76 Kingston Road
Wimbledon
London SW19 1LA

மேலதிக தொடர்புகளுக்கு – ஐக்கிய தமிழர் அமைப்பு
Tel: 0171 - 403 4554

அத்துடன்.......

பொ.தாசனின்

## தேசத்தின் புயல்கள் முழுநீள தமிழீழ திரைக்காவியம்

இது பலாலி இராணுவத் தளத்தினுள் இடம் பெற்ற கரும்புலி நடவடிக்கையின் மிக நேர்த்தியான பதிவு





ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# கதை சொல்லும் முயற்சி

கடந்தவாரம் கிருசாந்தி குமாரசாமி வழக்கின் எதிரிக ளுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தமிழ் மக்களுக்கு சில சந்தேகங்களை ஏற்படுத்தியிருக்கிறது.

அதாவது இந்தத் தீர்ப்பு அரசியல் நிர்ப்பந்தங்களுக்கு அடிபணி யாத நிலையில் சட்டம் தனது கடமையைச் செய்ததன் அடிப் படையில் வழங்கப்பட்ட தீர்ப்பா? அல்லது சர்வதேச அளவில் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக்கப்பட்டிருக் கும் – சிறீலங்கா அரசாங்கத்திற்கு நல்ல பெயரைச் சம்பாதித் துக் கொடுக்க வழங்கப்பட்ட தீர்ப்பா? என்கின்ற கேள்விகள் தமிழ் மக்கள் மத்தியிலே எழுந்திருக்கின்றன.

இந்த வழக்கில் குற்றவாளிகளாக காணப்பட்டு மரண தண்ட னையும் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்ட முதலாம் ஏழாம் எதிரிகள், தங்களை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் சென்றால் கிருசாந்தியையும் அவரது குடும்பத்தவரையும் புதைத்த புதை குழி களைப்போல 400 புதை குழிகளையாவது அடையாளம் காட்டித் தர முடியும் என்று தங்களது கடைசிக் கோரிக்கையில் தெரிவித் திருக்கின்றார்கள். இதை வெறும் பிதற்றல் வார்த்தைகளாக எடுத் துக்கொள்ள முடியாது. சட்டம் தனது கடமையைச் செய்வது உண் மையாக இருந்திருந்தால் இந்த விடயம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவேண்டும். உண்மையான குற்றவாளிகளை வெளியே விட்டு விட்டு நிரபராதியான எங்களை ஏன் தண்டிக் கின்றீர்கள் என்று அவர்கள் கேட்ட கேள்விக்கு மதிப்பளித்து – அவர்கள் குறிப்பிட்ட 400 புதைகுழிகளையும் அடையாளம் கண்டு பிடிப்பதற்கும் நீதி மன்றம் உத்தரவிட்டிருக்கவேண்டும்.

மாறாக அவர்களது அந்த வாக்கு மூலத்தை வெறும் பதிவாக மட்டும் எடுத்துக்கொண்டு அவர்களுக்கு மரண தண்டனை விதித் ததன் மூலம் அதாவது, அவர்களை புதைகுழிகளுக்கு அனுப்புவதன் மூலம் அவர்கள் தெரிவித்த புதைகுழிகள் பற்றிய விபரங்கள் வெளியே வாராத படி மறைக்கப்படலாம் என்ற எண்ணம் தமிழ் மக்களுக்குண்டு.

யாழ்ப்பாணக்குடா நாடு சிறீலங்கா இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளான பின்பு அங்கே ஆயிரக்கணக்கானவர்கள் காணாமல் போயிருக்கின்றார்கள். பல பாலியல் வன்முறைகள் நடந்திருக் கின்றன. சமீபத்தில்கூட ஒரு பெண் மட்டுவில் பகுதியில் இராணு வத்தினரின் கூட்டான பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட பின் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்.

இந்த நிலையில் கிருசாந்தி வழக்கின் தீர்ப்பு – இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்கும், குற்றம் செய்பவர்களுக்கு பயத்தைக் கொடுக்கும் என எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால் இந்தக் குற்றங்களுக்கு அடிப்படையாக இருப்பதே அரசாங்கத்தி னுடைய பொதுச் சிங்கள இராணுவ மனப்பான்மைதான். இந்த மனப்பான்மை இருக்கின்ற வரை இது போன்ற தீர்ப்புக்கள் எந்த மாற்றத்தையும் கொண்டு வந்து விடப்போவதில்லை, மாறாக பசியால் துடித்து அழுகின்ற பிள்ளைக்கு கதை சொல்லுகின்ற முயற்சியாகத்தான் இவை இருக்கும்.

# சர்ச்சைக்குரிய ஜெருசலேம் அல்ல தமிழர்களது தலைநகர் திருகோணமலை

3.3.11(1) திருகோணமலை மாநிலம்: தமிழீழத்தின் தலைநகர் இப்பிரதேசத்தில் அமையும். தலைநகரின் நிர்வாக பிரதேச மாக இதன் அயற்பகுதிகள் அபிவிருத்திய டையும். சீனன்குடா, தம்பலகாமம் என்பன இதில் அடங்கும்.

(தமிழீழ உட்கட்டுமானம் – தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்)

**ஒரு பார்வை**

திருகோணமலை தமிழர்களுக்குத் தலை நகர்; சர்வதேச சக்திகளுக்கு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகம். ஆனால் சிங்கள தேசத்திற்கு அதனது கொடியவாய்ப் பட்ட இனவெறி சிந்தனையை பரிசீலித்துப் பார்க்கும் ஆக்கிரமிப்பு வலயம்.

அண்மையில் திருமலை நகர்ப்பகுதியில் வைர வேற்றுக்கும் கப்பல்துறைக்கும் இடைப்பட்ட பகு தியை சிங்களப் படையுடன் புல்டோசர்கள் கொண்டு துப்பரவு செய்தன. ஏன் எனக் கேட் கப்பட்டபோது. புலிகள் இங்கு மறைந்திருந்து தாக்குகிறார்கள் என விளக்கம் கொடுக்கப் பட்டது ஆனால் மெதுவாக இங்கு கொட்டில் கள் போடப்பட்டு சிங்களவர்கள் குடியேற்றப் பட்டபோதுதான உண்மை வெளிவந்தது. மற்றுமொரு சிங்களக் குடியேற்றம் நடாத்தப்பட் டுக் கொண்டிருக்கிறது.

15 வருடப் பேரின இனவாத ஒடுக்குமுறைகள் - பொருளாதாரத் தடை இவையெல்லாம் கேடுகெட்ட சிங்கள தேசத்தின் இனவெறி நோயினை தணிப்பதில்லை.

இதேபோன்று திருமலை - கொழும்பு வீதியில் 240ம் 250ம் மைல் கற்களுக்கிடையில் மற்று மொரு குடியேற்றத் திட்டத்தை சந்திரிகா அரசு வெற்றிகரமாக நடத்தி தமிழர்களின் மற்று மொரு கிராமத்தை கையகப்படுத்தி கொண்டுள்ளனர்.

திருமலையின் இனப்பரம்பல் மக்கள் தொகை 1983 இருந்து திட்டமிட்ட சிங்கள குடி யேற்றங்களினால் தொடர்ச்சியாக மாற்றப்பட்டு வருகிறது. பல தமிழ் கிராமங்கள் குறைக்கப் பட்டுவிட்டன. திருமலையில் மாபெரும் தென்னமரவடி பாரிய சிங்கள குடியேற்ற திட் டங்களினால் சூறையாடப்பட்டு விட்டது. 1954ல் பதவியா. பிரதேசத்து தமிழர் கள் இரவோடிரவாக விரட்டப்பட்டு சிறீலங்கா வின் குடிமக்கள் 'சிங்களவர்கள்' அங்கு குடி யேற்றப்பட்டனர்.

இதேபோன்று திருமலை நகரில் அமைந்தி ருந்த கிருஷ்ணன் கோவில், பிள்ளையார் கோவில் என்பன 1983 இல் பின் சிங்களவர் களின் குடியேற்றத்தால் பறிமுதல் செய்யப் பட்டுவிட்டது. இன்று பிள்ளையார்கோவில் சிங்களவர்கள் வீடு கட்டுவதற்கு பயன்படுத் தும் கம்பு, தடிகள், கிடுகுகள் வைக்கும் அறையாக பாவிக்கப்படுகிறது. திருமலை கோணேசர் கோவிலுக்கும் மணிக்கூட்டு கோபுரத்திற்கும் இடைப்பட்ட கடற்கரையோரப் பிரதே சம் சிங்களவர் குடிமனைகள் ஆக்கப் பட்டுவிட்டது.

சந்திரிகா –கதிர்காமர் அணியின் கூட்டாளி திருமலை சம்பந்தரின் (த.வி. கூட்டணியின் பா.உ) சொந்தக்காணிகூட சிங்களவர்களினால் பறிக்கப்பட்டுவிட்டது.

இந்த திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் சிங் கள இனவாதத்தின் நீண்ட கால திட்டங்களில் பிரதானமானது. இத்தகைய அரசியல் திட்டங்கள் மாக்கியவெல்லி குறிப்பிட்ட துப்பாக்கிகளினாலும் இராணுவத்தினாலும் குவித்து ஒரு பிரதேசத்தை கபளீகரம் செய்வதிலும் பார்க்க, சிறுசிறு குடி யேற்றத் திட்டங்களால் பிரதேசங்களை உள்வாங்கி விடலாம் என இனவெறியர்கள் நம்புகின்றனர். இதனைத் தான், 'எல்லைகளை தமிழர் பிரதேசங் களின் உள்ளே நகர்த்த வேண்டும்' என முன் னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா சிங்க ளவர்களிடம் அறைகூவல் விடுத்தார்.

இன்று தமிழர்களது போராட்டம் தீர்க்கமான தலைமையின் கீழ் முன்னெடுத்து செல்லப்பட்டு வருவதால் சிங்கள குடியேற்றங்களின் துரிதம் குறைக்கப்பட்டுவிட்டது. ஜெயவர்த்தனா திட்ட மிட்ட வேகம் தடுத்து நிறுத்தப்பட்டுவிட்டது. என்றும் நல்ல பௌத்த இனவாதி சந்திரிகா வின் தந்திரமான ரீதியிலான குடியேற்றங்கள் தொடர்கின்றன.

இதனைத் தடுத்து நிறுத்த எம்முன் உள்ள வழி முறைகள் என்ன? தனது விசுவாசி சம்பந்தரின் சொந்த காணியையே பறித்த அரசிடம் தமிழர் கள் இரங்கிக்கேட்டு சிங்கள குடியேற்றங்களை தடுத்து நிறுத்த முடியாது. சர்வதேச சமூகத்தின் அறைகூவல்களை அழுத்தங்களை சமாளிப் பதற்கு சந்திரிகா அரசு பழகிவிட்டது. அவ ர்களை தடுத்துநிறுத்த எம்முன் உள்ள ஒரே வழி, பலாத்கார குடியேற்றங்களை நடாத்தும் அரசையும் அதனை பாதுகாக்கும் படை களை யும் எமது தலைநகர் திருமலையில் இருந்து விரட்டுவதுதான். இன்று ஜெருசலத்திற்கு யூதர்க ளும் – பாலஸ்தீனர்களும் வரலாறுகளை காட்டி உரிமை கோருகின்றார்கள். நாளை தமிழர்கள் போரில் தோற்கடிக்கப்பட்டால் சிங்களவர்கள் தாம் உருவாக்கிய வரலாற்றைக் காட்டி திரும லையை முழுமையாக உரிமை கோரலாம்! ஆனால் இன்றைய புலிகளின் வரலாறு தமிழர்களின் வீர வரலாறாக உருவாகிவருவதால் நாளை புதிய வர லாறு திருமலைக்கு கிடைக்கும். அது திருமலையை தமிழர் தலைநகராகப் பிரகடனப்படுத் தும்.

– ப.ராஜா

# எதிரொலிகள்

## சமஸ்கிருதமே சிறப்பென்போர் தாழ்வு மனம் கொண்டோர்

'தமிழ் மந்திரங்கள் சமஸ்கிருத மந்திரங்களைப் போல் அழுத்தமுற ஒலிப்பவ அல்ல. எனவே சமஸ்கிருத மந்திரங்களே சிறப்புடையவை' என இந்து மத ஒருமைப்பாட்டு மாநாட்டிற்கு வருகை தந்த ஒரு வர் கூறியதை ஈழமுரசு அம்மா... ஹம்மா என்ற தலைப்பில் எள்ளற் சுவையுடன் நகையாடியது, நல் விருந்து நல்கியது.

தமிழ்மொழி குரல்வளை அளவில் மட்டுமே நின்று எழும்பி ஒலிக்கும் மொழி. அந்த அறிவிய லோடு இணைந்து உடல் நலனையும் பேணும் மொழி. சமஸ்கிருதமும், வேறு சில மொழிகளும் வயிற்றின் உந்துதலோடு நுரையீரலிலிருந்து அழுத்தமுற வெளி யாகும் தன்மையுடையன.

எடுத்துக்காட்டாக, அ என்பதற்கும் ஹ என்பதற் கும் ஒலி அளவில் வேறுபாடு உள்ளது. உடலின் தசை மற்றும் உறுப்புகளின் அசைவுகளிலும் வேறுபாடு கள் உள்ளன.

ஒருவர் சமஸ்கிருத சொற்களை தொடர்ந்து அரை மணியளவு உரைத்தாரெனில் விரைவில் அவர் களைத்து ஆவி சோர்ந்து போவார். அவரது நுரை யீரலும் பாதிப்புறும். ஆனால் சொற்றமிழில் செந் தமிழ் மொழியால் இரு மணியளவு இயம்பினாலும் களைப்புறோம். சோர்வும் அடையோம்.

சூரிய நாராயண சாஸ்திரி என்ற ஒரு தமிழ் வேதி யர், அன்றாடக் கடமையாக, ஆற்றில் நின்று சமஸ்கி ருத மந்திரங்களை உருப்போட்டு வந்தார். க, ஜ, ஷ, ஹ தொடர்பான சொற்கள் நிரம்பிய சமஸ்கிருத மந்திரங்களை இறைவருள் பெற இடையறாது இயம் பிய அவரின் நுரையீரல்கள் சில நாட்களில் பாதிப் புற்றன. குருதி கசியத்தொடங்கின. வாயிலிருந்து செந்நீர் வடிதல் கண்டு சாஸ்திரியாராகிய வேத விற் பன்னர் மனமுடைந்தார். மருந்துகளும் பயனற்றுப் போயின.

பின்னர், ஒருவருடைய நற்போதனையால் சமஸ்கி ருதம் விடுத்து தேவார திருவாசக திருமந்திரப் பாடல் களை பண்ணோடு பாடினார். வியத்தகு முறையில் குருதி வடிவது நின்று குணமானார். தமிழின் ஆற் றலை உணர்ந்தார். தமிழோடு ஒன்றி சமஸ்கிருதம் மறந்தார். பின்னாட்களில் தம் வட மொழிப் பெய ரான சூரிய நாராயண சாஸ்திரி என்பதனைத் தமிழ்ப் படுத்தி பரிதிமாற் கலைஞர் என பெயர் கொண்டு தமிழுலகில் புகழ் எய்தினார். சமயக்குரவர் நால்வ ரில் திருஞான சம்பந்தரே முழுமையான வேதிய குலத்தவராவார். அவரே சமஸ்கிருதத்தைப் புறந்தள் ளிய நற்றமிழ்ஞான சம்பந்தனாய் திகழ்ந்தார். இறை யருள் பெற்ற இன்றமிழ்க்குழவி என சைவர்போற்றி ஏற்றி மகிழ்கின்றனர். சமஸ்கிருதப் பற்றாளரும் மறுப்பதற்குத் துணியார்.

இறைப்பொருளை பொருளுணர்ந்து உளம் நெகிழ்ந்து ஏத்திப் போற்றிப் பாட, தாய்த் தமிழே ஏற்ற மொழி. ஆரியன் ஆவை நுழைவுக்கு முன்பும் இருந்தமொழி. சங்க காலத்தில் சமஸ்கிருதம் இல்லாத காலத்தும் இறைப்பொருளை தமிழில்தான் மாண மிகு தமிழர் வழிபட்டனர். தமிழகத்தில் வேர் ஊன் றிய பிற சமயக் கோட்பாளரும் தமிழிலேயே போத னைகள் புரிந்தனர்.

சமஸ்கிருதமே சிறப்பெனும் தமிழ் மக்கள், அடி மைத்தளையில் சிக்குண்ட, அதிகாரத்திற்கு அடி பணிந்த, தமிழின் சிறப்பினை அறியாத தாழ்வு மனப் பான்மையுடைய மன நோயாளிகள் ஆவர். புதுமையும் புரட்சியும் கண்டு வெருளும் பித்தராவர் என்றே கரு தத்தோன்றுகிறது.

துணிவும் திண்மையும் உடையோராயின் கோயில் களில் தமிழில் அருச்சனை செய்யுமாறு வலியுறுத் தலே மாண்பாகும். தமிழனின் தமிழ்க்கடவுளுக்கு தமிழ் விளங்காவிடில் அக்கடவுள் ஏன்?

– அருள்மொழிப்பாரி
(மலேசியா)

# நிறவாதம்*

# ஆசியப் பெண்களின் கவிதா சாட்சியம்

யமுனா ராஜேந்திரன்

சமூகக் கொந்தளிப்புகள் புரட்சிகள் போன்றவற்றுக்கான வரலாற்று ரீதியிலான சாட்சியமாக இலக்கியம் என்றுமே இருந்து வந்துள்ளது. காட்சியே (visual) கலை வடிவங்களும் இதேயளவு சாட்சியமாகி வந்துள்ளது. சிறுகதை, கவிதை, சினிமா, ஓவியம் என இச்சாட்சியங்கள் வெளிப்படும் ஊடகங்கள் பல. பொதுவாக பெண்களின் அனுபவங்கள் ஆண்களின் நேரடியான அனுபவங்களில் இருந்து வித்தியாசமானது. அவர்கள் மீதான ஒடுக்குமுறையும் சமூகத்தின் நுண் தளங்களிலும் செயல்படுகிறது.

உலகில் வாழும் பெரும்பான்மை மக்கள்
மஞ்சள் கறுப்பு
பழுப்பு நிறத்தவர். ஏழைகள், பெண்கள்
கிறிஸ்தவர் அல்லாதவர்கள்
ஆங்கிலம் பேசாதவர்கள்
2000 ஆவது ஆண்டில்
உலகின் மிகப் பெரிய 20 நகரங்கள்
ஒரு அம்சத்தைப் பொதுவாகக் கொண்டிருக்கும்
இவற்றில் ஒன்றுகூட ஐரோப்பாவில் இருக்காது
இவற்றில் ஒன்றுகூட அமெரிக்காவில் இருக்காது

என்று அமெரிக்க கறுப்புப் பெண்கவி ஆட்ரிலோர்ட் பேசுகிற போது அதில் தொனிப்பது மூன்றாம் உலகப் பெண்களின் பெருமிதமும், அமெரிக்க ஐரோப்பிய நிற இன ஆதிக்கத்திற்கெதிரான கோபமும் தான்.

இதே அளவிலான கோபத்தை ஆசியப் பெண் கவிஞர்களும் கவிதைகளில் பதிந்து வைத்திருக்கிறார்கள். இந்தியாவிலிருந்து டிரினிடாட் வரை வாழும் ஆசியப் பெண்கள் தமது அனுபவங்களை பல தொகுதிகளாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். கரீபியனிலிருந்து பவுலியா ரசிக் தொகுத்த 'அயுரத் தர்பார்' எனும் நூலும் இங்கிலாந்திலிருந்து ருக்ஸனா அகமது தொகுத்த 'நாங்கள் பாவப்பட்ட ஜென்மங்கள்' எனும் தொகுப்பும் முக்கியமானவை.

சுஜாதா பட் எனும் இந்திய வம்சாவழிப் பெண் கவிஞரும், கிஸ்வர் நஹீத் எனும் பாகிஸ்தானியப் பெண் கவிஞரும் உலகப் புகழ் பெற்றவர்கள். குளிர் நாடுகளின் தலைவர்களுக்கு எனும் கவிதையில் கிஸ்வர் நஹீத் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

எனது வறண்ட நாட்டை எப்படி
வெறுப்பதென
எனக்குச் சொல்லித் தர
வேண்டாம்.
இந்த முற்றங்களில் எனது
நனைந்த ஆடைகளை
உலரவிடு
எனது வயல்களில் பொன்னை
விதைக்க என்னை விடு
எனது நதிகளில் தாகம் ஆற
என்னை விடு
எனது மரங்களின் கீழ்
இளைப்பாற என்னைவிடு
எனது புழுதியை பூசிக் கொண்டு
எனது தேசத்தின் தூர தூரங்களைப் போர்த்துக் கொள்ள
என்னைவிடு.

நிறவாதத்திற்கு எதிரான உணர்வென்பது எமைப் பொறுத்து காலனியாதிக்கத்திற்கு எதிரான உணர்வுதான். எமது செல்வங்கள் கலாச்சாரங்களை கொள்ளை கொண்டு போனவன்தான், இப்போது எமது மக்களை கீழானவர்கள் என்று நிறத்தைக் காட்டி ஒதுக்குகிறான்.

காலனியாதிக்க எதிர்ப்பு உணர்வென்பது ஒரு வகையில் நிறவாத எதிர்ப்பென்று உணர்கிற நாம் நமது கலாச்சாரத்தின் ஜாதிய ஒதுக்கலிலும் ஜெர்மானிய பாசிசத்தின் கூறுகள் இருக்கிறது என்பதையும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். சுஜாதாபட்டின் 'ஸ்வஸ்திகா' எனும் கவிதை இதைத்தான் சுட்டிக் காட்டுகிறது.

சுஜாதாபட்டின் கணவர் நீலமான பார்வைக் கண்கள் கொண்ட ஜெர்மனியர். அவரது பிறந்த மகளின் அடையாளம் என்ன என்பது அவருக்குப் பெரிய பிரச்சினையாகிறது. இந்துமத சின்னம் ஸ்வஸ்திகா விதையும் கொலைக் குருதி.

கொலைக் குருதி படிந்த கலாச்சாரச் சின்னங்களை ஒருவர் தமது அடையாளச் சின்னம் என்று சொல்லிக் கொள்ள முடியுமா?

கோயிலின் பிரகாரத்தில் வரிசையாக
நடப்பட்டிருக்கும்
ஸ்வஸ்திகா சிவப்பைப் பாருங்கள்
ஒவ்வொரு கல்யாணப் பந்தலிலும்
அலங்கரிக்கும்
ஸ்வஸ்திகா சிவப்பைப் பாருங்கள்
வரதட்சணைத் தொகை
காகிதத்தினை மீறுமிறுப்பைத் தீர்மானிக்கிறது
அச்சிடும் நேர்த்தியை
கோயிலின் தாழ்வாரத்தில்
அவர்கள் கைகளின்
சமிக்ஞைகளில் கூட நேசம் இல்லை
புனிதம் இல்லை பவித்திரம் இல்லை
ஏதோ தவறிருக்கிறது
பல்வேறு பழைய பதங்கள்
விவாதங்களில் ஊதிப் பெருத்தது
பச்சை இரத்தம் கொலைகளில்
அல்லது
அம்மதங்கள் இந்த நிவேதனத்தை வேண்டுகிறதா?
யாரோ ஒருவரின் இரத்தம்
யாரோ ஒருவரின் இச்சைப் பட்ட காம
யாரோ ஒருவரின் வாழ்க்கை
யாரோ ஒருவரின் மனைவி
யாரோ ஒருவரின் மகள்

இவர்களின் பச்சை இரத்த வாடையின் மீது தான் நாசிஸம் கட்டப்பட்டிருக்கிறது. ஆரியத்தின் பேரில் தான் இந்துமத தீண்டாமையும் கட்டப்பட்டிருக்கிறது. சுஜாதா இந்திய ஆரியத்துடன் தனது மகளைக் கேட்கிறாள்.

ஓ..! எனது ஜெர்மன் பிறப்பு மகளே..
வசந்தகாலத்தில் வந்த என் மகளே.. நீ
அதிர்ஷ்டக்காரப் பெண்ணே,
புனித பிறவித் திருநாளில்
பிறக்க நேர்ந்தவளே.
நீ என்ன சொல்லப் போகிறாய்!
என்ன நிறத்தை விரும்பப் போகிறாய்?
என்ன மொழியில் பேசப் போகிறாய்?

நிச்சயமாக நிறவாதத்தின் மொழியில் அக்குழந்தை பேசப் போவதில்லை. நிறவெறியில் இனவெறியின் அடிப்படையிலமைந்த தீண்டாமையை தனது அடையாளமாக சுவீகரிக்கப் போவதில்லை.

ஆனாலும் குழந்தைகள் நிறவாதத்தை எதிர்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. பல்வேறு பருவங்களில் சேர்ந்து படிக்கும் வெள்ளைக் குழந்தைகள் இந்திய ஆசியக் குழந்தைகளை துன்பப்படுத்துகிறார்கள்.

காலனியாதிக்க எதிர்ப்பு உணர்வென்பது ஒரு வகையில் நிறவாத எதிர்ப்பென்று உணர்கிற நாம் நமது கலாச்சாரத்தின் ஜாதிய ஒதுக்கலிலும் ஜெர்மானிய பாசிசத்தின் கூறுகள் இருக்கிறது என்பதையும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

குழந்தைகளுக்கு நேரிடும் அனுபவத்தை ஒரு குழந்தையே தனது வார்த்தைகளில் சொல்லுகிறது:

அம்மாவைப் போலவே
(அன்னியர்களிடம் பேசாதே)
நான் பேசவில்லை:
ஆறுபேரும் என்னைச் சுற்றி



வளைத்தார்கள்
பீறிட்ட ஒருவன்
வெள்ளை நிறப் பெயிண்டை
எறிந்து
அடிக்கத் துவங்கினான்.
எனது உடம்பை அது
எரித்துக் கொண்டிருந்தது
நான் என்னைக் கேவலமாக உணர்ந்தேன்.
கறுப்பாய் இருப்பதுதான் என் குற்றம்

வெள்ளையாகஇருக்க கறுப்பு நிறம் அழுக்கானது. பயங்கரமானது பைசாசத்தின் சாத்தானின் நிறம். அவனுக்குத் தனது தோலின் நிறம் தவிர அனைத்தும் கறுப்புதான். அனைத்தும் ஒதுக்கப்பட்ட நிறம்தான். ஆசியர்கள் தமது கசப்பான அனுபவங்களுடன் வளர்ந்து பெரியவர்கள் ஆகிறார்கள். நிறவாதத்தின் வேர்கள் காலனித்துவத்தில் இருக்கிறது என தெரிந்து கொள்கிறார்கள். நிற வெறிக்கெதிராக சமமாகப் போராடவேண்டும் எனத் தெரிந்து கொள்கிறார்கள்.

பிரித்தானியாவில் வாழும் ஆசியப் பெண் [illegible] கையுடைய நிறவாதத்தை யதேச்சையாக அறிந்து கொள்கிறாள். அவள் இவ்வாறாகச் சொல்கிறாள்.

சில விஷயங்களைத் தெளிவாக உணர்ந்து கொண்டேன்
அடையாளமில்லை
சுயாதீனத்தன்மை
மறந்து விட வேண்டும்
வெளியே வர வேண்டும்
விடுபட வேண்டும்
அவலவெளியில் முழங்கிச் சாவோம்
சிலவேளை தவிர்க்கவியலாமல் நான் சில விஷயங்களைத் தெளிவாக உணர்ந்து கொண்டேன்
சமரசத்துக்கான வாய்ப்பே இல்லை.

ஆம் உண்மையில் நிறவெறிக்கெதிரான போராட்டத்தில் சமரசத்துக்கான வாய்ப்பே இல்லை நாம் போராடித்தான் ஆக வேண்டும். போராடுவதற்கு நமது வேர்கள் குறித்த அறிவு வேண்டும். கலாச்சாரம் குறித்த பெருமிதம் வேண்டும். யுத்தத்தின் இடையேயும் பட்டினியின் இடையிலும் நாம் காதல் புரிந்தோம். கலை படைத்தோம் கலாச்சாரத்துடன் வாழ்ந்தோம் எனும் பெருமிதம் வேண்டும். இந்தப் பெருமிதமே திருப்பித் தாக்குவதற்கான ஆவேசத்தைத் தரும்.

ஆகவே எமது கலாச்சாரம் வாழ்வு பெண்மை பற்றி மேற்கு நாட்டவர்களுக்குச் சொல்லி நாம் வியட்நாமைச் சார்ந்து சிந்திப்போம் நாம்:

வியட்நாம் வெறுமனே ஒருவார்த்தை அல்ல
ஒரு உலகம்
ஒரு காதல்
ஒரு குடும்பம்
ஒரு பயம்
ஒரு இடுகாடு
எல்லா மக்களும் அறிக
வியட்நாம் என்பது ஒரு யுத்தம் அல்ல
எல்லா மக்களும் அறிக
வியட்நாம் என்பது ஒரு யுத்தம் அல்ல
அது எம்மின் ஒரு பகுதி
சகோதரியே
நாங்கள் யுத்தத்தைக் காட்டிலும்
பெரிதானவர்கள்
விரிந்தவர்கள்

நிறவாதத்தையும் இனவாதத்தையும் மேற்கில் வாழும் ஆசியப் பெண்கள் பள்ளிக்கூடங்களில், கல்லூரிகளில், வேலைத்தலங்களில், தெருவில், சமூக வாழ்வில் பல்வேறு தளங்களில் அனுபவம் கொள்கிறார்கள். தாமது கலாச்சாரம் குறித்து பெருமிதத்தை வளர்த்துக் கொள்கிறார்கள்.

'தனது தேசத்துக்குரியவளைப் பார்த்து உனது காதல் எவ்வளவு நிலைகுலைந்துவிட்டது' எனும் கவிதையில் நிலாதுப்தா சொல்கிறார்:

வெள்ளை அயோக்கியப் பயல்கள்
எனது திருமணத்தை வழுபடி பழுபடி
தொந்தரவு செய்வதை நான் பார்க்கிறேன்
என் முகத்தில் அவர்கள் காறி உமிழ்ந்தது
இன்னும் இருக்கிறது.
நான் தூங்க முடியாது.
சின்னஞ் சிறு பெண் குழந்தைகள் கதறுவதை
நான் கேட்கிறேன்.
ஒவ்வொரு இரவும் நான் படுக்கைக்குப் போகும்முன்
எனது கால்கள் வரண்டு போகிறது.

குடும்பங்கள் நிறவெறியாளர் தாம் வாழுமிடங்களிலிருந்து விரட்டப்படுகிறது குழந்தைகள் ஏன் அழுது கொண்டிருக்கிறார்

(தொடர்ச்சி [illegible]ம் பக்கம்)

* ஐரோப்பாவில் நிகழ்கின்ற நிறவாதத்திற்கு எதிரான நடவடிக்கையை ஒட்டி தமிழ் அகதிகள் நடவடிக்கைக் குழுக்காக (Tamil Refuge Action Group, TRAG) சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை.

இதன் அங்கமாக ஜுன் 13, 1998ல் லண்டன் தமிழ்த் தகவல் நடுவத்தில், TRAG அமைப்பின் நிறவாதம் சம்பந்தமான முழு நாள் கருத்தரங்கு ஏற்பாடாகியது. நிறவாதம் நேற்று, இன்று, நாளை என்னும் தலைப்பில் ஆசிய ஆபிரிக்கச் சமூகத்தைச் சார்ந்தவர்கள் அந்த நிறவாதத்தை அன்றாட வாழ்வில் எதிர்கொள்வது சம்பந்தமாக விவாதித்தனர்.

Tamileelam Archive

### சிறு கதை

# முட்கிழுவங்கம்பு

எங்கோ ஒரு இனம் புரியாத இடத்திலிருந்து வேகமாக மிக மிக வேகமாக விழுந்து கொண்டிருக்கிறேன். அந்த வீழ்ச்சியிலிருந்து மீள எதையோ இறுகப்பிடிக்க வேண்டுமென்ற தவிப்பு, சிற்ற ஒரு கருதியில் எழுவதும், தவிர்வதுமாக என்னை ஆட்கொண்டிருக்கிறது. ஆனால் எதுவுமே மாறவின்றி, எல்லையைத் தொட முடியாதவாறு எகிறிக் குதித்து.

குழப்பம்.. ஒரே குழப்பம்.

எண்ணங்களைப் பிடித்து எங்காவது ஒரிடத்தில் கட்டி வைக்க வேண்டுமென்ற தவிப்பு எழுந்த போதிலும், அது தவிப்பு என்ற மட்டத்திற்கு மேல் செல்ல முடியாதவாறு தடுமாறுகிறது.

நான் இருக்கும் இடம் எது...?

எத்தனையோ பக்கங்களால் எண்ணங்கள் எழுந்து வந்து மோதுகின்றன. எனினும் எவையுமே தமது பரிமாணங்களை வெளியிடு முன்பே ஒன்றுடன் ஒன்று மோதிக் குழம்பி தெளிவற்றவையாய் மங்கிக்கொண்டு செல்கின்றன.

எங்கோ ஆழக் கிணற்றிலிருந்து வெளிவரும் தெளிவும் தெளிவற்றதுமான சொற்கள் மெல்லச் செவிப்பறையைத் தடவிச் செல்கின்றன. பிரமையா?

இல்லை... அவை மனிதக் குரல்கள் தான் ...!

எனது மூளையின் கலங்கள் அச்சொற்களுக்கு அர்த்தத்தைக்காண அதிவேகமாகச் சுற்றிச் சுழல்கின்றன. தாவித் தாவி எதையோ பிடித்து விட்டது போன்ற ஒரு உணர்வு.

'மிஸ் சேலையின் ஏறுது நிண்டிட்டுது. பைப்புக்கை இரத்தம் ஏறுது..' அக்குரலில் இருந்த பதட்டத்தைப் புரிந்து கொள்ளுமளவுக்கு ஏதோ ஒரு இடத்திற்கு நான் வந்து விட்டது போல் உணர்கின்றேன்.

நினைவுகளை அமைதியா அல்லது எனது கேட்கும் சக்தி மீண்டும் அற்றுப்போய் விட்டதா..?

கண்களைத் திறக்க வேண்டும் போலிருக்கிறது... ஆனால் முடியவில்லை... இமை மடல்களை ஏதோ ஒரு பாரம் அழுத்துவது போல் உணர்கிறேன்.

'எல்லாத்தையும் கழட்டுங்கோ... ஆள முடிஞ்சுது...! பெட்சீற்றாலை மூடிவிட்டு' டு ஸ்ரெச்சரை இழுத்து விடுங்கோ' அதிகாரத்தொனி ஒன்று கட்டளையிடுகின்றது: சற்று பலமாக ஆரம்பித்த சப்தத்து ஒலி மெல்ல மெல்ல மங்கி மறைகின்றது. அந்தக் குரல் ஒரு மருத்துவத் தாதியுடையதாயிருக்கலாம் என்ற எண்ணம் என்னுள் எழுகின்றது.

'ஐயோ பாக்கியம்' என்று அலறுகின்றேன். ஏன் என்வாய் திறக்கவில்லை. ஏன் என் குரல் வெளியே வரவில்லை..

பாரமொன்று என்னுள் வழுந்து விஸ்வரூபமெடுக்கிறது. நான் பேசும் சக்தியை இழந்து விட்டேனா..?

எனினும் மனம் 'பாக்கியம்! பாக்கியம்' என்று புலம்புகின்றது. நினைவுகளுள் பாக்கியம் புகுந்து நெஞ்சை பிசைகிறாள்.

'அம்மாவுக்கு வருத்தம் கடுமை. உங்களை பார்க்க ஆசைப்படுகிறா. உடனே வரவும்' கொழும்பு மகரகம புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்தில் பாக்கியத்தை வைத்துப் பராமரித்துக் கொண்டிருந்த எனது மூத்த மகன் சொர்ணத்தின் இவ்வரிகளைத் தாங்கிய அந்தக் கடிதம் என் கைக்குக் கிடைத்த போது அவன் கடிதம் போட்ட திகதியிலிருந்து இரு வாரங்களைக் காலம் விழுங்கி விட்டிருந்தது.

பரிமாணங்கள் அவரவர்களைப் பொறுத்து 'உடனடியாக' என்ற சொல் அர்த்தமிழந்து விட்ட போதிலும், நோய் முற்றும் வேகமும், மரணம் மனிதனைத் தொடும் காலமும் இன்னும் அர்த்தங்களை அப்படியே தாங்கிக் கொண்டேதானே இருக்கின்றன.

முப்பது வருடங்கள் இன்ப துன்பங்களிலெல்லாம் என்னுடன் இணைந்து பங்கு கொண்டு எங்களின் எச்சமாக இந்த உலகுக்கு மூன்று ஜீவன்களை வழங்கிய அவளை உயிருடன் பார்த்து விடவேண்டுமென்ற துடிப்பு என்னுள் மலையாய் எழுந்தது. பார்க்க முடியுமா?

இரண்டு வாரங்கள்: பதினாலு நாட்கள்

இவை இன்னும் விரிந்து பதினைந்து.. பதினாறு.. பதினேழு..

சேலையின் ஏறுவது நின்றதும், பைப்புக்குள் இரத்தம் ஏறியதும் போர்வையால் இழுத்து மூடச் சொன்னதும் மீண்டும் நினைவுக்கு வந்து மோதுகின்றன.

அது பாக்கியம் தானா..?

அப்படியானால் பாக்கியம் ஐயோ என்ர பாக்கியம் என்று அலற வேண்டும் போலிருக்கிறது. வாய் மட்டும் மெல்ல அசைவது போல் தோன்றுகிறது. ஆனால் குரல் வெளிவரவில்லை.

சக்தியிழந்தது குரலா.. காதா.. எதுவுமே புரியவில்லை.

உயிலங்குளத்தில் பத்துப்பன்னிரண்டு வரிசையாக அமர்ந்திருந்த சனங்களில் நானும் ஒருவனாயிருக்கிறேன். எட்டிப் பார்த்த இடமெல்லாம் வெட்டவெளியாய் இருக்கும் 'முன்னாள் வயல் நிலம்' இன்று இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் செல்வதற்கான தங்கு மேடையாக மாறிவிட்டிருந்தது. சுட்டெரிக்கும் வெய்யிலில் ஏற்கனவே என்தலையில் வயது வெட்டையாக்கி விட்டிருந்த பாதி மொட்டைப் பிரதேசத்தில் வியர்வையைத் துளித்துளியாக அரும்ப வைத்துக் கொண்டிருந்தது.

நீண்ட நேரம் காத்திருந்தமையால் பொறுமை என்னைவிட்டு மெல்ல மெல்ல விலகிக் கொண்டிருக்கிறது. ஒரு பெருமூச்சுடன் சுற்றி வரப் பார்க்கிறேன். சுற்றிவர ஆயுதம் தாங்கிய இராணுவச் சிப்பாய்கள்!

காத்திருந்தவர்கள் மத்தியில் ஒரு சலசலப்பு.

முட்கம்பி வேலிகளுக்கப்பால் ஒரு ஜீப் வந்து நிற்க ஒரு இராணுவ அதிகாரி அதிலிருந்து இறங்கி வருகிறான். மயிர்க் கலையாத அவனது ஆடைகளும் மீசை இல்லாத முகமும் அணிந்திருந்த விதம் விதமான பட்டிகளும் கம்பீரமான நடையும் அவனில் ஏதோ ஒரு ஆளுமையைப் பறை சாற்றிக் கொண்டிருந்தன.

காவலரணுக்கு அருகில் வந்து நின்று ஒரு முறை



காத்திருந்தவர்களை முழுமையாக நோட்டம் விடுகிறான். ஒரு சிறிய புன்னகை அவன் முகத்தில் தவழ்ந்து நிலைக்கிறது. அது ஞானத்தில் எழுந்தது போலவும் ஒரு எண்ணம் என்னுள் எழுந்து மறைகின்றது.

எனினும் என்னை நான் சமாதானம் செய்து கொள்கிறேன்.

'அவன் நல்லவனாயிருப்பான்' இன்று எப்படியும் உள்ளே சென்று விடலாம் என்ற நம்பிக்கை தோன்றுகின்றது.

அந்த அதிகாரி அருகிலிருந்த சிப்பாயை அழைத்து ஏதோ சிங்களத்தில் சொல்லுகிறான். அவன் தலையாட்டி விட்டு சனங்கள் இருக்கும் இடத்திற்கு வருகிறான். முதலாவது வரிசையில் இருந்த ஒரு சிலரை அழைத்து உள்ளே விடுகிறான்.

எனது மனம் தவிக்கிறது. பாக்கியத்தின் நிலை என்னவோ ஏதோ என்ற தவிப்பு நெஞ்சில் எழ என்னால் அந்த இடத்தில் குந்தி இருக்க முடியாமல் இருக்கிறது. மூன்று நாள் அனுஷ்டித்த பொறுமையை எண்ணி மீண்டும் என்னைச் சமாதானப்படுத்திக் கொள்கிறேன்.

சிப்பாயின் கை எனது வரிசையை நோக்கி நீளுகின்றது. ஒன்று.. இரண்டு.. மூன்று..இருபத்தி நாலு.. அடுத்தது இன்னொருவன்... பிறகு நான்.. நானேதான் உடலெல்லாம் ஏதோ ஒரு துடிப்பு.

இருபத்தைந்தாவது ஆளுடன் சிப்பாயின் கை அடுத்த வரிசைக்கு மாறுகின்றது. அப்படியானால் நான் இன்றைக்கும் போக முடியாதா? இல்லை போக வேண்டும். இல்லை போயே ஆக வேண்டும்.

இருந்த இடத்திலிருந்து எழுந்து சிப்பாயை நோக்கி ஓடுகிறேன்.' ஐயா.., ஐயா மனிசிக்கு வருத்தம் கடுமை.. கடைசிக்கட்டம் அவளை உயிரோடை பார்க்க வேணும் ஐயா ஐயா' எனது கெஞ்சல் அவனைத் திரும்பி என்னைப் பார்க்க வைக்கின்றது.

'என்னா.. என்ன வேணும்..?'

'ஐயா என்னையும் விடுங்கோ பிளீஸ்'

'போ.. போ..'

'ஐயா.. ஐயா..'

அவன் கண்களில் அனல் தெறிக்கிறது. கையில் இருந்த ஏதோ ஒன்றை என் தலைக்கு நேரே ஓங்குகிறான்.

நாலுபக்கமும் முட்கள் முளைத்திருந்த முட்கிழுவங்கம்பு என் முகத்திற்கு நேரே பூதாகரமாக வருகின்றது. சடார் சடார் என்ற ஒலியுடன் என்தலையின் மொட்டைப் பகுதியில் அது மோதுகின்றது. தலையில் முட்கள் குத்துவது போன்ற ஒரு உணர்வு. மெல்லக் கைகளால் தலையைப் பொத்திப் பிடிக்கிறேன். அப்படியே நான் நிலத்தில் குந்தி விடுகிறேன்.

யாரோ விம்மியழும் ஒலி மிகத் தொலைவிலிருந்து வருவதுபோல் கேட்கிறது. யார்.. யாரது பாக்கியமா? அப்போ நான் கொழும்புக்கு வந்து விட்டேனா? இல்லை... இல்லை... எப்படி வரமுடியும்? அப்போ நான் எங்கேயிருக்கிறேன்.

அடிவிழுந்தது நினைவுக்கு வருகின்றது. விண்விண்ணென்று தலை கொதித்து மெல்லக் கையை உயர்த்தி தலையைத் தடவ வேண்டும் போலிருக்கிறதும் கை அசைய மறுக்கிறது.

அப்படியானால்..

கைகால்களும் செயலிழந்து விட்டனவா?

இப்பாரத்தான் ஆமாம் இப்படித்தான் மன்னாரிலிருந்து வவுனியா நோக்கி பஸ்ஸில் வரும் போது தலையில் விண் விண் என்று தாங்க முடியாத வலி.

என்ன செய்வது தாங்கித்தான் ஆகவேண்டும்.

மூன்றாம் நாள் இராணுவம் என்னை உள்ளே விட்டபோது எனது தலை வேதனை நேராகவே என்னை மன்னார் வைத்தியசாலைக்கு தள்ளிச் செல்கிறது.

பரிசோதனை செய்த டாக்டரின் கீழ்ச்சொண்டு சற்று முன்பே நீளத்தலை பக்கவாட்டில் அசைக்கிறது. ஏதோ குனிந்து எழுதுகிறார். பின் நிமிர்ந்து ஒரு துண்டை எனது கையில் தந்து 'முட்கிழுவம் முள்ளு சரியான விஷம். இந்தத் துண்டைக் கொண்டு வவுனியா ஆஸ்பத்திரிக்கே போங்கோ' என்று விட்டு அவர் அடுத்த நோயாளியைப் பார்க்க அழைப்பு மணியை அடிக்கிறார்.

இந்தக் கொடிய தலைவேதனையுடன் வவுனியா போகவேண்டும் எப்படிப் போவது? என்ன செய்வது? போயே ஆக வேண்டும்.

தாங்க முடியாத வேதனையின் மத்தியிலும் எட்டுப்போட்டோக்கள் எடுத்து படிவங்கள் நிரப்பி கச்சேரிக்கு பொலிஸ்நிலையத்துக்கு என மீண்டும் மீண்டும் அலைந்து அனுமதி எடுத்து முடிக்க இரண்டு நாட்கள் காணாமல் போய்விடுகின்றன.

இடையிடையே 'ஐயோ பாவம்' என்ற சொற்கள் காதில் விழுந்தாலும் வழமையான பூஜைகள் நைவேத்தியங்கள் முறைப்படி நடந்து முடிந்து பயணம் ஆரம்பமாகிறது.

சுள் சுள் என்று உச்சந்தலையில் கண்டியிழுத்துக் குத்தும் வலி, உள்ளங்கால் நரம்பிலும் எதிரொலிக்கிறது.

முட்கிழுவ முள்ளு சரியான விஷம்.., வேலிக்கரையில் கிடந்த முட்கிழுவமுள்ளு காலில் ஏறிவிடுகின்றது. ஐயோ அம்மா என்றவாறு குதிக்காலை நிலத்தில் மிதியாதவாறு நொண்டி நொண்டி வீட்டுக்கு ஓடுகிறேன்.

என் குளறல்கள் மதிப்பிழந்து போக அம்மா காலை அமுக்கிப் பிடித்துக்கொண்டு முள்ளை மெல்ல இழுத்தெடுக்கிறாள்.

முள்ளு வெளியே வர துள்ளிக் கொண்டு முற்றம் முழுக்க ஓடித்திரிகிறேன். சோனை முட்கிழுவ முள்ளு சரியான விஷம் அப்பா

(தொடர்ச்சி 20-ம் பக்கம்)

# ஒரு பெண் தைரியமாக எதையும் செய்ய வேண்டுமென்றால் நிறையப் படிக்கணும்; நிறையச் சம்பாதிக்கணும்

- சாரதா நம்பியாரூரன்

**சென்னையிலுள்ள ராணி மேரி மகளிர் கல்லூரியின் தலைமை ஆசிரியரும், உலக நாடுகளெல்லாம் இந்து சமயம் வளர வேண்டி சொற்பொழிவுகள் ஆற்றிவரும் மறைமலை அடிகளாரின் குடும்பத்தைச் சேர்ந்தவர், திருமதி சாரதா நம்பியாரூரன் அவர்கள். சமீபத்தில் பிரான்சில் இடம்பெற்ற சர்வதேச இந்து ஒருமைப்பாட்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வருகைதந்திருந்த அவரிடம் ஈழமுரசு பெண்கள் பகுதியினரால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்களை சுருக்கமாக இங்கே தருகிறோம்.**

கேள்வி:- *வணக்கம் திருமதி சாரதா நம்பியாரூரன் அவர்களே. நீங்கள் பிரான்சிற்கு வந்துள்ள காரணத்தைக் கூற முடியுமா?*

பதில்:- வணக்கம். ஆம்! இன்று பிரான்சில் இடம்பெறும் அனைத்துலக இந்து ஒருமைப்பாட்டு மாநாட்டில் கலந்துகொள்வதற்காக சென்னையிலிருந்து வந்திருக்கிறேன்.

கேள்வி:- *நீங்கள் ஒரு சமயச் சொற்பொழிவாளர் மட்டுமல்ல, சென்னையிலுள்ள பிரபலமான மகளிர் கல்லூரி ஒன்றின் தலைமை ஆசிரியரும்கூட. நீங்கள் ஆற்றும் இவ் ஆசிரியத் தொழிலிலும் ஏதாவது இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளீர்களா?*

பதில்:- இன்று தலைமையாசிரியராக கடமையாற்றும் இவ் ராணி மேரிக் கல்லூரியில்தான் நானும் படித்தேன். ஆங்கிலேயர் இந்தியாவை ஆண்ட காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட முதல் பெண்கள் கல்லூரி என்ற பெருமை இக் கல்லூரிக்குண்டு. இது ஆரம்பிக்கப்பட்டு 82 ஆண்டுகள் ஆகின்றன. இக்கல்லூரியில் நான் 6-ம் 7-ம் வகுப்பில் படிக்கும்போதே என் மனதினுள் தீராத ஒரு வெறி. நானும் ஒரு ஆசிரியராகத்தான் வரவேண்டுமென்று. காரணம்: என்பிறந்த வீட்டிலும் சரி கணவர் வீட்டிலும் சரி எல்லோருமே ஆசிரியர்கள். அதைப்போலவே இன்று நானும் தமிழ்ப் பேராசிரியராக வந்ததையிட்டு மகிழ்ச்சியாக உள்ளேன். கிட்டத்தட்ட 30 ஆண்டுகள் இங்கு பேராசிரியராகத் தொழில் புரிந்து வருகிறேன். என் மூலம் படித்த ஏராளமான பெண்கள் என்னுடனே இன்று பேராசிரியர்களாகத் தொழில் புரிகிறார்கள். வெளி இடங்களிலும் நல்ல தொழில் புரிந்து வருகிறார்கள். இவர்களைப்போலவே இன்னும் நிறையப் பெண்களை



உருவாக்கவேண்டும் என்பதுதான் என் ஆசை.

கேள்வி:- *நீங்கள் இன்று சமுதாயத்தில் ஓர் உயர்ந்த இடத்திலுள்ள பெண். உங்கள் கணவர் இறந்து 10 வருடங்கள் ஆகின்றன. ஆனால், இன்றும் பொட்டும், பூவும் வைத்துள்ளீர்களே. இதன் மூலம் நீங்கள் சமூகத்திற்கு ஏதும் தவறான விமர்சனத்திற்கு ஆளாகவில்லையா?*

பதில்:- நம சமுதாயத்தில் கணவனை இழந்து விட்டால் அப்பெண் ஒரு சகுனத்தடை. சிலாவர் யாரும் ஒரு அலுவலாக வெளியில் போகும் போது இப் பெண் குறுக்கே சென்று விட்டால் கூட, போன காரியம் நிறைவேறாதென்ற பயம். திருமண வீடுகளிலே கலந்துகொள்கிறதிற்குக்கூட வாய்ப்பில்லாமல் செய்கின்றனர். இதைவிடக் கொடுமை அந்தக் காலத்திலே இருந்த உடன்கட்டை ஏறுகிற பழக்கம். நான் நினைக்கிறேன், அப்படி கணவருடனேயே பல பெண்கள் உடன் கட்டை ஏறுவதற்குக் காரணம், சமுதாயத்திலே கணவர் இல்லாக் காலங்களில் அப் பெண்ணை எம் சமுதாயம்படுத்தும்பாடுதான். இப்படி இவர்கள் கையில் அகப்பட்டு துன்பப்படுவதிலும் சாகிறதே மேலென்றுதான் அப் பெண்கள் எல்லாம் செத்து இருக்க வேணுமே தவிர மற்றம்படி எப் பெண்ணிற்கும் தன் உயிரை கணவனுக்காக நீக்கணும் என்ற ஆசை வந்தே இராது. என்னுடைய கணவர் கிட்டத்தட்ட 6 ஆண்டுகள் புற்று நோயால் சரியாகத் துன்பப்பட்டார். அதுமட்டுமல்ல அவர் ரோம்ப படித்தவரும். அதனால் நிறைய மனப்பக்குவம் அவரிடம் இருந்தது. இதனால் அவர் இறப்பதற்கு முன்பு என்னை அழைத்து நான் இறந்தாக் கூட நீ பூவை எடுத்து பொட்டையெடுத்து விதவை என்ற கோலத்தில் இருக்கக்கூடாது. எப்பவுமே நான் உன் பக்கத்திலேதான் இருப்பேன் என்ற நினைவோடு தைரியமாக இருக்கவேண்டும். யாராவது உன்னைத் தவறாகப் பேசினால் பரவாயில்லை. ஆரம்பத்தில் உன்னை தவறாக விமர்சித்தாலும் காலப் போக்கில் உன் பின்னாலேயே அவர்களும் வருவார்கள். இதனால் உன்னைப் போலுள்ள பல பெண்களிற்கும் துணிவு பிறக்கும் என்று கூறியிருந்தார். 'பூனைக்கு யார் மணி கட்டுவதென்று' எல்லோருமே பயந்தால் எப்படி? அதுதான் தைரியமாக நானே இவ்வாறு பூவும் பொட்டுமாக இருக்கிறேன். இன்று என்னைத் தொடர்ந்து ஏராளமான பெண்கள் இப்படித் துணிவாக சமுதாயத்தில் வாழ்ந்து வருகிறார்கள். உண்மையில் எனக்கும் வழிகாட்டியாக எழுத்தாளர்கள் சிவசங்கரியையும், அநுராதா ரமணன் போன்றவர்களையும் சொல்லலாம். ஏனெனில் அவர்களிடத்தேயும் நிறை துணிவு இருக்கிறது. ஏன் நாமே நம்மை விதவையென்று கூறி மற்றவர்களிடத்திலிருந்து பின்தள்ளி வைக்க வேண்டும். அதுமட்டுமல்ல இப்படி விதவை என்ற நிலையை நாம் எல்லோருக்கும் தெரியப்படுத்தினால் அதனால் ஆபத்துக்கள் கூடத் தோன்றலாம். அதுமட்டுமல்ல நான் இதைப்பற்றி இன்னொன்றும் சொல்கிறேன். ஒரு பெண்ணிற்கு பூவும் பொட்டும் கணவன் கொடுக்கவில்லை. ஒரு பெண் குழந்தை பிறந்தவுடனேயே அக் குழந்தையின் அம்மாதான் முதலில் ஆசையோடு பூச்சூடி பொட்டுவைத்து அழகு படுத்திப் பார்க்கிறாள். கணவன் தாலி கொடுக்கிறார், குழந்தை களைக்கொடுக்கிறார். அதனால் அவர் இறந்தால் தாலியைமட்டும் நீக்கினால் போதும். அதன்பின் அவர் விட்டுச்சென்ற பணிகளை நாம் தொடர்ந்து வெற்றியாக நடத்திச் செல்வதுதான் பெருமை. எந்தப் பெண்ணுமே அவர் இறந்தால் நானும் இறக்க வேணும் என்று நினைக்கலே கூடாது இது சரியான முட்டாள்தனம். நான் இந்த மாதிரி தைரியமாக இருந்து என் குழந்தைகளை நல்ல நிலைக்கு ஆளாக்கி இருக்கிறேன். இப்படியெல்லாம் தைரியமாக இருக்கவேணுமென்றால் முதலில் எல்லாப் பெண்களிடத்திலும் நல்ல கல்வி அறிவும் தாமே உழைச்சு நிறையப் பணத்தையும் சேகரிச்சு வைக்கிற பழக்கம் இருக்க வேண்டும். நாம் யாரிடமும் பொருளாதாரத்தில் சார்ந்து இருப்போமானால் அவர்கள் சொல்லுகிற படியெல்லாம் கேட்க வேண்டும். அதனால் நான் திரும்பித்திரும்பி சொல்லுகிறேன். ஒரு பெண் தைரியமாக எதையும் செய்யவேண்டுமானால் நிறையப் படிக்க வேண்டும். நிறையச் சம்பாதிக்க வேண்டும். எல்லோரிடமும் கட்டாயம் ஏதோ ஓர் திறமை இருக்கும். சரி எந்த வேலையும் செய்ய முடியவில்லை என்றாலும் நாலு குழந்தைகளை வீட்டில் வைச்சு பணத்திற்காக பராமரிக்கக்கொடுக்கிற தாய்மை உணர்வாவது எல்லாப் பெண்களிடத்தேயும் இருக்கும்தானே. நாம் நம் மனச்சாட்சிக்கு சரியாக நடந்தால் சரி. பிறரின் அபிப்பிராயங்களிற்காக வாழத்தேவையில்லை.

**நான் இப்ப சொல்வதைக்கேட்டு நீங்கள் கோபிக்கக்கூடாது. இந்தமாதிரி தவறை பெரும்பான்மையாகச் செய்வது உங்கள் நாட்டுப் பெண்கள். நான் இலண்டனில் இருந்தபோது என் வீட்டுக்கருகில் இலங்கைக் குடும்பங்கள் இருந்தன. ஆனால் தம் குழந்தைகளோடு மட்டும் தமிழ் பேசவேமாட்டார்கள். ஆங்கிலம் தான் கதைப்பார்கள். இதுக்கு தாத்தா பாட்டிகூட ஒத்துப்போகிறார்கள். இப்படிப் பெரியவர்கள் இவர்களே தப்புப் பண்ணினால் குழந்தைகள் எப்படித் தமிழைப் பேச முடியும்.**



**நான் நினைக்கிறேன், அப்படி கணவருடனேயே பல பெண்கள் உடன்கட்டை ஏறுவதற்குக் காரணம், சமுதாயத்திலே கணவர் இல்லாக் காலங்களில் அப் பெண்ணை எம் சமுதாயம்படுத்தும்பாடுதான்.**

கேள்வி:- *நீங்கள் எம் சமயங்களில் உள்ள இலக்கியங்களிலுள்ள பல கருத்துக்களை அங்கீகரித்து மேடைகளில் உரையாற்றி வருகிறீர்கள். ஆனால் இவ் இலக்கியங்களிலும் எம் சமயத்திலுமுள்ள சில மூடத்தனமான கொள்கைகளுக்குள்தான் இன்னும் பெண்களை எம் சமூகம் அடிமைப்படுத்தி ஆதாரமாக இருக்கிறதைப் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?*

பதில்:- நான் இவற்றை விரும்பிப் படித்தாலும் இதிலுள்ள தவறான கருத்தை ஏற்றுக்கொள்வதில்லை. ஏன் இன்றுள்ள உங்களைப் போன்ற இளம் பெண்கள் யாராவது இதை ஏற்றுக்கொள்வீர்களா என்ன? சமீபத்தில் என் மாணவி ஒருத்தி புதுக்கவிதை ஒன்றை எழுதி முதல் பரிசு பெற்றிருந்தாள். அவள் எழுதியது என்ன தெரியுமா? 'இராமனே சீதையை அன்று தீயில் இறங்கென்று சொன்னாய் அந்தச் சீதை இடத்தில் நான் இருந்திருப்பேன் என்றால். முதலில் நீ இறங்கென்று உன்னைத்தான் தீயில் இறங்கியிருப்பேன்' என்பதுதான் அக்கவிதை. உண்மைதான் எம் புராணங்கள் கதைகள் எல்லாம் அனேகம் ஆண்களால் எழுதப்பட்டதென்பதால் அவற்றின் நிறைய ஆணாதிக்கக் கருத்துக்கள் திணிக்கப்பட்டு இருக்கிறன. அதனால் எமக்கு இக்காலத்திற்கு பொருத்தமானதை மட்டும் எடுக்க வேண்டுமே தவிர எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

கேள்வி:- *பொருளாதாரத் தேடலுக்காகவோ அல்லது புலம்பெயர்ந்தோ இங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் ஏராளமான பெண்கள் தம் தமிழ் என்ற நிலையை மறந்து ஒற்றிலும் இங்குள்ள மேற்கத்தைய கலாச்சாரங்களில் இணைந்து கொண்டு தம் குழந்தைகளிற்குக்கூட தமிழ் மொழியைக் கற்றுக்கொடுப்பது கௌரவக்குறைவு என்று எண்ணுகிறார்களே? இவர்களிற்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?*

பதில்:- இவர்களை மன்னிக்கவே முடியாது. உங்களைப்போல நானும் இந்தமாதிரிப் போக்குகளைப் பார்த்து வருத்தப்பட்டு இருக்கிறேன்.



காரணம் நானும் 5 வருடங்கள் இலண்டனில் இருந்தவள்தானே. நான் இப்ப சொல்வதைக்கேட்டு நீங்கள் கோபிக்கக்கூடாது. இந்தமாதிரி தவறை பெரும்பான்மையாகச் செய்வது உங்கள் நாட்டுப் பெண்கள், ஏனெனில் அவர்கள் எல்லோருமே அனேகமாக நிறையப் படித்தவர்களும் வசதியானவர்களும் கூட. நான் இலண்டனில் இருந்தபோது என் வீட்டுக்கருகில் இலங்கைக் குடும்பங்கள் இருந்தன. அவர்கள் எல்லோருமே நன்றாகப் படித்த, வசதியானவர்கள். ஆனால் தம் குழந்தைகளோடு மட்டும் தமிழ் பேசவேமாட்டார்கள். ஆங்கிலம் தான் கதைப்பார்கள். இதுக்கு தாத்தா பாட்டிகூட ஒத்துப்போகிறார்கள். இப்படிப் பெரியவர்கள் இவர்களே தப்புப் பண்ணினால் குழந்தைகள் எப்படித் தமிழைப் பேச முடியும். அத்தோடு ஒரு குடும்பத்தில் தந்தையோடு ஒரு குழந்தை இருக்கும் நேரத்திலும் தாயோடு இருக்கும் நேரந்தான் அதிகம். ஆகவே எம் மொழியையோ எம் நாட்டுக் கலாச்சாரங்களையோ மெல்ல மெல்ல அக்குழந்தைக்கு புகட்ட வேண்டிய பொறுப்பு ஒரு அம்மாவின் கையில்தான் இருக்கின்றது. இப்படியுள்ள அனேக பெண்கள் வெளியில் செல்லும்போது குழந்தைகளை அழைத்துச் செல்லத் தயங்குகிறார்கள். இது உண்மையிலேயே பெரிய தப்பு. அவர்களை எம் கோயில்கள் கொண்டாட்டங்கள் என்று எல்லா இடத்திற்கும் அழைத்துச் சென்றால்தானே அக் குழந்தைகளிற்கும் எம் கலாச்சாரங்களைக் கொஞ்சமாவது பின்பற்ற வேணுமென்ற ஆர்வம் பிறக்கும்.

கேள்வி:- *அந்நியரும் நிறையப் பெண்கள் கல்வியறிவிலோ அல்லது பொருளாதார நிலையிலோ உயர்ந்த இடத்தில் இருந்தாலும் குடும்பத்தில் நடக்கின்ற நிகழும் ஒடுக்குமுறையை வெளியில் சொல்லத் தயங்குகிறார்கள். இவர்கள் மட்டுமல்லாது ஏனைய பெண்களும் பல வழிகளிலும் வீடுகளிலும் துன்புறுத்தப்படுகிறார்கள். இவ்வாறு இவர்களைத் துன்புறுத்தும் இவ் ஆணாதிக்கச் சமுதாயத்திற்கு நீங்கள் என்ன கூறவிரும்புகிறீர்கள்?*

பதில்:- பொதுவாகவே ஒரு குடும்பத்தில் கணவன் மனைவி என்ற இருவருமே ஒருவரையொருவர்

(தொடர்ச்சி 20-ம் பக்கம்)

இவ் வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும் **சிவநாதன் பிர்ந்தன், தீபிக் சண்முகராஜா, சிவாஜினி செல்வரட்ணம், கே.எஸ்.ர. ரூபினி** ஆகியோரை பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.




## உங்கள் கைவண்ணம்



செல்வன் பா. ஹரிபிரசாத்

இடம்: சார்சல், பிரான்ஸ்.

திலீபன் மாமா

எங்கள் திலீபன் மாமா தமிழீழத்திலே உரும்பிராயில் பிறந்தார். இவர் சிறுவயதிலே எல்லா துறையிலும் திறமையுடன் காணப்பட்டார். இவருக்கு மருத்துவக் கல்லூரியில் உயர் படிப்பு கிடைத்தும் அவர் அதை விட்டு தேச பணியில் ஈடுபட்டார். நம் விடுதலை அமைப்பு புலிகளின் அரசியல் துறையின் பொறுப்பாளர் ஆக இருந்தார். நம் திலீபன் அண்ணா நம் மண்ணிற்காக உண்ணாவிரதம் இருந்து நம் தமிழீழ மண்ணில் வீரமரணமடைந்தார். அவரது வழியை இளம் தமிழர்கள் நாம் பின்பற்ற வேண்டும்.

நன்றி.



செல்வி துர்க்கா ஜெயக்குமார்

வயது - 09 (03.04.1989)

இடம்: 48155 Münster, Germany.

வகுப்பு: 4-ம் ஆண்டு Münster தமிழாலயம்

புத்திமான் பலவான்

[illegible]

புத்தி இருந்தால் எந்த ஆபத்திலும் தப்பித்துக் கொள்ளலாம்

## குட்டிக் கதை படிப்போம்

# இரண்டு காகங்கள்

இரண்டு காகங்கள், தம்மில் யார் பெரியவர் என்று சண்டையிட்டுக் கொண்டன. இவர்களது சண்டையைப் பார்த்த பருந்து ஒன்று, இருவருக்கிடையே சமரசம் செய்ய முன்வந்தது. இரண்டு பேரில் உயரமாகப் பறப்பவர் யாரோ, அவரே பெரியவர் என்று கூறியது.

'உயரமாகப் பறப்பது பெரிய விஷயமா? என்ற இரண்டு காகங்களும். ஒரு காலத்தில் பறப்பதற்குத் தயாராயின.

உடனே பருந்து குறுக்கிட்டு, 'உயரமாக பறப்பது என்றால், வெறுமனே பறப்பதா? அப்படியல்ல; இருவரும் ஆளுக்கொரு பையை எடுத்துக் கொண்டு பறக்க வேண்டும்' என்றது.

'அதற்கென்ன... பையை எடுத்துக்கொண்டே பறக்கிறோம்' என்றன இரண்டு காகங்களும்.

'வெறும்... பையினுள் எதையாவது நிரப்பிக் கொண்டு பறப்பதில்தான், உங்கள் சாமர்த்தியம் அடங்கியிருக்கிறது' என்றது பருந்து.

உடனே இரண்டு காகங்களும் ஆளுக்கொரு பையைத் தயார் செய்து கொண்டன. ஒரு காகம் பை நிறைய இலவம்பஞ்சையும், இன்னொரு காகம் உப்பையும் நிரப்பிக்கொண்டு பறக்க ஆரம்பித்தன.

அப்போது பெரும் மழை பிடித்துக்கொண்டது. பையிலிருந்த உப்பு மழையில் கரைந்து ஒழுகி, வெறும் பையே மிஞ்சிற்று. அதனால் அந்தக் காகத்திற்கு உயரத்துக்குப் பறப்பதற்கு இலகுவாயிற்று.

பஞ்சு நிரம்பிய பையோ மழை நீரில் நனைந்து, கனம் அதிகரித்து கீழே தொங்கியது. ஓர் அடிகூட மேலே பறக்க முடியாமல் திணறியது அந்தக் காகம். வெகுவேகமாக தரையை நோக்கியும் இறங்கியது. அந்தக் காகத்தைப் பார்த்த பருந்து கேட்டது:



'என்ன இவ்வளவு சீக்கிரம், தரைக்கு வந்து விட்டாய்?'

'மழை பெய்து பை கனத்து விட்டதால் வேறு என்ன செய்ய?'

'உன்னை, யார் பஞ்சை நிரப்பிக் கொள்ளச் சொன்னது?'

'நீதானே, ஏதாவது நிரப்பிக்கொள்ள வேண்டும் என்று சொன்னாய்'

'உண்மைதான்... நான் சொன்ன சமயத்தில் இருந்த பருவ நிலையை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டாமா? பார்... அந்தக் காகம் புத்திசாலித்தனமாக மழை வரும் என்று அறிந்து உப்பை நிரப்பிக்கொண்டது. அதனால், மழைநீரில் உப்பு கரைந்தது. பை மட்டுமே மிஞ்சியதால் உயர உயரப் போய்க் கொண்டிருக்கிறது. பலசாலியானதால் மட்டுமே யாரும் பெரியவர்களாகிவிட முடியாது. புத்திசாலித்தனமானதாகவும் இருக்கத் தெரிய வேண்டும். அவர்களால்தான் பெரியவர்களாய் இருக்க முடியும்' என்று பருந்து அந்தக் காகத்திற்கு புத்திமதி சொன்னது.

- பாலை சந்திரன்

## கவிதை முற்றம்



செல்வி துஷி தியாகராஜா

வயது: 13 (20.03.1986)

இடம்: சுவிஸ்

**சிறுவர் பாடல்**

சின்னஞ் சிறு பூக்கள் — நாங்கள்
சிரித்துப்பாடும் குயில்கள் — நாங்கள்
அன்பில் நீந்தும் மீன்கள் — நாங்கள்
ஆட்டம் போடும் மயில்கள் — நாங்கள்
(சின்னஞ் சிறு பூக்கள்)

அன்புடன் வாழ்வோமே — தமிழ்
பண்புடன் வாழ்வோமே
அன்னிய தேசத்திலும் — நம்
அன்னை மொழி பயில்வோமே
(சின்னஞ் சிறு பூக்கள்)

ஊர்விட்டு வெளியூர் வந்தும் — ஊர்ச்
சொல்லி கேட்டு வாழுகின்றோம்
உண்ணும்போதும் உறங்கும் போதும் — ஊரை
எண்ணிக் கலங்குகின்றோம்
(சின்னஞ் சிறு பூக்கள்)

சொந்த வீடு போனால் — என்ன
சொத்து சுகம் அழிந்தால் — என்ன
சேர்ந்து வாழும் வாழ்க்கை — போல
சொர்க்கம் இங்கு கிடைத்திடுமா?
(சின்னஞ் சிறு பூக்கள்)

ஊருக்குப் போகவேண்டும் — எங்கள்
கனவுகள் பலிக்கவேண்டும்
புலிப்படை ஆளவேண்டும் — வானில்
புலிக்கொடி பறக்கவேண்டும்.
(சின்னஞ்சிறு பூக்கள்)

## உலகக் கிண்ணம் யாருக்கு?



மு.எஸ். பாலசிங்கன், தமிழ்நாடு

## தகவல் முற்றம்

### கங்காரு

#### பெயர் எப்படி வந்தது?



அவுஸ்திரேலிய மிருகமான கங்காருவுக்கு அந்தப்பெயர் வந்தவிதம் வேடிக்கையானது. முதல் முதல் அவுஸ்திரேலியாவில் அதை ஆராயும் பொருட்டு வந்திறங்கியவர்கள் அங்கு ஒரு விசித்திரமான மிருகத்தைக் கண்டார்கள். அங்கிருந்த ஆதிவாசியை அது என்ன மிருகமென்று கேட்டிருக்கிறார்கள். அந்த ஆதிவாசி 'கங்காரு' என்றானாம். 'கங்காரு' என்றால், அவர்கள் மொழியில் "நீங்கள் என்ன கேட்கிறீர்கள் என்று எனக்கு விளங்கவில்லை" என்று அர்த்தமாம்!

புதிதாய் வந்தவர்கள் அந்த மிருகத்தின் பெயரே அதுதான் என நினைத்து அன்றிலிருந்து அதைக் 'கங்காரு' என்றே அழைக்கத் தொடங்கிவிட்டார்களாம்!

சாளரம்

அரங்கம் இருட்டாக இருக்கிறது. நடுவில் வெள்ளைத் திரை. சுமாரான அளவில். பின்னால் 'போகஸ்' லைட் வெளிச்சம். அதற்கிடையில் தோலினால் செய்யப்பட்ட வண்ணமயமான பாவைகள் அங்குமிங்கும் நகர்கின்றன. நடனமாடுகின்றன. சண்டை செய்கின்றன. அதன் பின்னணியிலிருந்து இடைக்குன்ற வரே வெவ்வேறு பாவைக் கூத்துக்களை அசைத்தபடி பேசுகிறார். இராமாயணக்காட்சி நடக்கிறது. முன்னால் ஒரு கருதிப் பெட்டி தாளத்திற்கு 'டோலக்' குடன் காட்சி காட்சியாக நகர்கிறது. இராமாயணம் 'கலைஞர்களின் திரை' என்று சொல்வார்கள். ஒவ்வொன்றும் ஒரு பாத்திரம். அதற்குரிய காட்சிக்கேற்பத் தேவை அவசரமாகத் திரையில் நடமாட வைத்து வசனங்களையும் பேசுகிறார். திரைக்குப் பின்னால் பார்த்தால் துரித கதியில் எல்லாம் நடக்கிறது. பார்வையாளர்களுக்காக வெவ்வேறு வகைகளில் அசைவுகள் தொடர்ந்து வாசித்து நடக்க ராவின் குடும்பமே விசேஷம். ஜெயராம்ராவிடமும் 1500 தோல் பாவைகள் வரை இருக்கின்றன. இராமாயணத்துடன் மயில் ராவண கதையை யும் சேர்த்து ஏழு காண்டங்களாக நடத்துகிறார்கள். கூடவே நல்லதங்காள், அரிச்சந்திரன், பவளக்கொடி, இரண்ய ஸம்ஹாரம் கதைகளும் கூத்தாக நடக்கின்றன. இராவணனின் பத்துத் தலை அவதாரம் பல வகையான வண்ணக் கிரீடங்களுடன் பார்க்க வசீகரமாக இருக்கிறது. ஆனால் இந்தக் கூத்தில் இருக்கிற வசீகரம் ஜெயராம் ராவ் வாழ்க்கையில் இல்லை.

'நாடோடி வாழ்க்கைதான் எங்களுடையது. ஒவ்வொரு கிராமமாக இந்தக் கூத்தை

# அற்பாயுசுடன் - தோற்பாவைக்கூத்து

கலாம் தோற்பாவைக் கூத்துத் திரையை அரிக்கேனில் பொருத்துகிறான்.

அந்தக் காலத்தில் கலைஞர்களின் திரை சற்றுப் பெரிய அளவில் டி.வி. பார்த்த மாதிரி திரை. நடிகர்களுக்குப் பதில் இதில் சுடுபட்டிருக்கிறது. மனைவி பாண்டியம்மாள் திரைக்கு முன்னால் உட்கார்ந்து, குழந்தை அடிக்கடி அழைத்து, அவரது விரல்களால் சமாதானப்படுத்தியபடி கருதிப்பெட்டி வாசித்துக் கொண்டு இடையிடையே



இதில் தோல் பொம்மைகள். இதுதான் தோற்பாவைக் கூத்து தமிழ்நாட்டின் பாரம்பரியத்துடன் இணைந்த கலை வடிவம் அழிந்து விட்ட இந்தத் தொன்மையான கலையை இன்றும் வாழவைத்துக்கொண்டிருப்பவர்கள் குறிப்பிட்ட சில கலைஞர்களே.

ஜெயராம்ராவுக்கு முப்பத்தாறு வயதாகிறது. பிசுவும் உடைசலான தோற்றத்துடன் இருக்கும் தோற்பாவைக் கூத்துக்கலைஞர். பரம்பரையாக தோல்பாவைக் கூத்துதான் தொழில். கூத்தின் வசனங்களெல்லாம் சிறுவயதிலிருந்தே மனப்பாடமாகிவிட்டது. எப்போதும் சோர்வுடன் இருக்கிற மாதிரியான ஜெயராம்ராவ், கூத்து நடக்கும்போது திரைக்குப் பின்னால் போனதும் சுறுசுறுப்பாகி விடுகிறார். பக்கத்தில் நூற்றுக்கணக்கான தோல் பாவைகள் இறைந்து கிடக்கின்றன. நல்ல கீச்சுக்குரலில் பாடுகிறார். ராவின் அண்ணன் 'டோலக்' வாசிக்கிறார். இசைக்குப் பின்னால் ஒரு குழந்தை அந்தந்தக் காட்சிக்கேற்ப தோல் பாவைகளை தேடியெடுத்துக் கொடுக்கிறது. குடும்பமே இந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தாலும், கூத்துக்கு ஆதரவில்லாமல் போன வெறுமை ஜெயராம்ராவின் முகத்தில் பிரதிபலிக்கிறது. கூடவே வைத்திருக்கின்ற பழைய தகரப் பெட்டி நிறைய விதவிதமான தோல் பாவைகள். ஆட்டுத் தோலில் செய்யப்பட்டிருப்பவை. ஆட்டுத்தோலைப் பதப்படுத்தி வெட்டி, இதற்கென்று தனியான வர்ணங்களைத் தேர்ந்தெடுத்து உருவாக்குகிறார்கள். பாவைகளின் கை, கால்கள், தலை எல்லாம் தனியாக அசைகின்றன. நடுவில் ஒரு குச்சி. தொழில் நுணுக்கத்துடன் உருவான இந்தத் தோல் பாவைகள் தமிழ் நாட்டுக்கே உரிய

நடத்திக்கிட்டே போவோம். ஒரு கிராமத்தில் ஒரு மாதம் தங்கி நடத்துவோம். ஊர்க்காரர்கள் அரிசி, பருப்பு, வேட்டி, துணி எல்லாம் கொடுப்பார்கள். ஒவ்வொரு கிராமத்திலேயும் 'டெண்ட்' அடித்துத் தங்குவோம். பிறகு இன்னொரு கிராமத்துக்குப் போவோம். எங்க தாத்தா காலத்தில் தலைச் சுமையாகத்தான் எல்லாப்பொருட்களையும் இன்னொரு கிராமத்திற்குக் கொண்டு போவோம். எங்க அப்பா காலத்தில் மாட்டுவண்டியில் கொண்டு போய்க்கிட்டிருந்தோம். வருமானம் போதவில்லை. மாடுகளைப் பராமரிக்க முடியவில்லை. அதன் பிறகு நானும் எங்க அண்ணனும்தான் மாட்டுவண்டியிலே சாமான்களைப் போட்டு மாடில்லாமல் நாங்களே ஒவ்வொரு கிராமமாக இழுத்துக்கொண்டு போவோம். கூ வரைக்கும் இப்படித்தான். ஒருநாளைக்கு ஒருவேளை கஞ்சி கிடைத்தாலே பெரிசு. பண்டினி இருப்போம். மதுரை அரசு மியூசியத்தில் அதிகாரியாக இருக்கும் கலைமாமணி சார்தான் இன்றுவரைக்கும் வெவ்வேறு உதவிகளைச் செய்து எங்களை வாழவைத்துக் கொண்டிருக்கிறார்' என்கிறார் தாழ்ந்த குரலில் பேசும் ஜெயராம்ராவ்.

முன்பெல்லாம் சிம்னி வெளிச்சத்திலும் இப்பந்த வெளிச்சத்திலும் நடந்த தோற்பாவைக் கூத்து, இன்று 'போகஸ்' லைட் ஒளியில் நடக்கிறது. 'பெட்ரோமேக்ஸ்' லைட் வைக்கத்தான கும வருவார்கள். அதிகம் வருவது குழந்தைகள். முன்னாடி கோவில் விசேஷம்னாக்கூட எங்களைக் கூப்பிடுவார்கள். இப்போ சினிமா, டி.வி. எல்லாம் வந்துருச்சு. நாங்க இப்போ கூத்து நடத்த முடியவில்லை.'

தோல்பாவைக் கூத்துக் கலையைப் போன்ற கூத்துக் கலை ஜேர்மனி, ஜப்பான், சீனா, இலங்கை நாடுகளில் இருந்தாலும் அவை மலினப்பட்டு விடவில்லை. தங்களது நாட்டின் பாரம்பரியம் சார்ந்த கலைக்கு அவர்கள் மதிப்பும் கொடுக்கிறார்கள். தமிழ் நாட்டிலிருந்து கேரளத்திற்குப் போன தோற்பாவைக் கூத்து, இன்னும் தமிழ்மொழி வசனங்களுடன் அங்கு இயங்கிக் கொண்டிருக்கிறது. கேரளத்திலிருந்து அந்தக் கலைஞர்கள் 'தாஷ்கெண்ட்' வரை போயிருக்கிறார்கள் கூத்து நடத்த. அங்குள்ள கூத்துக் கலைஞருக்குச் சங்கீத நாடக அகாடெமி விருது கிடைத்திருக்கிறது. ஆனால் இங்கே?

நல்லதங்காள், அரிச்சந்திரன், பவளக்கொடி, இரண்ய ஸம்ஹாரம் கதைகளும் கூத்தாக நடக்கின்றன. இராவணனின் பத்துத் தலை அவதாரம் பல வகையான வண்ணக் கிரீடங்களுடன் பார்க்க வசீகரமாக இருக்கிறது. ஆனால் இந்தக் கூத்தில் இருக்கிற வசீகரம் ஜெயராம் ராவ் வாழ்க்கையில் இல்லை.

கிராமங்களில் நடத்துவோம். ஒவ்வொரு கிராமத்துக்கும் போனதும் சின்னதாக சர்க்கஸ் கூடாரம் மாதிரி 'டெண்ட்' போடுவோம். உள்ளே நுழைகிறவர்களுக்கு 50 காசு கட்டணம். ஐம்பது, அறுபது பேர் வரைக்

தமிழகத்தின் தோற்பாவைக் கூத்து பற்றி ஆய்வு செய்துள்ள தஞ்சைப் பல்கலைக் கழகப் பேராசிரியரான டாக்டர். மு. ராமசாமி தெரிவிக்கிற தகவல்கள் அதிர்ச்சியூட்டும்படி இருக்கின்றன. 'இது ஒரு குடும்பக் கலை. இதில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் போதிய வருமானம் இல்லை. அவர்களுக்கு வேறு தொழில் எதுவும் தெரியாது. ஆகவே இவர்களில் சிலர் சிக்னாட் டான்ஸ் நடத்துமளவுக்கும் சிலர் விபசாரம் நடத்துமளவுக்கும் போய்விடுகிறார்கள்' என்கிறார் இவர். அபூர்வமான நமது பாரம்பரியம் சார்ந்த கலையைத் தன்வசம் வைத்திருக்கின்ற கலைஞர்களை நாம் எந்தத் திசையில் விரட்டிக் கொண்டிருக்கின்றோம்?

இறுதியாகத் தோல் பாவைக்கூத்து பற்றி ஏற்கனவே எழுதியிருக்கும் வெங்கடசாமி நாதனின் சில வார்த்தைகள். 'நமக்கு கலைகள் பற்றிய பிரக்ஞை இருக்குமானால் இப்படி நம் பாரம்பரியக்கலைச் சொத்துக்களை அலட்சியப்படுத்தமாட்டோம். அவமானப்படுத்த மாட்டோம்.'

நன்றி:
தமிழர்கள் மறந்ததும் மறக்காததும்

நாற்று
இளம் ஆக்கங்கள்

## தேடல்கள்

எம்மண்ணில்... பழுத்துப்போனவேலிப்
பூவரசம் இலைகளிலும் - கிடுகு மறைப்பில்
முடங்கிப்போன முதியவரிலும் - வயலோரம்
சாய்ந்துபோன வாழையிலும் - கடற்கரையில்
அனாதையாய்ப்போன சிறுவனிலும் - எதைத்
தேடுகின்றாய் நிலவே?

ஓலைக்குடிசையில் .... சொந்தவீட்டை
இழந்த சோகத்திலும் - வந்த வழியில்
மகனைத் தொலைத்த தாயிலும் - எந்த
திசையும் புரியாத அழும் சேயிலும் - அந்த
விடியாத இருள் பொழுதிலும் - எதைத்
தேடுகின்றாய் நிலவே?

மாரிச் மத்தியில் .... அம்மனுக்கு விழா
எடுத்த நாட்களிலும் - அதை இராணுவமே
ஆட்படுத்திய கணங்களிலும் - அடியவர்கள்
விழியில் சாவைச் சுமந்த நிமிடங்களிலும் —அதையும்
மீறி குருதி சொரிந்த காலங்களிலும் - எதைத்
தேடுகின்றாய் நிலவே?

உன் தேடல்களில்.. எல்லாமே அசாதாரணமாய் உணர்ந்து -
என்றுமே
ரணங்களாய் கண்டாய்-ஆனாலும்
புலிவீரர்களின் செங்குருதி வேள்வியில் —தமிழீழம்
மலர்வதைக்கண்டு - நீ வியந்த செய்தியை மட்டும்
உலகிற்கு சொல்லிவிடு நிலவே!

- லதா உதயன்
சுவிஸ்

# மழைக்காலம் வந்துவிட்டால் ஃப்ளூ காய்ச்சலும் வரும்

மழைகாலம் வந்துவிட்டாலே போதும், மக்களுக்குத் 'தடிமக் காய்ச்சல்' தொடங்கிவிடும். குறிப்பாக நவம்பர், டிசம்பர் மாதங்களில் குளிரகவேல்லும் ஆங்காங்கே சில்லப்புறமாக இந்தக் காய்ச்சல் காணப்படும். ஃப்ளூகாய்ச்சல் (Flu Fever) இன்ஃப்ளுவன்சா (Influenza) 'வைரஸ் காய்ச்சல்' (Virus Fever) என்று பல பெயர்களில் அழைக்கப்படுவது இந்தக் காய்ச்சல் தொற்று நோயைச் சேர்ந்தது.

இந்த நோய் மற்ற தொற்று நோய்களைப் போல ஒரே வகைக் கிருமிகளால் மட்டும் ஏற்படுவதில்லை. பலவகைக் கிருமிகளால் ஏற்படுகிறது. 'ஆர்த்தோ மிக்சோ வைரஸ்' (Orthomyxo-virus) வகையைச் சார்ந்த இன்றில் தொற்றிக் கொண்டுவிடும்.

நம் வீடுகளில் ஒரே அறையில் தான் பெரியவர்களும், குழந்தைகளும் தூங்குவது வழக்கம். இதனால், வீட்டில் ஒருவருக்குத் தடிமக்காய்ச்சல் வந்து விட்டால் வீட்டிலுள்ள மற்றவர்களுக்கும் அது விரைவாகப் பரவி விடும்.

பஸ், ரயில் பிரயாணங்களின் போதும், மக்கள் நெருக்கமாகக் கூடுகிற சந்தை, சினிமா தியேட்டர், திருவிழா ஊர்வலம் போன்ற இடங்களில் இருப்பவர்கள் மூலமாக தடிமக்காய்ச்சல் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு சுவாசக் காற்று வழியாக மிக எளிதில் பரவி விடும்.

இந்தக் கிருமிகள் உடம்புக்குள் நுழைந்த இரு நாட்களிலேயே போதிய அளவுக்கு எண்ணிக்

**நோய் எதிர்ப்பு சக்தி இல்லாதவர்களுக்கு ஊட்டச்சத்து குறைந்தவர்களுக்கு சுகாதாரம் இல்லாத இடங்களில் வசிப்பவர்களுக்கு மிக நெருக்கமான இடங்களில் வாழும் குழந்தைகளுக்கு தடிமக்காய்ச்சல் சில சிக்கல்களை உருவாக்கும்.**

ஃப்ளுவென்சா வைரஸ் கிருமிகள் தடிமக் காய்ச்சலுக்கு முக்கிய காரணம். இதில் அ, ஆ, இ, என்று மூன்று வகைக் கிருமிகள் உண்டு. மூன்றும் தனித்தனியாகவோ அல்லது ஒன்று சேர்ந்தோ ஒரு வரைத் தாக்கலாம்.

இந்தக் கிருமிகள் குளிர்காலத்தில் நீண்ட காலம் உயிர் வாழக் கூடியவை. வெயிலில் இவை சீக்கிரமே மடிந்துவிடும். உடைகள், உணவுப்பண்டங்கள், உணவுப் பாத்திரங்களில் இவைகளில் ஒட்டிக் கொண்டு சுமார் ஒரு வாரம் வரை உணவின்றி உயிர் வாழும். அச்சமயங்களில் அயோடின், லீசோல், பீனாமாயில், ஹைபோ போன்ற கிருமி நாசினிகளால் இந்தக் கிருமிகளைக் கொன்று விடலாம்.

தடிமக்காய்ச்சல் உள்ள ஒரு நோயாளியின் மூக்கு, வாய், தொண்டை, சுவாசக்குழல்கள், காற்றுப்பைகள் ஆகியவற்றில் இந் நோய்க் கிருமிகள் பெருவாரியாக வாசம் செய்யும். இப்போது அந்த நோயாளி தும்மினாலோ, இருமினாலோ அல்லது மூக்கைச் சிந்தினாலோ அருகிலிருக்கும் நபர்களுக்கு இவை எளி

கையில் பெருகி சுவாசக் குழாய்களையும், சுவாசப் பைகளையும் தாக்குகின்றன. பிறகு இரத்தத்தின் மூலம் உடம்பின் அனைத்துப் பகுதிகளுக்கும் பரவுகின்றன. இதனால் உடனடியாகக் காய்ச்சல் உண்டாகின்றது. துவக்கத்திலேயே இந்தக் காய்ச்சல் 102 டிகிரி F என்ற அளவுக்கு சென்றுவிடும்.

காய்ச்சலோடு தலைவலி, உடம்புவலி, கை, கால், வலி கடுமையாக இருக்கும். மூக்கு ஒழுகும், தும்மல் அடிக்கடி வரும். உடம்பு அசதியாக இருக்கும், பசிக்காது. சளி இல்லாத வறட்டு இருமல் தொல்லை கொடுக்கும். இருமலின்போது தொண்டை, அடித்தொண்டை, மார்புப் பகுதிகள் வலிக்கும்.

பொதுவாக மேற்சொன்ன அறிகுறிகள் எல்லாமே மூன்று நாட்களுக்கு மிகக் கடுமையாக இருக்கும். நெருக்கு குளிர் நடுக்கக் காய்ச்சல் வந்து 'மலேரியா' வாக இருக்குமோ என்ற சந்தேகத்தை எழுப்பலாம். ஆனால் நான்காம் நாளிலிருந்து காய்ச்சலின் கடுமை குறைந்து கொண்டே வந்து, ஏழாம் நாளில் காய்ச்சல் முழுமையாக குணமாகி விடும்.

வயதானவர்களும், பேறும் சில நாட்களுக்கு உடல் தளர்வாக இருக்கும். வறட்டு இருமல் சிறிது கஷ்டப்படுத்தும். பத்தாம் நாளில் அந்தமாதிரி எல்லா அறிகுறிகளும் மறைந்து விடும்.

தடிமக் காய்ச்சலால் பெரிய



வர்களுக்கு எத்தவித சிக்கலும் உண்டாவதில்லை. ஆனால் குழந்தைகளுக்கு அப்படி இல்லை. நோய் எதிர்ப்பு சக்தி இல்லாதவர்களுக்கு, ஊட்டச்சத்து குறைந்தவர்களுக்கு சுகாதாரம் இல்லாத இடங்களில் வசிப்பவர்களுக்கு மிக நெருக்கமான இடங்களில் வாழும் குழந்தைகளுக்கு தடிமக் காய்ச்சல் சில சிக்கல்களை உருவாக்கும். அவற்றை தாய்மார்கள் அவசியம் அறிந்து வைத்திருக்க வேண்டும்.

குழந்தைகள் அழுக்கடைந்தும் போதும், இருமும்போதும் கிருமிகள் தொண்டைக்கும் காற்றுப்பைகளுக்கும் வேகமாகப் பரவும். அப்போது எளிய நிலையில் சளியை வெளியேற்ற முடியாமல் போய், காற்றில் கலந்து வரும்

பக்டீரியா கிருமிகள் குழந்தையைத் தாக்குவதால் நெஞ்சில் சளி கட்டும் 'பிராங்கைட்டிஸ்' (Bronchitis) என்ற சுவாசக் குழாய் அழற்சி நோய் ஏற்படும்.

சில குழந்தைகளுக்கு 'நிமோனியா' (Pneumonia) என்ற நோய் தாக்கும் இது மிகவும் ஆபத்தான நோய். இதனால் பாதிக்கப்பட்ட குழந்தைக்கு காய்ச்சல் இரு மடங்கு அளவுக்கு மீறி இருக்கும். சுவாசிப்பது சிரமப்படும். இளைப்பு வரும்.

சைக்குழந்தைகளுக்கு தடிமக் காய்ச்சல் ஏற்பட்டால் Bronchio-litis எனப்படும் மூச்சு நுண் குழாய் அழற்சிநோய் உண்டாகும். இன்னும் சிலருக்கு 'நச்சு இருதயத்தசை அழற்சி' (Toxic Myocarditis) என்ற உயிருக்கு ஆபத்தான நோயும் ஏற்படுவதுண்டு.

ஆகவே, இந்த நோயை 'சாதாரணத் தடிமக் காய்ச்சல்தானே!' என்று அலட்சியமாக இருக்காமல், உடனுக்குடன் மருத்துவ ஆலோசனை பெற்றுக் கொள்வது நல்லது.

தடிமக் காய்ச்சலைப் பொறுத்த வரை எந்தப் பரிசோதனையும் தேவையில்லை. நோயின் அறிகுறிகளை வைத்தே இதனை எளிதில் தீர்மானித்து விடலாம். ஒரு வாரத்திற்கு மேல் காய்ச்சல் ஒருவருக்கு நீடிக்குமானால் வேறு காய்ச்சலாக இருக்குமோ என்ற சந்தேகத்தில் மருத்துவர்கள் இரத்தப் பரிசோதனைகளை செய்வார்கள். மற்றபடி தடிமக் காய்ச்சலுக்கு இரத்தப் பரிசோதனைகள் தேவை இல்லை.

தடிமக் காய்ச்சலுக்கென்று எந்த ஒரு பிரத்தியேக சிகிச்சையும் இல்லை. காய்ச்சலைக் குறைக்கவும், உடல்வலி, தலைவலி, போன்ற வலிகளைக் கட்டுப்படுத்தவும் வலி நிவாரணிகளை மருத்துவர்கள் தருவார்கள். மூக்கு ஒழுகுதல், தும்மல், இருமல், ஆகியவற்றை குறைக்க 'ஹிஸ்டமின் எதிர்ப்புகளைத்' (Anti Histamines) தருவார்கள். பாக்டீரியா கிருமிகள் தொற்று வதைத் தடுக்க கருதிய 'நுண்ணுயிர்க்கொல்லி' (Antibiotic) மருந்தையும் சேர்த்துத் தருவார்கள்.

தடிமக்காய்ச்சலைப் பொறுத்த வரை மருத்துவத் துறையில் ஒரு பழமொழி சொல்லப்படுவதுண்டு. இந்தக் காய்ச்சலுக்கு சிகிச்சை பெற்றால் ஏழு நாட்களில் குணமாகும். சிகிச்சை பெறாவிட்டால் ஒரு வாரத்தில் குணமாகும் என்பதுதான் அந்தப் பழமொழி. அதாவது இதற்கு சிகிச்சை பெற்றாலும் சரி, பெறாவிட்டாலும் சரி ஒரு வாரத்தில் தானாகவே சரியாகி விடக் கூடியது என்பது இதன் பொருள்.

தடிமக் காச்சலைத் தவிர்க்க தடுப்பூசி உள்ளது. 'இன்ஃப்ளுவென்சா வாக்சின்' (Influenza Vaccine) என்பது அதன் பெயர். பெரியவர்களைவிட இது குழந்தைகளுக்கு நல்ல பலனைத் தரும். இரண்டு வார இடைவெளியில் இரண்டு ஊசிகள் போட்டுக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு வருடமும் இந்த ஊசியைப் போட வேண்டியது அவசியம். இது தான் இந்தத் தடுப்பூசியின் உள்ள பெருங் குறை.

'முட்டை ஒவ்வாமை' உள்ளவர்கள் இந்த தடுப்பூசியை பயன்படுத்தக் கூடாது. காரணம், இந்தத் தடுப்பூசி மருந்து கோழி முட்டைகளிலிருந்து தான் தயாரிக்கப்படுகிறது.

நன்றி: தெஹல்த்

அனைத்து அச்சு வேலைகளும் குறித்த தவணையில் மிகக் குறைந்த விலையில் சிறந்த தரத்துடன் செய்து கொடுக்கப்படும்.

உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்

தமிழ் அச்சகம்

(மக்கள் கடை முன்பாக)

இலண்டன், இந்தியா, இலங்கை, பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் 500-க்கு மேற்பட்ட திருமண அழைப்பிதழ் மாதிரிகள் உங்கள் தெரிவிற்காக உள்ளன.

திங்கள் முதல் - சனி வரை 09.00 – 22.00 மணிவரை

60, Rue Louis Blanc, 75010 Paris

Tel & Fax: 01 42 09 60 64 ou 06 13 12 35 42

24 மணி நேரத்தில் உங்கள் அழைப்பிதழ்கள் அனைத்தும் Print செய்து கொடுக்கப்படும்.

தமிழ் அச்சகத்தின் கிளை நிறுவனம் Marcadet Poissonniers இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

20 Rue Labat, 75018 Paris

M°: Marcadet Poissonniers

அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு!

திருமண அழைப்பிதழ், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள், பிறந்த தின விழா அழைப்பிதழ், முதல் நன்மை அழைப்பிதழ், சேக் பெட்டிகள், மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

அழைப்பிதழ் மாதிரிகள் தெரிவிற்காக இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

## முட்கிழுவங்கம்பு

பரிவுடன் அழைக்கிறாள்.

அம்மா ஆதரவாக மடியில் படுத்த அக்கா காலை இறுக்கிப் பிடிக்க உப்புக்கல்லை முள்ளுக்குத்திய இடத்தில் வைத்து நெருப்புக் கொள்ளியால் சுட..

ஐயோ.. என்று கத்துகிறேன்.

யாருமே என்னை அசைய விடவில்லை. அரைக்கத்தடிக்க உப்புக்கல்லுச்சூடு நடக்கிறது. மன்னார் வவுனியா பஸ்சில் யார் உப்புக்கல்லு வைத்துச் சுடுவது?

கிரீச்... கிரீச்...

அது என்ன சத்தம் ஓ நோயாளிகளை ஏற்றித் தள்ளிச் செல்லும் ஸ்ரெச்சரின் சத்தமல்லவா..

இப்படித்தான் இப்படித்தான் என்னையும் தள்ளுவண்டியில் படுத்தி சத்திர சிகிச்சை அறைக்குக் கொண்டு சென்றார்கள். ஓ அங்கு நாரியில் ஒரு ஊசி போட்டதும் மெல்லமெல்ல நினைவு தப்பி..!

அப்போ நான் வவுனியா ஆஸ்பத்திரியில் படுத்திருக்கிறேனா..

பார்க்கியம்.. நான்..

கொழும்பு.. வவுனியா நூற்று அறுபது மைல்கள் முட்கிழுவங்கம்புகள். உயிரோடு இருப்பாளா அல்லது என்னைக் கண்ணால் காணாமலே களத்தை மயானத்தில்.

பாக்கியம் பாக்கியம்.. என் குரல் மெல்ல சுரஸ்வரத்தில் எங்கோ ஆழக்கிணற்றிலிருந்து எழுவது போலிருக்கின்றது.

மீண்டும் எங்கோ நழுவி எதையோ பிடிக்க முயல்கிறேன். முடியவில்லை இல்லை பிடித்தே ஆகவேண்டும் முடிய வில்லை.

ஐயோ... ஐயோ..

உங்களுக்கு இப்ப சுகம்.. நீங்கள் வீட்டை போகலாம் டாக்டரின் வார்த்தைகள் ஒரு விதத்தில் நிம்மதியளிக்கின்றன.

இன்று கொழும்புக்குப் புறப்படவேண்டும் என்றாலும் வழியில் எத்தனை முட்கிழுவங்கம்புகளோ என்றாலும் தாண்டத்தான் வேண்டும். தாண்டிச் செல்லத்தான் வேண்டும்.

மெல்ல வாய்க்குள் முணுமுணுக்கிறேன். பாக்கியம்.. நீ... பெருமூச்சுடன் கட்டிலை விட்டு இறங்குகிறேன்.

*நன்றி: உலகத் தமிழர்*

---

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

### நிறவாதம்...

ஸ். தமிழரான சசிதரன் நிற வெறியால் லண்டனில் கொலை செய்யப்படுகிறார். ஸ்ரீபன் லோரன்ஸ் எனும் ஆபிரிக்கர் கொலை செய்யப்படுகிறார்.

பிரம்போர்ட்டில் முஸ்லிம் பெண்கள் பாலியல் பலாத்கா ரத்துக்கு ஆளாகிறார்கள். டவர் ஹாம் லெட்ஸ்சில் பங்களாதேஷ் மக்களின் வீடுகள் எரியூட்டப் படுகிறது. இத்தகைய கொடூரமும் குறையாத நிறவெறிக்கும் இன வெறிக்கும் எதிரான யுத்தம் என்பது தமிழ் சமூகத்தின் உள் ளும் வெளியிலும் நடத்தப்பட வேண்டும்.

ஆசியப் பெண்கள் தமது வாழ் நிலை அனுபவத்தின் மூலம் இதை உணர்ந்திருக்கிறார்கள். தமிழ் மொழியில் பாமாவின் நாவில் சிறுகதைகளில் தீண்டா மைக்கு எதிரான குரல் பதிவா கியிருக்கிற மாதிரிதான் சர்வ தேசிய இலக்கியத்தில் ஜோர்தா பட் கில்லர் நவீத் என எண் ணற்ற ஆசியப் பெண்களின் குரல்கள் ஐரோப்பிய, அமெ ரிக்க நிறவாதத்திற்கு எதிராகப் பதிவாகியிருக்கிறது.

இந்தப் பொதுப் பிரக்ஞையி லிருந்து அறைகூவல் விடுகிறாள் இங்கிலாந்தில் வாழும் ஆசியப் பெண்ணான மீனாபாகாண்:

**'நான் ஆசியா'**
**'எனது இடத்தை நான் பிர கடனப்படுத்துகிறேன்.'**
**'நான் என்னைக் கண்டு கொண்டேன்'**
**'நான் ஆபிரிக்கா'**
**இனி நீங்கள் என்னை உப யோகப் படுத்திக்கொள்ள முடியாது.**
**நான் ஆசியப் பெண்.**
**சமுத்திரத்தைப் போன்று விசு வாசமானவள்.**
**எனது கரையை எப்போதும் நான் அடைந்தே தீருவேன்.**

என்னை நாசிலிருந்தகாக்க கையாளுங்கள்.

---

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

### ஒரு பெண்...

புரிந்துகொண்டு ஒருவருக்கொரு வர் மதிப்பளித்து நடக்கப் பழகிக் கொள்ளவேண்டும். இதைத் தவிர்த்து இவர்களிடையே நான் பெரிது நீ பெரிதென்ற போட்டி மனப்பான்மையும் சண்டை சச்சரவுகளும் தோன்றினால் இதனால் முழுவதும் பாதிப்படைவது குழந்தைகள்தான். ஆகவே ஒரு குடும்பத்தலைவ னுக்கு பெருமை, தன்கூட இன்ப துன்பங்களில் பங்கெடுக்கும் மனை வியின் அபிப்பிராயங்களைக் காது கொடுத்துக்கேட்டு அவளின் எண்ண ஓட்டங்களிற்கு மதிப்பளித்து நடந்து கொள்வதுதான். சில ஆண்களிடத் தில் எப்போதுமே 'நாம் ஆண்' என்ற அகங்காரம் காணப்படும். சில சம யம் எத்தனையோ பெண்கள் குடி போதையில் வரும் தம் கணவனிடமிருந்தே அடி உதை நொறுக்கும் வாங்குகி றார்கள். இவ்வாறு அடிவாங்கும் பெண்களைப் பார்த்து நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். எப்ப உங் களை மதிக்காமல் அடிப்பதற்காக ஒரு ஆண்மகன் கையை ஓங்குகி றானோ, அப்பவே அவன் கையை இறுகப் பற்றி 'இதோபார் இன்று மொருதடவை இதுமாதிரி நடந்தா நான் திருப்பிப் அடித்துவிடுவேன்' என்று கூறுங்கள். மறுபடியும் அடிக்க அவன் முனைந்தானென்றால் நீங் களும் திருப்ப அடித்து விடுங்கள். நாம் பெண்கள் என்பதால் இழிவா னவர்களா என்ன?

கேள்வி:- *இறுதியாக உங்களிடம் ஒரு கேள்வி சாதனை நம்பியிருக்கும் இந்த பெண்ணை இன்னும் என்னத்தைச் சாதிக்க விரும்புகின்றீர்கள்?*

பதில்:- நான் இவ்வளவு நாளும் சாதித்ததே போதும். என் கணவ ருக்கு நல்ல மனைவியாக இருந்தி ருக்கிறேன். என் குழந்தைகளிற்கு நல்ல அம்மாவாக இருந்திருக்கி றேன். அத்துடன், என் மாணவிக ளிற்கு நல்ல ஆசிரியையாக இருந் திருக்கிறேன். இவற்றையெல்லாம் விட முக்கியம் நான் மறக்கமுடியாத அடிகளாரின் வீட்டில் வாழ்க்கைப் பட்டதால் அவர்களின் எதிர்பார்ப் பைப் போல் நல்ல சமயச் சொற் பொழிவாளராக வந்துள்ளேன். இனி என் இலட்சியம் முழுவதும் சைவ சம யத்திற்காகத் தொண்டாற்றி அதைச் செய்துகொண்டு இருக்கும் போதே இறக்க வேண்டும் என்பதுதான்.

---




போராட்டம் என்பொண்டு தொடங்க முன் னமே அகதியள் என்டு சொல்லியும் மொனம் ஏதி இங்கினை வந்து சேர்ந்திட்டம். துவக்கு களை தொடாமலிருக்காத சில பேர், ஆங்கிலத்திலை அகதி பட்டங்கள் என்று சொல்லிக் கொண்டு ஒரு மாதிரி 'மட்டையாறும்' எடுத்து இப்ப நிலையான வேலையும், சொந்தமா வீடும் வண்டு எப்பன் நிம்மதியா வாழத் தொடங்கிட்டம். இருந்தாலும் இனைக்கு பத்துப் பதி னைந்து வருசத்துக்கு முந்தி இங்கினை வாழ்ந்த எங் கடை வாழ்க்கையை நினைச்சுப்பாத்தா..... அதுகளை நினைக்க எங்கை நேரமிருக்குது! புரியை தூக்க ஒரு வின்கள் வந்து கொண்டிருக்குதாம். அதை எப்பிடி திசை திருப்பிறதெண்டு சிந்திக்கிற விஞ்ஞானிகளும் கவலைக் ளைங்கள் சரியான 'பிசி' கண்டியளோ. நாளைக்கு எப்பிடி உயிர்வாழப்போகிறமெண்டு நினைக்கிற அந்த மக்க ளைப் பற்றிச் சிந்திக்கவே நேரமில்லை. இருக்கை பதி னைந்து வருசத்துக்கு முந்தி நடந்ததைப் பற்றி எங்கை சிந்திக்கப் போறம் என்டுறியளாக்கும்...?

ஆனா பஞ்சம் போதும், பருவத்திலை பட்ட வதை போகாது. எப்பிடித்தான் நாங்கள் வளர்ந்திருந்தாலும் அந்த நேரம் இங்கை வந்து பட்டபாடுகளை மறக்க முடி யுமே? ஆரும் தெரியாத, ஊரும் தெரியாத ஐரோப்பா வுக்கை வந்து வாழ்க்கையை அமைக்கிறதெண்டா எவ் வளவு கஷ்டமெண்டு, ஆறுதலா அனுபவித்தவர்கள் ஆரோடு பேர் பறந்தெழும்பினவையை இப்ப கேட்டாலும் கதை

போய் நிக்கிறதைப் பாத்துட்டு ஆரும் 'பொலிசுக்கு' ரெலி போனடிக்க, சிலவேளை கட்டடத்துக்கை போனவை கொழும்பிலை போய்நின்று ரெலிபோன் அடிக்கிறதும் நடக்கிறதுண்டு! இளையள் தங்கட வேலையை களைந்து வகையெல்லாம் கடைப்பையைக் கட்டவேணும் எண்டதுக்காக, மற்றவையின்ரை நிலைமையைப் பற்றி உணர்ந்து கொள்ளாமல் நடந்து கொள்ளுறவை. இதெல்லாம் இங்கினை நடந்து இப்ப கொஞ்சம் குறைஞ்சி ருக்கிறது 'கவலையள்'.

அண்மையிலை ஜேர்மனியிலை இருந்து வந்த ஒரு கடிதம், அங்கையும் தங்கள் வாழவேணுமெண்டதுக் காக மற்றவையளை சுரண்டுறது இப்பவும் நடந்து கொண்டிருக்குது எண்டல்லோ சொல்லுது! அதைப் பற்றி விசாரிச்ச இடத்திலைதான் நிறையக் கிடைச்சது பாருங்கோ..

அங்கை எங்கட சில பேர், வேலையளை 'கொன் ராக்' எடுத்துச் செய்து கொடுக்கிறவை. இங்க பிரான்சிலையும் அப்பிடி கழுவல், துடையல் எண்டு கனக்க எங்கட ஆக்களின்ரை நேத்துவையளும் 'கொன்ராக்டர்' இருக்குது. ஆரம்பத்திலை அந்த வேலையின்ரை பெறுமதி மாசம் நூறு பிராங்கெண்டு வையுங்கோவன். எங்கட ஆக்களின்ரை போட்டிய ளாலை இண்டைக்கு அது எழுபது அறுபதெண்டு போய்க்கொண்டிருக்குது....! வேலை இல்லாமல் கஷ் டப்படுற பெடியனுக்கு வேலை கொடுக்கினமெண்டு சந் தோசப்பட்டாலும்தான், ஆனா கொடுக்கிற ஊதிய மெல்லோ இங்கையுள்ள சட்டப்படி வழங்க வேண்டி யதை விட அரைவாசியைவிடக் குறைவாக்கிடக்கு. தங் களுக்கு வேலையாட்களையும் துறைச்சுக் கொண்டு. அடிச்சு முறியிற பெடியளுக்கும் அரை குறையான சம்பளம் உட்பிடியான வேலையள் உனக்கு தேவையே? இதையள் இப்பிடியெண்டா ஜேர்மனியிலை கொஞ்சம் வித்தியாசமாக நடக்குதாம்!

ஜேர்மனிலை புதுசா வாற எங்கட ஆக்களுக்குத் தானாம் வேலை கொடுப்பினம். புதுசா வாறதுகள் இரு பதினாயிரம், முப்பதினாயிரம் மாசச் சம்பளமெண்டா

## பேப்பர்..... ஐயா... பேப்பர்...!!

காணுமா வழியிலை. இருந்தாலும் அந்த நேரங்களிலை புதுசுபுதுசா வந்திறங்கிறவைக்கு மொழி தெரியாட்டியும், விசா உடனை கிடைக்காட்டியும் 'ஒரு வேலை' மட்டும் கட்டாயம் கிடைக்கும் பாருங்கோ! அதுதான் 'பேப்பர்' போடுற வேலை. விளம்பரப் பேப்பருகளை வீடுவீடா கொண்டு போய்ப் போடுறதுதான் வேலை. அதுக்காக இது லேசுப்பட்ட வேலையெண்டு நினைச்சுப் போடாதை யுங்கோ. இதுக்கும் சில அனுபவங்கள் தேவை! என்ன தெரியவேணும்.....! கட்டிடங்கள் கதவின்ரை 'கோட்' இலக் கத்தை கண்டுபிடிச்சா உள்ளுக்கை போகமுடியும். திறப் பமொட்டு திறக்கத் தெரிய வேணும். கடிதப்பெட்டி துளிக்கி கொண்டுதட்டு உள்ளுக்கை நுழையத் தெரிய வேணும். இப்பிடி கனக்க சூத்திரங்கள் தெரிஞ்சாத் தான் வேலையிலை கொஞ்ச நாளைக்கெண்டாலும் நின்று பிடிக்க முடியும். சில நேரங்களில கொஞ்ச நாளையிலை அந்த அனுபவமில்லாமையால் போயிடும்! அது வேறை கதை....

எங்கட சனங்கள் இந்த வழமுதல் இதை. வேறை ஒரு நாட்டுக்காரர்தான் செய்து கொண்டிருந்தவை. உது களை நடத்தினவை சம்பளத்தை உயர்த்துறதுமில்லை உழைப்புக்கேற்ற ஊதியம் இல்லையெண்டோ... என் னவோ. அவையள் மெல்ல மெல்ல விட்டுட்டுப்போக, எங் கட சனங்கள் அதே வருமானத்துக்கு தயாரா செய்யத் தொடங்கிவிட்டினம். இதுக்கு எங்கட நாட்டுக்காரரின்ரை கையிலை பெரும்பாலும் வந்திட்டுது. நாள் செல்லச் செல்ல நாடும் நெருப்பிடிப்பட நாங்களும் 'டெலிபோனி' அதைவிட்டுட்டு ஏதுமெண்டு தொடங்க, உடனைக் கிடைக்கும் வேலையும் கனக்கா இப்ப வேறையொரு நாட்டுக்காரர் ரின்ரை கைக்கு போயிட்டுது. ஆனாலும் அந்தநேரம் உந்த வேலைக்குபோன எங்கட சனங்கள் பட்டபாட்டை சொல்லியாமாது....! உதுகளை விடிவிடிய கொண்டோய் போடுறவைக்கு பொறுப்பா 'செல்ப் தமிழர்'தான் இருப்பார். நூறு பேர் கட்டடம் கட்டடமா ஏறி போட, பிள்ளை வடிவா போட்டதோ இல்லையோ எண்டு பாத்துக் கொண்டு வாறதுதான் இவையளின்ரை வேலை. தப்பித் தவறி எங்கையாவது போடாமல் விட்டா ஏனெண்டு பிரச்சனை பிடிக்கப் போறினம். தங்களை மாதிரித்தான் இவையளும் காசு, மானம், ஆரோடெண்டு தாங்கேலாத 'அருள்' அடிச்சவை எண்ட நினைப்பில் கொஞ்சமும் இரக்கமில்லாமல் புதுசா வாறதுகள் விசா கிடைக்காமல் திருப்பி அனுப்பப்பட்டாலும், வந்த வசதிக்கும் உழைப்பமெண்ட அவசரத்திலை உவையளின்ரை 'வழியளையும்' ஏதோ சிற்சொண்டு செய்கிறதுதான். சில கட்டங்களிலை போய்ப்போட' விடமாட்டினம். அப்பிடியான இடங்களிலை புதுசாவந்த இளம்பெடியன்களை ஏமாற்றிப் பிடிச்சு உள்ளுக்கை அனுப்பப் போறினம். அது உள்ளுக்கை

மாட்டன் எண்டு சொல்லப்போறதுகள். விழுந்தடிச்ச, நாசியைக்கசக்க. நிமித்து முடியாம மாப்பிள்ளை மாப்பிள்ளை முத்தினபோட்டு, மாசம் முடிய சம்பளத்தை வாங்கினா இருபதினாயிரம், முப்பதினாயிரம் எண்டு சொன்ன மாதி ரித்தானாம் இருக்குது. ஆனா என்ன சிறிலங்காவிலை தானாம் அதுக்கு அந்தப் பெறுமதி! புதுசா வாறவைக்கு ஜேர்மனியோட அடிப்படை சம்பள சட்டதிட்டங்களைப் பற்றி அறிஞ்சிராயினம். அதால சிறீலங்காவின்ரை பெறு

> **அது உள்ளுக்கை போய் நிக்கிறதைப் பாத்துட்டு ஆரும் 'பொலிசுக்கு' ரெலிபோனடிக்க சிலவேளை கட்டடத்துக்கை போனவை கொழும்பிலை போய்நின்டு ரெலிபோன் அடிக்கிறதும் நடக்கிறதுண்டு!**

மதியைச் சொல்லி ஜேர்மன் பணத்திலை குடுத்தா காசுக்கையும் பிரச்சினைப்படாம சந்தோசமா செய்யினம் எண்டுதானாம் இப்பிடி 'ஒரு திட்டம்' வைச்சிருக் கினம். தாங்களும் நூறு பணத்தை மேலதிகமா இலை யவில்லை உழைப்பால சுரண்டுறதும்தானே. அதோட, முதலாளி, தொழிலாளியெண்டு சமூகத்திலை பெருமை யும் பட்டுக்கொள்ளலாம் பாருங்கோ. முதலாளி வர்க்கத் தோட ஒப்பிடுபோல சுரண்டலுகளை எதிர்த்து போர்க் கொடி தூக்கித்தான் இன்னடிக்கு, அந்த நாளை எழுச் சியா மேதினம் எண்டு கொண்டாடுறம். ஆனா நாங்கள் முதலாளியானாலும் மாறவில்லை, ஒரு அரசாங்கத்தா லையோ வேறோ. அவன் பாடுறம் எண்டுதான் விழுந் தடிச்சு இங்கினை வந்தனாங்கள். இங்கை வந்தப்பிறகு மங்களை நாங்களே சுரண்ட வெளிக்கிட்டிருக்கிறது முதுகு சொறிய கொள்ளிக்கட்டையை எடுக்கிற மாதி ரித்தான் பாருங்கோ ..

**அருமைத்தம்பி**

எமது புதிய வெளியீடு:

தமிழ் திரை உலகின் புதியதோர் நிறுவனம்

வீடியோ துறையில் நீண்ட அனுபவம்

கொண்டவர்களின் புதிய அறிமுகம்

# குளோபல் தமிழ் விஷன்

# GLOBAL TAMIL VISION

வர்த்தகத் தொடர்புகட்கு:

**GLOBAL TAMIL VISION**

95, Avenue Jean Jaures, 93300 Aubervilliers.

Tel: 00-33-(0)1 42 09 02 57 Fax: 00-33-(0)1 42 09 06 38

## இசை மழை Vol - 2
## G.T.V.

1. காசு மேலே காசு வந்து – காதலா காதலா
2. காதல் காதல் – பூச்சூடவா
3. பொன்னூ ஊருபூச – வேலை
4. திக்கலானா திக்கலானா துள்ளித் திரிந்த காலம்
5. செல்போன் சுந்தரி இது தான் காதல்
6. லைலா லைலா – காதலா காதலா
7. செம்பியூட்டம் – பூச்சூடவா
8. கன்னிப்பொண்ணு வேலை
9. மண்ணில் என்ன – துள்ளித் திரிந்த காலம்
10. கண்மணிக் கனவுகள் – இதுதான் காதல்
11. முதல் முதல் பயம் – ஆஹா
12. மட்டாளை பட்டாளை – காதலா காதலா
13. நீயில்லை நிழல் – பூச்சூடவா
14. அச்சுதா அச்சுதா வேலை
15. சலக்கு சலக்கு உதவிக்கு வரலாமா
16. ரேசன் சூடவும் – துள்ளித் திரிந்த காலம்
17. என்னோட உலகம் – கிழக்கும் மேற்கும்
18. வாடி வந்தது காதலா காதலா
19. வாலிப பயணம் பூச்சூடவா
20. ஒரு ராத்திரில் – வேலை
21. கௌசல்யா – துள்ளித் திரிந்த காலம்
22. சரவணபவா – காதலா காதலா
23. என்னோட ஏதோ உதவிக்கு வரலாமா
24. ஸ்வீட் டீன்ஸ் இது தான் காதல்
25. பூங்காற்றே – கிழக்கும் மேற்கும்
26. வாழ்க்கை என்ன – துள்ளித் திரிந்த காலம்
27. திருச்சூதேப் பெரிய மனுஷன்
28. சிறு சிறு காற்றில் – பூச்சூடவா
29. நீ தாம் – நீ தாம் – உதவிக்கு வரலாமா
30. அன்னை முகம் – இது தான் காதல்
31. கொழு வந்த – ஆஹா
32. மன்மதன் சடுகுடு – இது தான் காதல்
33. துளித் துளி மழைத் – பெரிய மனுஷன்
34. காசு மேலே காசு – காதலா காதலா



# வெளிவந்துவிட்டன

# ரமி யின்










RAMIY RECORDS



# பேர்லினில் நடைபெற்ற தந்தை செல்வா நூற்றாண்டுவிழா

பேர்லினில் உள்ள கமார்க்சாப மண்டபமொன்றில் 21.06.98 அன்று பி.பகல் 5.00 மணியளவில் தமிழீழத்தில் உயிர்நீத்த சகல தமிழர்களுக்குமான மௌன வணக்கத்துடன் தந்தை செல்வாவின் நூற்றாண்டுவிழா ஆரம்பமாகியது.

இதைத் தொடர்ந்து தந்தை செல்வநாயகத்தின் உருவப் படத்தை திரு. சிதம்பரி அருணாசலசாமி ஆகியோர் திறந்துவைத்து, விளக்கேற்றினார்கள்.

தந்தை செல்வாவின் நூற்றாண்டு மலரை வெளியிட்டுப் பேசிய திரு. தி. செல்வராசா அவர்கள் தமிழீழ மக்கள் படும் துன்பதுயரங்கள் பற்றியோ தமிழீழ மக்களின் விடுதலை பற்றியோ தமிழ்நாட்டு முதல்வர் மு.கருணாநிதி எதுவித கருத்தும் தெரிவிப்பதில்லையென்றும், முன்னைநாள் முதல்வர் ஜெயலலிதாவின் மனமாற்றம் வரவேற்கத்தக்கதெனவும் இதே போன்று ஏனைய தமிழ்நாட்டுத் தலைவர்களும் தமிழீழத் தமிழ் மக்களின் துயர்துடைப்பதற்கு இந்திய மத்திய அரசை ஊக்குவிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

மேற்படி விழாவில் மலரை முன்னைநாள் நீதிபதி சிங்கார வேலு இராசலிங்கம் அவர்களும், அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு வயி. நாராயணசாமி, புலவர் முத்தமிழ் வித்தகர் நம்பி சாரங்கபாணி, திரு.கே.ரி. கிளைசலிங்கம் உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கம், ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இதில் கலந்துகொண்டு பேசிய புதுச்சேரி முன்னைநாள் தலைமை நீதிபதி சிதம்பரநாதன் அவர்கள் தமிழீழ மக்கள் விடுதலையடைய வேண்டும் என்பதற்காக இந்திய மத்திய அரசை தான் அங்கு வலியுறுத்தும், கழகங்களிடமும் ஏக வலியுறுத்தப்போவதாகவும் உறுதி கூறினார்.

அடுத்து திரு. வெ.செ. குணரத்தினம் எழுதிய 'தமிழும் உலகமும்' என்ற நூலை வெளியீடு செய்து உரை நிகழ்த்திய புதுவை சட்டத்துறை ஆலோசகரும், அனைத்திந்திய எழுத்தாளர் சங்கத் தலைவருமாகிய திரு. வயி. நாராயணசுவாமி, தந்தை செல்வாவின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்வதில் பெருமை அடைகிறேன் எனவும் தந்தை செல்வாவிற்கு விழாவெடுக்கும் ஈழத்தமிழர் நவயுகக்கழகத்தினரை வாழ்த்துவதாகவும் கூறினார்.

அடுத்து நினைவுரை வழங்கிய திரு.வெ.செ. குணரத்தினம் அவர்கள் தந்தை செல்வா காலத்தில்தான் ஒரு தொண்டனாக செயற்பட்டதாகவும், தந்தை செல்வா தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து காங்கேசன்துறைத் தொகுதியில் அன்றைய ஆளும்கட்சி வேட்பாளரை விடப் பெரும் வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்து சிறீலங்கா பாராளுமன்றத்திற்கு 1974-ம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட போதிலும், தனிநாட்டுக் கோரிக்கையை பிரகடனப்படுத்த முன்னர் கோப்பாய் தொகுதியில் அன்னாருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சிக்கு தான் தலைமை தாங்கினார் எனப் பெருமையுடன் நினைவு கூர்ந்தார்.

அடுத்து தந்தை செல்வா பற்றிய சிறப்புரையின்போது பேசிய திரு. ஆ. துரைச்சாமி தந்தை செல்வா அரசியல் எதிரிகளும் மதித்தவர் எனவும். பாராளுமன்றத்தில் அவரை கையில் பிடித்து மிகவும் அன்பாக அழைத்துச் சென்று அவரது ஆசனத்தில் அமர்த்திய சம்பவங்களும் நிகழ்ந்ததுண்டு எனக்கூறினார்.

இதன்பின்பு உரை நிகழ்த்திய 'அருட்கதை நம்பி' புலவர் கோ. சாரங்கபாணி அவர்கள் தமிழீழத்தில் மக்கள் அல்லலுறுவதை எண்ணிப் பார்க்கின்ற மனித நேயம் கொண்ட தமிழ் மக்களை, தான் பேர்லினில் காண்கிறேன் எனவும் கூறினார்.

அடுத்ததாகப் பேசிய திரு. கே.ரி. கிளைசலிங்கம் பொதுச் செயலாளர் உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கம் அன்று தந்தை செல்வநாயகம் தனிநாட்டுக் கோரிக்கையை பிரகடனப்படுத்தினார். அதற்காக தமிழீழப் போராட்டம் இன்று தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால் எடுத்துச் செல்லப்படுகின்றது. இன்று தளத்தில் சிங்கள ஜெயசிக்குறுப் படையானது தோல்வி மேல் தோல்விகளைத் தழுவி வருகின்றது.

எனவே தமிழீழம் உருவாகுவதற்கு அனைத்துத் தமிழர்களும் ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

இவ்விழாவில் பல நடன நிகழ்ச்சிகளும் சகல நடனங்களும் சிறப்பாகவிருந்தது. இவ்விழாவிற்கு 250 இற்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டனர்.

இறுதியில் 'நாட்டை உயர்த்த வல்லவர்கள் படிப்பாளிகளா? பாட்டாளிகளா?' என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. இப்பட்டிமன்றத்தை தலைமை தாங்கிய புலவர் கோ.சாரங்கபாணி அவர்கள் மிகவும் நகைச்சுவையாகப் பேசி மண்டபத்தில் இருந்த மக்களை நகைச்சுவையாகப் பேசி சிரிக்கவும், சிந்திக்கவும் செய்தார்.

சோ. திருச்செல்வராசா
பேர்லின்.

---

உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு மாணவர் அமைப்பு நடாத்தும்

## மாணவர் எழுச்சி நாள்

**18.07.1998 சனி பிற்பகல் 3.00 மணி**

Albisguetli, Uetliberg strasse 341, 8045 Zurich.

அகவணக்கம் — பேச்சு — எழுச்சி நடனங்கள் —
இசை நிகழ்ச்சி — நாடகம் — இன்னும் பல கலை நிகழ்வுகள்...

உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, கல்விச்சேவையினின் 'விளக்கு' என்னும் சஞ்சிகையின் வெளியீட்டு விழா நடைபெறும்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

---

# புகலிட நிகழ்வுகள்

## முதலாவது சைவ மாநாடு 11 – 12 ஜூலை 1998

Lewisham Theatre, Rushey Green. Catford, London Se6.

பங்குபற்றிய அனைத்து சிறார்களுக்கும் சான்றிதழ்கள் 11.07.98 12.07.98 அன்று மாலை 2.00 மணி முதல் 5.00 மணிவரை வழங்கப்படும். இவற்றைப் பெறுவோர் மேலதிக விபரங்களுக்கு, கீழ்க்காணும் தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

Tel: 0181 900 1279, 0181 810 0835

### நடுவர் பட்டியல்

திருமதி நாகேஸ்வரி பிரமானந்தா
திருமதி பாலராணி சரவணபவான்
திருமதி பிரேமா நாயானன்
திரு குமாரசாமி ஸ்ரீஸ்கந்தராஜா
திருமதி எஸ். பொன்னம்பலம்
திருமதி சி. ஆறுமுகதாஸ்
திரு. என். நகுரட்ணம்
திரு.கே. ரங்கநாதன்
திரு. எஸ். இராமச்சந்திரன்
திருமதி யமுனா நரேந்திரன்
திருமதி ராஜா குமாரநாயகம்
செல்வி அருந்தா இரத்தினசிங்கம்
திருமதி ஞானசகாதேவா
திரு. எஸ். ஸ்ரீகாந்தலிங்கம்
திரு. எம். குமாரநாயகம்
திரு. ஆர்.டி. இரத்தினசிங்கம்
திரு. எம். மார்க்கட்டன்
Mr. Fergus Smith
திருமதி தர்மபந்தி நிமலராஜா
திருமதி யோகராணி இராமநாதன்
திருமதி விஜயகுமாரி பரமகுமரன்
திருமதி குலா வேலுப்பிள்ளை
திருமதி A. விமலராஜா
திருமதி திருஞானசுந்தரம்
திரு J.A. இராஜகாரியர்
திரு. கே. சச்சிதானந்தன்
சிவஸ்ரீ கணேசராஜ குருக்கள்

### பரிசு பெற்றோர் விபரம்

**9 வயதிற்குட்பட்டோர் (தமிழ்)**
1. தாரணி ரூபக்குமார்
2. அபிராமி இராஜமனோகரன்
3. சிந்துஜா பாலேந்திரன்
4. குபிலியா பாலேந்திரன்
5. பிரசாந் முருகதாஸ்

**9 வயதிற்கு மேற்பட்டோர் (தமிழ்)**
1. வைதேகி தம்பிராசா
2. கஸ்தூரி பாலசுப்பிரமணியம்
3. கிருஷ்ணி ரமேஷ்
4. சாளினி பாலேந்திரா
5. செந்தூரன் இராஜமனோகரன்

**9 வயதிற்குட்பட்டோர் (ஆங்கிலம்)**
1. அபிராமி இராஜமனோகரன்
2. பிருந்திகா ஸ்கந்ததேவா
2. சிந்துஜா பாலேந்திரன்
3. குபில்யா பாலேந்திரன்
4. கீதன் சிவகுமார்
5. பிரீடங்கன் பாலச்சந்திரன்

**9 வயதிற்கு மேற்பட்டோர் (ஆங்கிலம்)**
1. தர்ஷினி குமாரநாயகம்
2. சிவகாமி இராஜமனோகரன்
3. செந்தூரன் இராஜமனோகரன்
4. செந்தினா செல்வராஜா
5. கிருத்திகா ஸ்கந்ததேவா

**9 வயதிற்குட்பட்டோர் (திருமுறை)**
1. அகிம்சா திருநாவுக்கரசு
2. அபிராமி இராஜமனோகரன்
3. ஸ்ரெபி தயாகன்
4. மதுரா கருணைலிங்கம்
5. சிந்துஜா பாலேந்திரன்

**9 வயதிற்கும் மேற்பட்டோர் (திருமுறை)**
1. ஜங்கரன் சிவாஜி
2. கிருஷ்ணி ரமேஷ்
3. கிருஷ்ணி குமாரநாயகம்
4. கிருத்திகா ஸ்கந்ததேவா
5. சிவகாமி இராஜமனோகரன்

## திருமுறைப் போட்டியும் சைவ மாநாடும்

பிரித்தானிய சைவத் திருக் கோயில்கள் ஒன்றியம் முதல் முதலாக இளம் தமிழ்ச்சிறார்களிடையே திருமுறை ஓதல், தமிழ், ஆங்கிலப் பேச்சுப் போட்டிகளையும் சென்ற மாதம் நடாத்தியது. இப்போட்டிகள் இலண்டனில் உள்ள இந்து ஆலயங்களில் நடாத்தப்பட்டன. Ealing கனக துர்க்கை அம்மன் ஆலயத்தில் இறுதிப்போட்டிகளாக இப்போட்டிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட இளம் சிறார்கள் பங்குகொண்டனர்.

இங்குள்ள எட்டு தமிழ்ப் பாடசாலைகளிலிருந்து மாணவ, மாணவிகள் மிகுந்த ஆர்வத்துடன் பங்குபற்றிச் சிறப்பித்தனர். அதில் குறிப்பாக ஹரோ தமிழ்ப் பாடசாலை, கிங்ஸ்பரி தமிழ்ப் பாடசாலை, மேற்கு இலண்டன் தமிழ் பாடசாலையிலிருந்தும், பிறைன்ற் தமிழ்ச்சங்கத்திலிருந்தும் அதிக மாணவர்கள் பங்கு கொண்டது குறிப்பிடத்தக்கது. திருமுறை ஓதல் போட்டிகளுக்கு நடுவர்கள் தலைவராக திருமதி நாகேஸ்வரி பரமானந்தாவும், தமிழ், ஆங்கிலப் பேச்சுப் போட்டிகளுக்கு நடுவர்கள் தலைவராக திருமதி குலா வேலுப்பிள்ளையும் பொறுப்பேற்று நடாத்தினர்.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும், பங்குபற்றிய அனைத்து சிறார்களுக்கான சான்றிதழ்களும், இம்மாதம் 11-ம், 12-ம் திகதிகளில் நிகழவிருக்கும் முதலாவது சைவ மாநாட்டில் வைத்து, தமிழ்நாடு பேரூர் ஆதீன தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளால் ஆசீர்வதிக்கப்பட்டு கையளிக்கப்படும்.

---

தமிழ் மாணவர் அமைப்பு - ஜேர்மனிக்கிளை

## மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப்போட்டி-1998
## உதைபந்தாட்ட இறுதிச்சுற்றுப் போட்டி

ஜேர்மன் தமிழ் மாணவர் அமைப்பு ஆறாவது வருடமாக நடாத்தும் மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப் போட்டிகளில் உதைபந்தாட்ட இறுதிச் சுற்றுப்போட்டிகள் டோட்மூண்ட் நகரில் நடைபெறவுள்ளன. தென் மாநிலம், வடமாநிலம், மத்தியமாநிலம் ஆகிய உதைபந்தாட்ட தெரிவுப் போட்டிகளில் தெரிவான தமிழர் விளையாட்டுக் கழகங்கள் இறுதிச் சுற்றுப்போட்டியில் மோதுகின்றன. போட்டிகள் நடைபெறும்

**காலம்: 11.07.98 சனிக்கிழமை**
**இடம்: Mendensport Platz, Freden Baum, 44147 Dortmund.**

- தமிழ் மாணவர் அமைப்பு ஜேர்மனிக்கிளை

திருமணவிழாக்களா, பூப்புனித நீராட்டு விழாக்களா, பிறந்த நாள் வைபவங்களா, மேடை நிகழ்ச்சிகளா இசை மழையில் நனைந்து மகிழ

ஐரோப்பா புகழ்

பாரிஸ்
ஈழநிலா

தொடர்புகட்கு:
இயக்குநர்
S.S. தில்லைச்சிவம்
Tel: 0140375669

Tamileelam Archive

# ஜேர்மனியில் தமிழாலயம் நடாத்திய எழுதுறைப் போட்டிகளின் முடிவுகள்

உலகத் தமிழர் இயக்கக் கல்விப்பணி ஜேர்மனியிலுள்ள தமிழாலய மாணவரிடையே தமிழ் மொழியிலே பல்துறை ஆற்றலை வளர்க்கும் நோக்குடன் ஆண்டுதோறும் தமிழ்த்திறன் போட்டிகளை நடாத்தி வருகின்றது.

1998-ம் ஆண்டு மேற்படி மாணவரிடையே நடாத்தப்பட்ட பேச்சு, கட்டுரை, கவிதை, திருக்குறள், வாசிப்பு, சொல்வதெழுதுதல், அழகுபடவமைய எழுதுதல் ஆகிய எழுதுறைப் போட்டிகளில் 6 வயது முதல் 19 வயது வரையிலான தமிழாலய மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இவர்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுள்ள மாணவர்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. 18.07.98-ல் ஒபகவுசன நகரில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழர் இயக்கக் கல்விப் பணியின் 8-வது ஆண்டு விழாவிலே இம்மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும். என்பதனை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

## உலகத் தமிழர் இயக்கக்கல்விப் பணி நடாத்திய 1998-ம் ஆண்டு தமிழ்த்திறன் ஜேர்மனி ரீதியிலான போட்டி முடிவுகள்

### பேச்சு போட்டி

**6-7 வயதுப் பிரிவு**
- 1-ம் இடம் திலக்ஷன, மரியதாஸ், Neuss
- 2-ம் இடம் பூங்சிகா சந்திரகுமார் München
- 3-ம் இடம் ஜெனுசியா சிவகுமாரராஜா Hagen

**8-9 வயதுப் பிரிவு**
- 1-ம் இடம் உமா விக்னேஸ்வரமூர்த்தி Frankfurt
- 2-ம் இடம் மாலினி சிவலிங்கம் Warndorf
- 3-ம் இடம் கஜிநாத் தவம் Enneppetal

**10-11 வயதுப் பிரிவு**
- 1-ம் இடம் மதுவதன் குமரச்சந்திரன் Dortmund
- 2-ம் இடம் வெண்ணிலா மகேஸ்வரன் Muhlacker
- 3-ம் இடம் சங்கீதா திருஞானசம்பந்தர் Munster

**12-13 வயதுப் பிரிவு**
- 1-ம் இடம் லக்சனா பத்மநாதன் Neuss
- 2-ம் இடம் செந்தூரன் சபாரத்தினம் Hagen
- 3-ம் இடம் சுதர்சன் பத்மநாதன் Berlin

**14-15 வயதுப் பிரிவு**
- 1-ம் இடம் இராஜந்தன் இராஜரட்ணம் Saarbrucken
- 2-ம் இடம் புவிலவன் சுவலம் Wuppertal
- 3-ம் இடம் கணேசாயினி கணேசலிங்கம் Kirchheim Teck

### பேச்சு

**16-17 வயதுப் பிரிவு**
- 1-ம் இடம் உஷாந்தினி இராஜேந்திரம் Duren
- 2-ம் இடம் சிறுமாலினி மகாலிங்கம் München
- 3-ம் இடம் சாலினி விக்கினேஸ்வரன் Mühlacker

**18-19 வயதுப் பிரிவு**
- 1-ம் இடம் போகேந்திரன் நரேந்திரலிங்கம் Frankfurt
- 2-ம் இடம் அநந்தன் நகுலேஸ்வரன் Wuppertal
- 3-ம் இடம் தர்சிகா விருகுமார் Krefeld

### கட்டுரை

**10-11 வயதுப் பிரிவு**
- 1-ம் இடம் துவாரகினி சிவலிங்கம் Meerbusch
- 2-ம் இடம் துஸ்யா சித்திரன் Brilon
- 3-ம் இடம் நகுலன் கந்தசாமி Berlin

**12-13 வயதுப் பிரிவு**
- 1-ம் இடம் சாந்தினி கனகலிங்கம் Dortmund
- 2-ம் இடம் அனுஷா சிவானந்தன் Schwelm
- 3-ம் இடம் மாலினி கருணாநிதி Oberhausen

**14-15 வயதுப் பிரிவு**
- 1-ம் இடம் கவிதா சூரி Neuss
- 2-ம் இடம் கணேசாயினி கணேசலிங்கம் Kirchheim / Teck
- 3-ம் இடம் சுரேஸ் சிவசுப்பிரமணியம் Wuppertal

**16-17 வயதுப் பிரிவு**
- 1-ம் இடம் சுபாஜினி கனகரட்ணம் Bielefeld
- 2-ம் இடம் ராஜினா சிவகுமாரன் Schwelm
- 3-ம் இடம் சுரின்கினி தெய்வேந்திரன் Solingen

**16-19 வயதுப் பிரிவு**
- 1-ம் இடம் அருளினி மகாலிங்கம் München
- 2-ம் இடம் பிரசாந்தி சபாபதிபிள்ளை Stuttgart
- 3-ம் இடம் அமைமகள் நல்லவேல் Stuttgart

### ஜேர்மனி ரீதியிலான சொல்வதெழுதுதல் போட்டி 98 சொல்வதெழுதுதல்

**6-7 வயதுப் பிரிவு**
- 1-ம் இடம் அகல்யா இந்திரகுமார் Essen
- 2-ம் இடம் ரமிலா இராசேந்திரம் Enneppetal
- 3-ம் இடம் பிரியந்தா செல்வநாயகம் Saarbrucken

**8 - 9 வயதுப் பிரிவு**
- 1-ம் இடம் உமா ஸ்ரீ விக்னேஸ்வரமூர்த்தி Frankfurt
- 2-ம் இடம் அமல்ரோகினி அமிர்தநாதர் Osnabruck
- 3-ம் இடம் கஜிநாத் தவம் Enneppetal

**10-11 வயதுப் பிரிவு**
- 1-ம் இடம் மாழினி அமிர்தலிங்கம் Enneppetal
- 2-ம் இடம் சிந்துஜா செல்வராசா Dusseldorf
- 3-ம் இடம் சங்கீதா திருஞானசம்பந்தர் Munster

**12-13 வயதுப் பிரிவு**
- 1-ம் இடம் சோபனா நடராசா Dortmund
- 2-ம் இடம் மயூரி கனகசிங்கம் Stuttgart
- 3-ம் இடம் ஜானகி தவராஜா Herne

**14-15 வயதுப் பிரிவு**
- 1-ம் இடம் சுபத்திரா மகேந்திரன் Oberhausen
- 2-ம் இடம் சிரோமி கேதாநாதன் Munster
- 3-ம் இடம் கவிதா சூரி Neuss

### ஜேர்மனி ரீதியிலான திருக்குறள் மனனப்போட்டி 98 திருக்குறள்

**6-7 வயதுப் பிரிவு**
- 1-ம் இடம் சாவித்திரி குமாரசந்திரன் Dortmund
- 2-ம் இடம் யுதர்சிகா சந்திரகுமார் München
- 3-ம் இடம் நிஷா குணப்பிரகாசம் Leverkusen

**8-9 வயதுப் பிரிவு**
- 1-ம் இடம் உமாஸ்ரீ விக்னேஸ்வரமூர்த்தி Frankfurt
- 2-ம் இடம் சந்திரவதனா உதயராசன் Hagen
- 3-ம் இடம் ஜெயகல்யாணி ஜெயானந்தராஜா Heilbronn

**10-11 வயதுப் பிரிவு**
- 1-ம் இடம் சங்கீதா திருஞானசம்பந்தர் Munster
- 2-ம் இடம் துஸ்யா சித்திரன் Brilon
- 3-ம் இடம் வித்தியா வைத்தியநாதன் Berlin

**12-13 வயதுப் பிரிவு**
- 1-ம் இடம் லக்சனா பத்மநாதன் Neuss
- 2-ம் இடம் செந்தூரன் சபாரத்தினம் Hagen
- 3-ம் இடம் மாலினி கருணாநிதி Oberhausen

**14-15 வயதுப் பிரிவு**
- 1-ம் இடம் ஆனந் குணராசன் Bremen
- 2-ம் இடம் சுபத்திரா மகேந்திரன் Oberhausen
- 3-ம் இடம் அசோகா சிவநாதம் Neuss


தமிழைக்கற்றுத் தமிழனாய் வாழ்ந்து தூணியிற் பணிதனைச் செய்திடுவோம்!

உலகத் தமிழர் இயக்கம் - ஜேர்மனி நடாத்தும்

கல்விப் பணியின் எட்டாவது ஆண்டு விழா

இடம்: Luise Albertz Halle (Stadthalle)
Duppel Str. 1, 46045 Oberhausen

காலம்: 18.07.1998 சனிக்கிழமை 16.00 மணி

நிகழ்ச்சிநிரல்:

அமைதிவணக்கம், மங்கல விளக்கேற்றல், பரிசளிப்பு, சிறப்புரை, மாணவச் செல்வங்கள் நடாத்தும் பட்டிமன்றம், நடனக்கோலம், நாடகம்

நமது எதிர்காலச் சந்ததியின் மகிழ்வான கலைப்படைப்புக்களைக் கண்டுகளிக்க அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!

கல்விப்பணி, உலகத்தமிழர் இயக்கம் - ஜேர்மனி


## வேலணை மகாவித்தியாலய பழைய மாணவர்சங்க ஆண்டுவிழா

வேலணை மத்தியமகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க பிரான்ஸ் கிளையின் 5-வது ஆண்டுவிழா கடந்த 28.06.98 ஞாயிற்றுக்கிழமை மாலை பாரிஸ் AMORC மண்டபத்தில் இடம் பெற்றது.

எடுத்துக்காட்டியது. மேற்கத்தைய நடனத்தை ஆடியதில் ஆர்வமும் தேர்ச்சியும் பெற்ற இந்த இளைஞர்கள் சுயமாக எதையாவது செய்ய முயலவேண்டும். A.R. ரஹுமானின் இசைக்கும், அல்லது மேற்கத்தைய இசை





பரதநாட்டியம், சிறுவர் நடனம், மௌனித்திரை நாடகம், நாடகங்கள் என பல்வேறு கலை நிகழ்ச்சிகள் அடங்கிய இவ் விழாவுக்கு 300-க்கும் அதிகமான பார்வையாளர்கள் வந்திருந்தனர்.

நடன நிகழ்ச்சிகளில் கிராமிய நடனம் குறிப்பாக தமிழர் கலை களான கும்மி கோலாட்டம் என பலவற்றை காலத்தின் தேவையுணர்ந்து மேடையேற்றிய நிறைவு பாராட்டுக்குரியதாகும். மேற்கத்தைய நடனம் தனைமுறை மாற்றத்தில் பிரதிபலிப்பாக அமைப்பாளர் ஒருவரின் இசைக்கும் ஆடியிட்டுப் போவதில் சிறப்பு ஒன்றுமேயில்லை.

ஆனாலும் இருந்தாலும், நாமக நினைவுகளும், உணர்வுகளும் சிதைந்து போய் நமது இனம் அந்நியப்பட்டு சுய அடையாளத்தை இழந்துவிடாமல் தடுக்கும் விதத்திலும் தங்களாலான பங்களிப்பைச் செய்து செய்து கொண்டிருக்கும் வேலணை பழைய மாணவர் சங்கத்தினரை மனமாற பாராட்டுதற்குரிய ஒன்றாகும்.

## பிராங்பேட் தமிழாலய விளையாட்டுப்போட்டி

ஆண்டு தோறும் பிராங்பேட் தமிழாலயத்தால் நடாத்தப்பட்டு வரும் விளையாட்டுப் போட்டி யானது. இம்முறையும் எதிர் வரும் 19.07.98 அன்று காலை 9 மணிக்கு Ginheimer Land Str 39 இல் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தில் நடை பெறவுள்ளது.

ஹெசன் (Hessen) மாநிலத்தில் உள்ள அனைத்துத் தமிழாலயங்களும் பங்குபற்றும் இவ் விளையாட்டுப் போட்டியில், மாணவர்கள் அல்லாத வெளியாரும் பங்குபற்றுகின்றனர்.

5 வயதிலிருந்து- 20 வயது வரையான 8 பிரிவுகளும், பங்குபற்றக்கூடியதாக 20 வயதுக்கு மேற்பட்ட வயதெல்லையற்ற ஒரு பிரிவுமாக 9 பிரிவுகளை உள்ளடக்கி, ஓட்டம், நீளம்பாய்தல், குண்டெறிதல், தடை ஓட்டம் போன்ற பல முக்கிய விளையாட்டுக்களுடன், எல்லோரும் ஆர்வத்துடன் பங்கு பற்றும் தலை அணை அடிப் போட்டியும் இடம்பெறுகின்றது.

போட்டிகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் ஏற்கனவே பிராங்பேட் தமிழாலயத்தால் வழங்கப்பட்டு வருகிறது. விண்ணப்ப முடிவு திகதி 01.07.98 ஆகும். ஆர்வமுள்ள அனைவரையும் பங்குபற்றுமாறு பிராங்பேட் தமிழாலயம் அன்புடன் வரவேற்கின்றது.


சிவாசினி வாகன சேவை
Chivashini Transport

வாகன தேவைகளுக்கு 24 மணி சேவை

தொடர்புகட்கு: ஜெயா

0614616984 / 0611289118 /
0614424117 / 01 42 05 44 04

டிஸ்னி ரெஸ்ரோறன்ட்



# டக்ளஸ் தேவானந்தா மீதான தாக்குதல் துரோகத்தனத்திற்கு கிடைத்த பரிசா?

கடந்த வாரம் கொழும்பிலுள்ள தமிழ் தொடர்புச் சாதனங்களில் பரவலாகவும், பரபரப்பாகவும் பேசப்பட்ட ஒரு விடயம் ஈ.பி.டி.பி. குழுவின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா மீது நடத்தப்பட்ட தாக்குதல் பற்றியதாகும்.

சிறீலங்காவில் இதுவரை காலமும் சிறைக்கைதிகளே சிறைச்சாலைக்குள் வைத்துத் தாக்கப்படும், கொலை செய்யப்படும் சம்பவங்கள் நடந்திருக்கின்றன. இந்தச்சம்பவங்களைச் செய்தவர்களுக்கு அரசியல்வாதிகளின் ஆதரவும் பின்பலமும் நிறையவே இருந்திருக்கின்றன. ஆனால் இம்முறை அரசாங்கத்திற்கு மிகவும் வேண்டப்பட்ட 'அரசியல் பிரமுகர்' ஒருவர் அரசாங்கப்பாதுகாப்பிலுள்ள சிறைச்சாலையில் வைத்து மரண காயங்களுக்கு உள்ளாகும் வரையில் தாக்கப்பட்டார் என்ற வகையில் களுத்துறை சிறையில் டக்ளஸ் மீது நடாத்தப்பட்ட தாக்குதல் முக்கியத்துவம் பெறுகிறது.

கொழும்பிலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் நடைபெறும் 'தமிழர்' விழாக்களில் டக்ளஸ் கலந்துகொள்வதும் அங்கே தான் தமிழர் பிரதிநிதி என்று காட்டுவதற்கு மக்கள் மத்தியில் நெருக்கமாக நின்று போஸ் கொடுப்பதும் ஏற்கனவே பல தடவைகள் நடந்த விடயங்கள்தான். அப்போதெல்லாம் தாக்கப்படாத டக்ளஸ் இப்போது மட்டும் தாக்கப்பட்டது ஏன்? என்ற கேள்வி பெரிய அளவில் எழுப்பப்படுகின்றது.

இந்தக் கேள்விக்குரிய விடையாக 'விடுதலைப் புலிகள் நன்கு திட்டமிட்டு களுத்துறைச் சிறையில் இருந்த தங்களது உறுப்பினர்கள் மூலமாக இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கின்றார்கள்' என்று பிரச்சாரப் படுத்துவதற்கு ஈ.பி.டி.பி. வட்டாரங்களும், அரசதரப்பும் விரும்புகின்றன.

ஈ.பி.டி.பி. யைப் பொறுத்த வரை தங்கள் தலைவரை சாதாரண சிறைக் கைதிகள் மரண காயத்துக்குள்ளாக்கிவிட்டார்கள் என்று சொன்னால் 'மக்கள் தொண்டன் மக்கள் சேவகன்' என்று தாங்கள் அவருக்கு சூட்டியிருக்கின்ற பட்டங்களுக்கு பங்கம் ஏற்பட்டுவிடும் என்று நினைக்கின்றார்கள். அரசாங்கமோ தாங்கள் சிறைபிடித்து விசாரணையின்றி அடைத்து வைத்திருக்கின்றவர்கள் எல்லாம் புலிகள்தான், மக்கள் பிரதிநிதியையே தாக்குகின்ற அளவுக்கு அவர்கள் கொலைவெறி பிடித்தவர்கள் என்று காட்டுவதன் மூலம் தங்களது கைதுகளையும் தடுத்து வைத்தலையும் நியாயப் படுத்துவதற்கு இந்தச் சம்பவத்தை பயன்படுத்தப்பார்க்கிறது. கடந்த வார பிற்பகுதியில் களுத்துறை சிறையின் பொறுப்பு வாய்ந்த அதிகாரி ஒருவர் சிறையிலிருந்த, 10 அல்லது 15 புலிக



ளின் உறுப்பினர்கள்தான் டக்ளஸ் மீதான தாக்குதலை நடத்தியிருக்கிறார்கள் என்று அறிவித்திருப்பது இங்கு கவனிக்கத்தக்க ஒன்றாகும்.

உண்மையில் இவர்கள் சொல்கின்றது போல் டக்ளஸை தாக்கியவர்கள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களாக இருக்க முடியாது. ஏனெனில் கைது செய்யப்படும் ஒருவர் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் அல்லது அவர்களின் தீவிர ஆதரவாளர் என்று இனங்காணப்படும் பட்சத்தில் அவரை சிறைச்சாலைக்கு அனுப்பப்படுவதற்குப் பதில் புதை குழிகளுக்கு அனுப்புவதே இந்த அரசாங்கத்தின் காலத்து வழக்கமாகும். சோதனைச் சாவடிகளிலோ, சுற்றி வளைப்பு நடவடிக்கைகளின்போதோ கைது செய்யப்படும் தமிழர்கள், அவர்கள் ஆண்களாக இருந்தாலும், பெண்களாக இருந்தாலும் பொலிஸ் நிலையம், இராணுவ முகாம், சிறப்பு வதைமுகாம்- ஏதாவது ஒன்றில் அல்லது ஒன்றுமாற்றி ஒன்றாக மூன்றிலும், மிக மோசமான சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு அவர்கள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்பே அவர்களை கைது செய்வதையும் சித்திரவதைக்குள்ளாக்கியதையும் விசாரணையின்றி தடுத்து வைப்பதையும் நியாயப்படுத்துவதற்காக 'நாங்கள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களாக இருந்தோம்' என்று குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெற்றுக்கொண்டு சிறைச்சாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். எனவே டக்ளஸ் தேவானந்தாவை தாக்கிய சிறைக் கைதிகள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்தான் என்று நிரூபிப்பதற்கு அரசாங்கமும் ஈ.பி.டி.பி. யினரும் சிறைச்சாலை அதிகாரிகளும் முயல்கின்றனர் என்று தெரிகிறது.

களுத்துறைச் சிறையில் டக்ளஸ் தேவானந்தாவின் மீது நடாத்தப்பட்ட தாக்குதலை திட்டமிட்ட புலிகளின் நடவடிக்கையாக அல்லாது, தேசத்தை நேசிக்கும் மக்களால் விடுதலையையும், மனித உரிமையையும் நேசிக்கும் மக்களால் துரோகத்தனத்துக்கு கொடுக்கப்பட்ட தண்டனையாகவே பார்க்கவேண்டும் என்ற கருத்தே தமிழ் மக்களின் பெரும்பான்மையான கருத்தாக இருக்கிறது.

**இவர்கள் சொல்கின்றது போல் டக்ளஸை தாக்கியவர்கள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களாக இருக்க முடியாது. ஏனெனில் கைது செய்யப்படும் ஒருவர் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் அல்லது அவர்களின் தீவிர ஆதரவாளர் என்று இனங்காணப்படும் பட்சத்தில் அவரை சிறைச்சாலைக்கு அனுப்பப்படுவதற்குப் பதில் புதை குழிகளுக்கு அனுப்புவதே இந்த அரசாங்கத்தின் காலத்து வழக்கமாகும்.**

களுத்துறைச் சிறையில் மட்டுமல்லாது சிறீலங்காவிலுள்ள பல்வேறு சிறைகளிலும், சிறீலங்கா அரசாங்கத்தின் பல்வேறு பாசிசச் சட்டங்களால் விசாரணையின்றி வருடக்கணக்காக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பல்லாயிரக் கணக்கான தமிழ் இளைஞர்களும் யுவதிகளும், தாங்கள் குற்றம் செய்தவர்கள் என்று அரசாங்கம் கருதினால் தங்கள் மீதான குற்றப் பத்திரிகையை தாக்கல் செய்து தங்களை நீதி மன்றத்தில் நிறுத்தவேண்டும், அல்லது விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி, பல தடவைகள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியிருக்கின்றார்கள். அவ்வாறான உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும் சந்தர்ப்பங்களில் எல்லாம் தாங்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்டு அங்கு செல்லும் டக்ளஸ் தேவானந்தா போன்றவர்கள், நாங்கள் அரசாங்கத்திடம் சொல்லி உங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றச் செய்கின்றோம், உங்களை விடுதலைசெய்ய ஏற்பாடு செய்கின்றோம் என்று பசப்பு வார்த்தைகள் சொல்லி, பழரசம் கொடுத்து அவர்களது உண்ணாவிரதத்தை முடித்து வைப்பது வழக்கம். இந்தச் சிறைக் கைதிகளின் போராட்டத்தால் அரசாங்கத்திற்கு நெருக்கடி வந்துவிடக் கூடாது என்பதற்காக அரசாங்கத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் இந்த நாடகபாணி பசப்பல்களின் பிரதிபலிப்புக்காக ஒருவர் அல்லது இருவர் விடுவிக்கப்படுவதும் வழக்கம். அதுவும் - தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளை ஏற்கின்றோம் என்று மனித உரிமை அமைப்புக்களுக்கும் வெளி உலகிற்கும் காட்டுவதற்காக இந்த விடுவிப்புக்கள் நடக்கும். ஆனால் மறுபுறத்தில் விடுவிக்கப்பட்ட ஒருவர் அல்லது இருவருக்குப் பதிலாக பத்து அல்லது இருபது பேர் சிறைக்கு அனுப்பப்பட்டிருப்பார்கள். இது ஒரு தொடர்கதையாகவே நடந்துவருகிறது.

**ஈ.பி.டி.பி. யைப் பொறுத்த வரை தங்கள் தலைவரை சாதாரண சிறைக் கைதிகள் மரண காயத்துக்கு உள்ளாக்கிவிட்டார்கள் என்று சொன்னால் 'மக்கள் தொண்டன் - மக்கள் சேவகன்' என்று தாங்கள் அவருக்கு சூட்டியிருக்கின்ற பட்டங்களுக்கு பங்கம் ஏற்பட்டுவிடும் என்று நினைக்கின்றார்கள்.**

இந்த நிலையில் பாராளுமன்ற பதவிக்காகவும், அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும் சலுகைகளுக்காகவும் தங்களது வாழ்க்கையோடு விளையாடும் இவர்களுக்கு பாடம் கற்பிக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயேதான், வழமைபோல் பழரசம் கொடுத்து உண்ணாவிரதத்தை முடித்து வைக்க வந்த டக்ளஸ் தேவானந்தாவை - களுத்துறைச் சிறையில் இருந்த தமிழ் கைதிகள் தாக்கியிருக்கின்றனர்.

சிறீலங்காவில் தமிழ் மக்கள் வயது பால் வித்தியாசமின்றி எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் கைது செய்யப்படுவதற்கும், பின் விசாரணை என்ற பெயரில் மிருகத்தனமான சித்திரவதைக்கு உள்ளாக்கப் படுவதற்கும், கொலை செய்யப்பட்டு, வாவிகளிலும், ஏரிகளிலும் வீசப்படுவதற்கும், புதைகுழிகளுக்குள் போட்டு புதைக்கப்படுவதற்கும், எஞ்சியுள்ளோர், நீதிமன்றத்திற்கு கொண்டுவரப்படாமல் வருடக் கணக்காக, சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப் படுவதற்கும் காரணமாயுள்ள பாசிசச் சட்டங்களுக்கு அடிப்படையாக இருப்பது 'அடிக்கடி டக்ளஸ் தேவானந்தாவினதும், அவரது கட்சி உறுப்பினர்களதும் ஆதரவோடு சிறீலங்கா பாராளுமன்றத்தால் புதுப்பிக்கப்படும் அவசரகாலச் சட்டமேயாகும்.

மிக மிகக்குறைந்த வாக்குகளால் தெரிந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற பதவியில் ஒட்டிக்கொண்டிருக்கும் டக்ளஸ் தேவானந்தாவும், அவரது குழுவினரும் அவசரகாலச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்காது விட்டால் அரசாங்கத்தால் அதை நிறைவேற்ற முடியாது என்பதையும்; அவ்வாறு அரசாங்கத்தால் அவசரகாலச் சட்டத்தை நிறைவேற்ற முடியாத பட்சத்தில் தேவையற்ற கைதுகள், சித்திரவதைகள், தடுத்து வைத்தல் - என்பவற்றை மனித உரிமைகள் மற்றும் சிவில் நிர்வாக சட்டங்களின் அடிப்படையில் எதிர்கொண்டு வாதாடி முற்றாக நிறுத்தமுடியாவிட்டாலும் குறைக்க முடியும் என்பதையும் - விசாரணையின்றி நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் கைதிகளை விடுவிக்க முடியும் என்பதையும் தெரிந்து கொள்ள முடியாத அளவுக்கு டக்ளஸ் தேவானந்தா மீது தாக்குதல் நடத்திய தமிழ் கைதிகள் ஒன்றும் எழுத்தறிவு, படிப்பறிவு, உலகறிவு இல்லாத 'கிணற்றுத் தவளைகள்' அல்ல என்பதை புரிந்துகொண்டால் டக்ளஸ் மீதான தாக்குதலுக்கான காரணமும் புரியும்.

- நக்கீரன்

## மூளை பாதிப்பு!

இந்தக் கட்டுரையை எழுதும்போது (05.07.98) டக்ளஸ் [illegible]

## சந்திரிகாவின் கரிசனம்



[illegible]

# கிருசாந்தி-பாலியல் வல்லுறவு கொலை வழக்கு

## 5 இராணுவத்தினர் 1 பொலிஸ்காரருக்கு மரணதண்டனை. ஆட்கடத்தலுக்காக 10 வருடசிறை. பாலியல் வல்லுறவுக்கு 20 வருட கடூழியசிறை

(03.07.98 கொழும்பு)

சகல்தேச அளவில் சிறீலங்கா அரசாங்கத்திற்கு பாரிய அழுத்தத்தைக் கொடுத்த யாழ். சுண்டிக்குழி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தி மீதான பாலியல் வல்லுறவு கொலை வழக்கில் 5 இராணுவத்தினருக்கும், ஒரு பொலிஸ்காரருக்கும் இன்று நண்பகல் 12.15க்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

1996ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7ம் திகதி தனது பாடசாலையில் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையை எழுதி விட்டு சைக்கிளில் தனது வீட்டிற்குத் திரும்பிச் சென்று கொண்டிருந்த கிருசாந்தியை செம்மணி இராணுவச் சோதனைச் சாவடியில் இருந்த படையினர் தடுத்து வைத்து கூட்டாக பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியிருந்தனர். அதன்பின் கிருசாந்தியைத் தேடி அங்குச் சென்ற அவரது தாயார் இராசம்மா, அவரது தம்பி பிரணவன், அவர்களது அயல்வீட்டுக்காரர் சிதம்பரம் கிருபாமூர்த்தி ஆகியோரையும் அங்கிருந்த சிறீலங்காப் படையினர் கொலை செய்து செம்மணிப் பகுதியில் புதைத்திருந்தனர்.

இதுபற்றி முதலில் விசாரித்த போது இவர்கள் காணாமல் போய்விட்டதாகவே சிறீலங்கா அரசு அறிவித்தது. ஆயினும் பின்னர் பல்வேறு அழுத்தங்கள் நிர்ப்பந்தங்களின் அடிப்படையில் செம்மணி புதை குழியிலிருந்து கிருசாந்தியினதும் மற்றவர்களினதும் சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்டதோடு, இது தொடர்பாக சிறீலங்கா இராணுவத்தையும் பொலிசாரையும் சேர்ந்த 9 பேர் மீது ஆட்கடத்தல் பாலியல் வல்லுறவு கொலை உட்பட 18 குற்றங்கள் சுமத்தப்பட்டு ஜூரிகள் இல்லாத 'ட்ரையல் அட்பார்' முறையில் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வந்தது.

சர்வதேச மனித உரிமை அமைப்புக்களின் அழுத்தங்களுக்கு பணிந்து 'சிறீலங்காவில் சட்டம் தனது கடமையை செய்யும்' என்று காட்டுவதற்காக இந்த வழக்கு தொடுக்கப்பட்ட போதும், வழக்கை யாழ்ப்பாணத்தில் நடத்துவதை, பின்னர் கொழும்புக்கு மாற்றுவது சாட்சிகளுக்கு மறைமுக நெருக்குதல்களைக் கொடுப்பது, எதிரிகளைத் தப்பவிட வைப்பது என்று பல்வேறு வகைகளில் நிரை மறைவு வேலைகளைச் செய்து உண்மைகளை மூடி மறைக்க அரசாங்கம் முயற்சிசெய்து வந்தது.

ஆயினும், பல்வேறு மனித உரிமை அமைப்புக்களின் அழுத்தமும், கிருசாந்தி மற்றும் அவருடன் கொலையுண்டவர்களின் நலன்களுக்காக வாதாடிய சட்டத்தரணிகளின் வாதத்திறமைகளும் இவ்வழக்கு தொடர்பான பல உண்மைகளை வெளிக்கொணர சட்டம் தனது கடமைகளை செய்ய 'விட்டுக்கொடுக்க' வேண்டிய தேவையை அரச தரப்புக்கு ஏற்படுத்தியது.

இந்த நிலையில் இன்று காலை 10.15க்கு இந்த வழக்கின் தீர்ப்பு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

காலை 9.45க்கு கிருசாந்தி குடும்பத்துக்காக வாதாடிய குமார் பொன்னம்பலம் நீதிமன்றத்துக்கு வந்திருந்தார். 10.15க்கு குற்றம் சாட்டப்பட்ட எதிரிகள் அங்கு கைவிலங்குடன் அழைத்து வரப்பட்டனர். குற்றவாளிகளின் நலன்களைக் கவனிக்கும் வழக்கறிஞர்களும், இந்த வழக்கின் தீர்ப்பை அறிவதற்கென பல்வேறு மனித உரிமை அமைப்பின் பிரதிநிதிகள், பத்திரிகையாளர்கள் ஆகியோரும் நீதிமன்றத்தில் வந்து கூடியிருந்தனர். சரியாக 12.15க்கு நீதிபதிகளான நிமால் திசநாயக்கா, காமினி அபயரட்ன அன்ரூ சோமவன்ச ஆகியோர் வந்து தமது ஆசனத்தில் அமர்ந்தனர். ஒன்று அல்லது இரண்டு நிமிடம் குண்டூசி விழுந்தாலே சத்தம் கேட்ட அளவுக்கு நிசப்தம்.

பின்பு நீதிபதி நிமால் திசநாயக்கா நீண்டதொரு குற்றப்பட்டியலை வாசித்தார். அதன் பின்பு குற்றவாளிகள் தரப்பு வழக்கறிஞர்கள் இந்தக் குற்றப்பட்டியல் பற்றிய தமது கருத்தை தெரிவிக்க அனுமதிக்கப்பட்டனர்.

இறுதியாக மீண்டும் நீதிபதி திசநாயக்கா வழக்கின் தீர்ப்பை வாசித்தார்.

'சட்ட விரோதமாகக் கூடியது, பாலியல் வல்லுறவு நோக்கத்துடன் மாணவி கிருசாந்தியைக் கடத்தியது, குற்றம் புரிந்தது, கிருசாந்தியையும், இராசம்மா, பிரணவன், கிருபாமூர்த்தி ஆகியோரையும் கொலை செய்த குற்றங்களின் அடிப்படையில் நடந்த இந்த வழக்கில் சட்ட விரோதமாகக் கூடிய குற்றச்சாட்டில் இருந்து எதிரிகள் விலக்கப்பட்டுள்ள அதேநேரத்தில், கிருசாந்தியை கடத்தியது, வல்லுறவில் ஈடுபட்டது, கொலை செய்தது என்ற குற்றச்சாட்டுகளுக்கு; மற்றவர்களைக் கொலை செய்த குற்றச் சாட்டிலும் முதல் எதிரியான லான்ஸ் கோப்ரல் சோமரட்ன ராஜபக்ஸ குற்றவாளியாகக் காணப்படுகிறார். அதேபோல் 2ம் எதிரி பிரைவேட் J.M ஜெயசிங்க, 3ம் எதிரியான பொலிஸ்காரர் பிரதீப் பிரியதர்சன, 4ம் எதிரி பிரைவேட் பிரிசாந்த பெரேரா, 7ம் எதிரி பிரைவேட் டிசாம் ஜெயதிலக, 8ம் எதிரி பிரைவேட் இந்திரஜித் பெரேரா ஆகியோரும் குற்றவாளிகளாகக் காணப்படுகின்றனர். 6வது எதிரி முத்துபண்டா குற்றம் புரிந்ததற்கு போதிய சாட்சி இல்லாததால் விடுதலை செய்யப்படுகின்றார். 9ம் எதிரியான அபயசிங்க பத்திரனகேயும் ஏற்கவே விடுதலை செய்யப்பட்டுவிட்டார்.

மேலேயே 1ம், 2ம், 3ம், 4ம், 7ம் எதிரிகளுக்கு கடத்தல் குற்றச்சாட்டுக்கு 10 வருடச் சிறைத் தண்டனையும், இவர்களுடன் 8ம் எதிரியும் சேர்ந்து பாலியல் வல்லுறவுக் குற்றச்சாட்டுக்காக 20 வருட கடூழியச் சிறைத் தண்டனையும், 50 ஆயிரம் ரூபா அபராதமும், மரண தண்டனையும் விதிக்கப்படுகின்றது. தற்போது தலைமறைவாக இருக்கும் 5ம் எதிரி கைது செய்யப்பட்டு மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும்' என்று தமது தீர்ப்பை வாசித்து முடித்தார்.

இந்தத் தீர்ப்பு நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகளினதும் ஏகமனதான தீர்ப்பு என்று அறிவிக்கப்பட்டது.

நீதிபதி இந்தத் தீர்ப்பை அறிவித்தபோதிலும் இவர்களுக்கான மரண தண்டனைத் திகதி ஜனாதிபதி சந்திரிகாவினாலேயே அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. இந்த வழக்கு ட்ரையல் அட்பார் முறையில் நடந்தாலும் இந்தத் தீர்ப்பை எதிர்த்து சாதாரண சட்டங்களின் அடிப்படையில் எதிரிகள் மேல் முறையீடு செய்யக்கூடிய வாய்ப்பு உள்ளதாக கொழும்பிலுள்ள சட்ட வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர்.

சிறீலங்காவின் நீதி மன்றங்களில் பலருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்படுகின்ற போதிலும், அவை அநேகமாக நிறைவேற்றப்படாமல் ஆயுள் தண்டனையாக மாற்றப்படுகின்றன. பல சந்தர்ப்பங்களில் இத்தகைய மரண தண்டனைக் குற்றவாளிகள் 'ஜனாதிபதியிடம் கருணை மனு' சமர்ப்பித்து விடுதலையாகியிருக்கின்றார்கள்.

இந்த வழக்கின் குற்றவாளிகளும் சிறிது காலம் சிறையில் இருந்தபின் சிறீலங்கா ஜனாதிபதியால் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்படுவார்கள் என அரசியல் அவதானிகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.



### செம்மணியில் 400 புதைகுழிகள்?

கிருசாந்தி கொலைவழக்கின் எதிரிகளுக்கு 'மரண' தண்டனை கொடுத்து தீர்ப்பு வழங்குவதற்கு முன்பாக நீதிபதி எதிரிகளைப் பார்த்து ஏதாவது கூற விரும்புகின்றீர்களா? என்று கேட்டபோது முதலாம் எதிரியும், 7ம் எதிரியும் நாங்கள் நிரபராதிகள். நாங்கள் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றியபோது எங்கள் மேலதிகாரிகளின் பணிப்புரைகளுக்கு அமையவே கடமையாற்றினோம். செம்மணிப்பிரதேசம் மக்கள் நடமாட்டமற்ற பிரதேசம்.

அங்கே எங்கள் மேலதிகாரிகளால் அனுப்பிவைக்கப்படும் நூற்றுக்கணக்கான சடலங்கள் புதைக்கப்பட்டுள்ளன. குறைந்தபட்சம் 400 சடலங்களாவது அங்கு புதைக்கப்பட்டிருக்கலாம், என்று நாங்கள் நம்புகிறோம். நீங்கள் எங்களை அங்கு அழைத்துச் சென்றால் நாங்கள் அந்தப் புதைகுழிகளை காட்டத் தயாராக இருக்கின்றோம் என்று தெரிவித்தனர்.

### சிறீலங்காவின் நீதி மன்றங்களில் பலருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்படுகின்ற போதிலும், அவை அநேகமாக நிறைவேற்றப்படாமல் ஆயுள் தண்டனையாக மாற்றப் பட்டிருக்கின்றன.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

### பரீட்சையில் அதிஉயர் சித்தியெய்திய கிருசாந்தி

தனது 18வது வயதில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட கிருசாந்தி படிப்பில் மிகவும் கெட்டிக்காரி என்றும், க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் 8 பாடங்களிலும் அதிஉயர் சித்தி (D) பெற்றவள் என்றும் கொலை செய்யப்பட்ட அன்று (07.09.96) எழுதிய க.பொ.த உயர்தரப் பரீட்சையின் இரசாயனவியல் பாடத்திலும் அதற்கு முதல்நாள் எழுதிய பௌதிகவியல் பாடத்திலும் 'A' தரத்தில் சித்தியடைந்துள்ளாள் என்றும் நீதி மன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.



கிருசாந்தி குமாரசுவாமி படுகொலை தொடர்பாக மரண தண்டனைக்குள்ளாக்கப்பட்ட முதலாவது எதிரி சோமரட்ன ராஜபக்ஸ, இரண்டாவது எதிரி ஜெயசிங்க, ஜே.எம். ஜயசிங்க, மூன்றாவது எதிரி பிரியதர்சன, நான்காவது எதிரி பிரசாந்த பெரேரா, ஏழாவது எதிரி டிசாம் ஜெயதிலக்க ஆகியோர் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டபோது...

### இராணுவச் சாதனைக்காக மன்னிப்பு!

கிருசாந்தி வழக்கில் குற்றவாளிகளுக்கான கடைசித் தடவை வாதாடிய சட்டத்தரணிகள், குற்றவாளிகள் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளில் பல சாதனைகள் புரிந்தவர்கள். அவற்றைக் கருத்தில்கொண்டு அவர்களுக்கு கருணை காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

அதுபோல் வேறு சில வழக்கறிஞர்கள், குற்றவாளிகள் ஏழ்மை நிலை காரணமாக படிப்பைத் தொடர முடியாமல் இராணுவத்தில் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு குடும்பமும் குழந்தைகளும் இருக்கின்றன. அதற்காக அவர்களுக்கு மன்னிப்பு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

# உலகக்கிண்ண உதைபந்தாட்ட செய்திகள்



பூமாலை 3

**நாடு தழுவிய விறுவிறுப்பு!**

**உதைபந்தாட்ட ஆர்வலர்**

**மத்தியிலோ பதைபதைப்பு!**

இம்முறையும் வெற்றிகொள்ளாவிட்டால் இனி எப்போ என்ற பெரு ஏக்கம்!

மாலை 4.30இல் இருந்து 7.20 வரையிலான இரண்டு மணி ஐம்பது நிமிடங்கள் ஸ்தம்பித நிலையில் பிரான்ஸ்.

மாலை 7.21 இற்கு விடுபட்டது புரியாத புதிருக்கான விடை. 1930ம் ஆண்டு தொடக்கம் 1997ம் ஆண்டுவரையான 67 வருட காலப்பகுதியில் பிரான்ஸ் இத்தாலி ஆகிய இரு நாடுகளும் முப்பது முறை போட்டிகளில் பங்குபெற்றுள்ளன. இவற்றில் இத்தாலி பதினேழு முறையும், பிரான்ஸ் ஆறு முறையும் வெற்றிபெற்றுள்ளன. ஏழு போட்டிகள் வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்துள்ளன. இச்சரித்திரப் பின்னணியில் 16 வது உலகக்கிண்ணப் போட்டியின் கால் இறுதி ஆட்டத்தில் (முப்பத்தோராவது தடவையாக) களம் இறங்கின.

எண்பதினாயிரம் பார்வையாளர்களைத் தன்னகத்தே கொண்ட 'ஸ்ராட் டு பிரான்ஸ்' மைதானம் போட்டி ஆரம்பமாவதற்கு முன்னரே நிரம்பி விட்டது. துறைமுகப்பட்டினமான ஊரின் தோர் நிழ்ப்புறங்களில் மைதானத்தைச் சுற்றியிருந்த கம்பி வேலிகளுக்குப்பின்னே இருந்து அதன் இடுக்குகளினூடே தமது பார்வையைச் செலுத்திய வண்ணம் இருந்தனர். வேலைத் தளங்களில் உள்ள பெரும் பாலோர் தொலைக்காட்சிகளின் முன்பும், தெருவில் செல்வோர்கடைகளின் அருகே வானொலிப்பெட்டிகள் மாலை 4.30 போட்டி ஆரம்பித்து விட்டது.

2வது நிமிடம் தூரம் பாதுகாப்பு எல்லையை நோக்கிக் கொண்டு சென்ற பந்தை தப்பான ஆட்டத்தின் மூலம் இத்தாலி அணித்தலைவர் பாலோ மல்டினி தடுத்து நிறுத்தினார்.

4வது நிமிடம் ஜோர்கேப் இத்தாலி அணியின் பாதுகாப்பு வலயத்துக்குள் செலுத்திய பந்தை கிடன் கோல் எல்லைக் கோட்டை நோக்கி அடித்தார். கோல் காப்பாளர் பகிறுக்காவால் தடுக்கப்பட்டது.

8வது நிமிடம் இத்தாலி வீரர் மொன்டேரோ பிரான்ஸ் அணியின் பாதுகாப்பு வலயத்தினுள் உதைத்த பந்தை தாக்குதல் வீரர் வியாரி அடிக்க முற்படுகையில் இடை நிலை பாதுகாப்பு வீரர் தூரத்தினால் தடுக்கப்பட்டது.

20வது நிமிடம் அலைத் தலைவர் டெசாம் கொண்டு சென்ற பந்தை இத்தாலியின் தாக்குதல் வீரர் டெல்பியரோ பின்னின்று தாக்குதல் தொடுத்து தடுத்து நிறுத்தினார். அதனால் டெல்பியரோ மஞ்சள் அட்டை எச்சரிக்கைக்கு உள்ளானார். (இவ் விருவரும் இத்தாலியின் யுவன்ரஸ் அணியில் சகவீரர்கள் ஆவர்)

29வது நிமிடம் இத்தாலி அணியின் இறுதிப் பாதுகாப்பு வீரர் கோஸ்டகூர்டா பிரான்ஸ் அணியின் இடை நிலை தாக்குதல் வீரர் சிடேன் கொண்டு சென்ற பந்தை தப்பான ஆட்டத்தின் மூலம் தடுத்து நிறுத்தினார். இதனால் மஞ்சள் அட்டை எச்சரிக்கைக்கு உள்ளானார். (இக் குற்றத்திற்கு சிவப்பு அட்டையே உரிய தண்டனை என்பது குறிப்பிடத்தக்கது)

54வது நிமிடம் இத்தாலியின் பாதுகாப்பு வலயத்தினுள் வந்த பந்தை பிரான்ஸ் அணியின் தாக்குதல் வீரர் கிவார்ஸ் தலையால் இடிக்க முனைந்த போது இத்தாலியின் பாதுகாப்பு வீரர் கனவரோ கிவ் முகத்தில் தனது முழங்கையால் இடித்தார். இதனால் கனவரோ காயமுற்றதுடன் சிகிச்சைக்காக மைதானத்தை விட்டு வெளியே சென்றார். இதற்கு தண்டனையாக கிவார்ஸ்க்கு மஞ்சள் அட்டை எச்சரிக்கை கொடுக்கப்பட்டது.

65வது நிமிடம் இத்தாலியின் தாக்குதல் வீரர் டெல்பியரோவை பின்னால் இருந்து தாக்கியதற்காக பிரான்ஸ் அணித்தலைவர் டெசெம்ப் மஞ்சள் அட்டை எச்சரிக்கைக்கு உள்ளானார்.

65வது நிமிடம் பிரான்சின் இடைநிலை வீரர் கரம்பு வெளியே செல்ல தாக்குதல் வீரர் கொறி உள்நுழைந்தார்.

67 வது நிமிடம் தாக்குதல் வீரர் கொறி இத்தாலி அணியின் பாதுகாப்பு வலயத்தினுள் கொடுத்த பந்தை இடது பக்க கோல் எல்லையை நோக்கி அடிக்க அது கோல் கம்பத்தில் இருந்து பதினைந்து சென்ரி மீற்றர் இடைத்தூரத்தில் வெளியேறியது.

68வது நிமிடம் இத்தாலியின் தாக்குதல் வீரர் டெல்பியரோ வெளியேற மறு தாக்குதல் வீரர் றொபேர்ட்டோ பஜ்ஜியோ களம் புகுந்தார்.



87வது நிமிடம் பிரான்சின் பாதுகாப்பு வலயத்திலுள் வந்த பந்தை தடுத்து நிறுத்தாமல் அதே நிலையில் (on the air) கோல் எல்லையை நோக்கி றொபர்ட்டோ பஜ்ஜியோ அடித்தார். அது வலது புற கோல் கம்பத்திலிருந்து அரை சென்ரிமீற்றர் இடைத்தூரத்தில் வெளியேறியது.

இதனால் தொண்ணூறு நிமிட ஆட்டமும் வெற்றி தோல்வி இன்றி முடிவுற மீண்டும் முப்பது நிமிட ஆட்டம் (15 - 15) தொடுக்கப்பட்டது.

முதல் தொண்ணூறு நிமிட ஆட்டத்தில் முன்னணி வகித்த பிரான்ஸ் அணி கூடுதலாக கொடுக்கப்பட்ட முப்பது நிமிட ஆட்டத்தில் களைப்புற்று இருந்த போது பல தடவை தட்டுத்தடுமாறியது.

இவ்வாறாக முப்பது நிமிட ஆட்டமும் எந்த முடிவையும் தராமல் நிறைவுபெற்றது. இதனால் தண்டனை உதை மூலம் வெற்றி தோல்வி அறிய வேண்டி வந்தது.

முதல் தண்டனை உதையை பிரான்ஸ் அணியின் சிடான் அடித்து தனது அணியை 1 - 0 என்ற நிலைக்கு இட்டுச் சென்றார். அதே போல இத்தாலியின் முதல் தண்டனை உதையை றொபேர்டோ பஜ்ஜியோ அடித்து சமநிலை படுத்தினார்.

இரண்டாவதாக வந்த பிரான்ஸ் வீரர் லிசரசு அடித்த பந்தை இத்தாலியின் கோல் காப்பாளர் தடுத்து நிறுத்தினார். இது பிரான்ஸ் அணிக்கும் ஆர்வலர்களுக்கும் பேரிடியாக அமைந்தது.

அடுத்து வந்த இத்தாலி வீரர் அல்பெற்றினி அடித்த பந்தை பிரான்ஸ் கோல் காப்பாளர் பார்தேஸ் தடுத்தி நிறுத்தினார். இது பிரான்சுக்கு நிவாரணம் ஆனது.

மூன்றாவதாக வந்த பிரான்ஸ் அணியின் இளம் வீரர் திரஸ் சகே கோலை அடித்து 2 - 1 என்ற நிலைக்கு இட்டுச் சென்றார். அதேபோல் இத்தாலி வீரர் கொஸ்ரகுர்தா கோலை அடிக்க சமநிலையானது.

நான்காவதாக வந்த பிரான்ஸ் அணியின் இளைய நட்சத்திரம் கொறி கோலை அடித்து மீண்டும் தந்து அணியை 3 - 2 என்று முன்னணி வகிக்கச் செய்தார். தொடர்ந்து வந்த இத்தாலி வீரர் வியரி தனது பங்கை திறம்படச் செய்து (3 - 3) சம நிலைப்படுத்தினார்.

ஐந்தாவதாக வந்த பிரான்ஸ் அணியின் பாதுகாப்பு வீரரும் உலகக்கிண்ண உதைப்பந்தாட்ட சரித்திரத்தில் முதலாவது தங்கக் கோலை (Golden goal) அடித்ததன் மூலம் தமது அணியை கால் இறுதியாட்டத்திற்கு இட்டுசென்றவருமான லோரன்புலோங் நான்காவது கோலை அடித்து பிரான்ஸ் அணியை 4 - 3 என்ற நிலைக்கு இட்டுச்சென்றார்.

ஐந்தாவதும் இறுதியுமான தண்டனை உதையை அடிக்க வந்த இத்தாலியின் டி பாஜி கோலை எண்பதினாயிரம் மக்கள் நேரடியாகவும் பல கோடி மக்கள் தொலைக்காட்சியூடாகவும் பார்த்த வண்ணம் இருந்தனர். அவர் அடித்த பந்து கோல்கம்பத்தில் பட்டு திரும்பியது. இதனால் பிரான்ஸ் அணி 4:3 என்ற கோல் நிலையில் வெற்றிபெற்று நான்காவது முறையாக அரையிறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றது.

இத்தாலி தொடர்ந்து மூன்று முறை தண்டனை உதையில் வெற்றி பெறாமல் வெளியேறியது. அதன் விபரம்

1990ம் ஆண்டு (அரையிறுதி ஆட்டம்)

ஆர்ஜன்ரீனா 1 - இத்தாலி 1
தண்டனை உதை 4 - 3

1994ம் ஆண்டு (இறுதி ஆட்டம்)

பிரேசில் 0 - இத்தாலி 0
தண்டனை உதை 3 - 2

1998ம் ஆண்டு (கால் இறுதி ஆட்டம்)

பிரான்ஸ் 0 - இத்தாலி 0
தண்டனை உதை 4 - 3

பிரான்ஸ் அணியின் இடை நிலை வீரர் ஜோர்ஜ்கேவ் தனக்குக் கிடைத்த கோல் அடிக்கும் இரண்டு அரிய வாய்ப்புக்களை தவறவிட்டமை அவரது எதிர் காலத்திற்கு கேள்விக்குறியாகி விட்டது.

எப்போதும் பிரான்ஸ் அணி சார்பில் தண்டனை உதை அடிக்கத் தெரிவாகும் இவருக்கு இவ் ஆட்டத்தில் சந்தர்ப்பம் வழங்கப்படாமை சாட்சியம் கூறுகின்றது. இதே தவறுகளை குரோசியாவுடனான அரையிறுதி ஆட்டத்தில் விடுவார்களானால் காலத்தின் முன்னே கைகட்டி நிற்கவேண்டியவர்கள் ஆவார்கள்.

— தே.தே.



# சரித்திர வெற்றி

சாதனைகள் சரித்திரங்கள் ஆகின்றன. அந்தவகையில் கடந்த 04.07.1998 அன்று நடைபெற்ற பதினாறாவது உலகக்கிண்ண இறுதியாட்டத்தில் - முதல் முறையாக உலகக்கிண்ணப் போட்டிக்கு தெரிவான குரோசியா மூன்று முறை உலகக்கிண்ணத்தை வெற்றிகொண்ட ஜேர்மனியை 3:0 என்ற கோல் நிலையில் வெற்றி பெற்று அனைத்து உதைபந்தாட்ட வல்லுனர்களின் கணிப்பைப் பொய்யாக்கி அரையிறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது.

1992ம் ஆண்டு சுதந்திரமான குரோசியா 4,800,000 மக்களைக் கொண்டது. இவர்களில் 82000 பேர் உதைபந்தாட்டம் விளையாடும் அனுமதியை பெற்றுள்ளவர்.

1954ம் ஆண்டு தொடக்கம் 1998ம் ஆண்டுவரையான பதின் மூன்று உலகக்கிண்ணப் போட்டியில் (1950ம் ஆண்டு நீங்கலாக) தொடர்ந்து பங்குபற்றி வந்த ஜேர்மன் அணி 5-வது, 10-வது, 14-வது உலகக்கிண்ண சம்பியனானதோடு, 8-வது, 12-வது, 13-வது உலகக்கிண்ண இரண்டாவது சம்பியனும் ஆகும். 1958ம் ஆண்டு சுவீடனில் நடைபெற்ற ஆறாவது உலகக்கிண்ணத் தொடரில் மூன்றாவது இடத்திற்கான போட்டியில் பிரான்சிடம் 6:3 என்ற கோல் நிலையில் தோற்றதன் பின்னர் அதாவது 40 வருடங்களை கழித்த நிலையில் மீண்டும் ஒரு பாரிய தோல்வியை 16வது உலகக்கிண்ணப் போட்டியில் பெற்றுள்ளனர்.

போட்டியில் முதல் பதினைந்து நிமிடங்களும் தாக்குதலை தீவிரப்படுத்தியிருந்த ஜேர்மன் அணியினரை படிப்படியாகத் தமது கட்டுப்பாட்டுக்குள் குரோசியா அணியினர் கொண்டு வந்தனர்.

38வது நிமிடம் வேர்னேஸ் ஐ தப்பான ஆட்டத்தின் மூலம் தடுத்து நிறுத்தியமைக்காக சிமிக் மஞ்சள் அட்டை தண்டனை பெற்றார்.

36-வது நிமிடம் குரோசியாவின் தாக்குதல் வீரன் ஜார் னியோல் முன்னெடுத்துச் சென்ற பந்தை ஜேர்மனியின் இடைநிலை வீரர் ஜெவின்றிச் பின்னிருந்து தாக்கி நிறுத்தியமையால் மஞ்சள் அட்டை எச்சரிக்கைக்குள்ளானார்.

37-வது நிமிடம் தாக்குதல் வீரர் ஸ்ரனிக்கை தடுத்து நிறுத்த அவர்மீது தாவியதால் ஜேர்மன் அணியின் ரமது மஞ்சள் அட்டை எச்சரிக்கைக்குள்ளானார்.



40வது நிமிடம் குரோசியாவின் தாக்குதல் வீரர் சுக்கர் கொண்டு சென்ற பந்தை தனித்து நின்ற ஜேர்மனியின் பாதுகாப்புவீரர் வோர்ன்ஸ் தனது முழங்காலினால் இடித்து வீழ்த்தினார். இதனால் வோர்ன்ஸ் சிவப்பு அட்டைத் தண்டனை பெற்று மைதானத்தை விட்டு வெளியேறினார். இதனைத் தொடர்ந்து சாதகமாக்க முனைந்த குரோசியா 45, 80, 85 வது நிமிடங்களில் முறையே ஜார்னி, விலோவிக், சுக்கர் ஆகியோர் கோல்களைப்போட்டு சாதனையாளர்கள் ஆனார்கள்.

ஜேர்மன் அணியினர் என்று மில்லாதவாறு தப்பான ஆட்டங்களை ஆடியதுடன், எதிரணியினரை பேரிடியாக செய்யப்பட்டமை ஜேர்மன் அணிக்குப் பேரவமானமாகும்.

# முன்னாள் உலகசம்பியன்களை வெளியேற்றிய கால் இறுதிப்போட்டிகள்

இறுதிக்கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் உலகக்கிண்ண போட்டிகளின் கால் இறுதியாட்டங்கள் நிறைவடைந்த நிலையில் மூன்று முன்னாள் உலகசம்பியன்கள் வெளியேற்றப்பட்டுள்ளன. அவையாவன இத்தாலி, யேர்மனி, ஆர்ஜென்டீனா. 02.07.98 நடைபெற்ற முதலாவது கால் இறுதியாட்ட முக்கிய போட்டியாக காணப்பட்டது. போட்டியை நடாத்தி வரும் பிரான்ஸ், சென்றமுறை இறுதிப்போட்டி வரை வந்த இத்தாலியை எதிர்கொண்டது. இரு நாட்டவருக்கும் ஏராளமான ரசிகர்களும் இருந்தனர். போட்டி ஆரம்பமானது இரு அணிகளும் சமபலத்துடன் ஆடின. ஆனாலும் பிரான்ஸ் கூடிய சந்தர்ப்பங்களை கொண்டிருந்த போதும் கோல் போடவில்லை. குறிக்கப்பட்ட நேரமும் முடிந்தது. போட்டிக்கு முடிவு தென்படாததால் மேலதிக நேரம் வழங்கப்பட்டும் முடிவுக்கு விடப்பட்டது. அதுவும் பலனளிக்காமல் போக இறுதிக்கட்டமாக தண்டனை உதை மூலமே முடிவு செய்யவேண்டி ஏற்பட்டது. விறுவிறுப்பாக தண்டனை உதைகள் வழங்கப்பட்டன. முதல் உதையை இரு அணியும் கோல் ஆக்கிவிட்டு இரண்டாவது உதையை மேற்கொண்ட பிரான்ஸ் வீரரின் பந்தை தடுத்து நிறுத்தி முடிவில் மாற்றம் ஏற்படும் சாத்தியத்தை உருவாக்கினார் இத்தாலியின் பந்துக் காப்பாளர். முன்னணியில் இருந்த இத்தாலி அணியிலிருந்து இரண்டாவது உதையை முன்னெடுத்த இத்தாலிய வீரரின் பந்தை தடுத்து நிறுத்தி தானும் சளைக்காதவர் என்பதைக் காட்டினார் பிரான்ஸின் பந்துக் காப்பாளர். தொடர்ந்து 3ம் 4ம் உதைகளை கோல்களாக்கியது இரு அணியும். முடிவில் 5ஆவது உதையை கோல் ஆக்கியது



பிரான்ஸ். அடுத்த 5 ஆவது இத்தாலி வீரர் பஜ்ஜியோ (Baggio) கோல் ஆக்குவார் என பார்வையாளர்கள் பார்த்திருக்கும் வேளையில் உதையப்பட்டு புறப்பட்ட பந்து கோல் காப்பரணின் போல் பட்டு வெளியில் சென்றதால் தண்டனை உதையில் பிரான்ஸ் 4:3 என்று வெற்றிக்கனியைப் பறித்தது. சென்ற முறை லொஸ் ஏஞ்சல் நகரில் நடைபெற்ற இறுதிப்போட்டியிலும் பிரேசிலுக்கு எதிரான தண்டனை உதையிலும் இறுதி பந்தை காப்பரணுக்கு மேலாக அடித்து தோல்வியை தழுவியது இத்தாலி அணி.

02.07.98 நடைபெற்ற இரண்டாவது கால் இறுதிப்போட்டியில் பிரேசிலும் டென்மார்க்கும் மோதிக்கொண்டன. இரண்டாவது சுற்றில் மிகவும் திறமையாக நைஜீரியாவை வெளியேற்றிய டென்மார்க், ஆட்டம் ஆரம்பமாகி 2 ஆவது நிமிடத்திலேயே ஒரு கோல் போட்டு பலம் பொருந்திய பிரேசிலை கதிகலங்கவைத்தது மட்டுமல்லாமல் நிலைதடுமாறவும் செய்தது. ஆனாலும் உலகப்புகழ் படைத்த வீரர்களான றொனால்டோ, பெபற்றோ, றிவால்டோ மனம் தளராது ஆடி அசத்தி விட்டார்கள். 10 ஆவது நிமிடத்தில் றொனால்டோ கொடுத்த பந்தை பெபற்றோ கோல் ஆக்கி ஆட்டத்தில் சமநிலையை ஏற்படுத்தினார். திரும்பவும் றொனால்டோ எடுத்துக் கொடுக்க இம்முறை றிவால்டோ கோல் அடித்து பிரேசிலின் கையை ஓங்கவைத்தார். ஆனாலும் 50 ஆவது நிமிடத்தில் றொபேட்டோ கார்லோஸ் விட்ட தவறை பயன்படுத்தி டென்மார்க் வீரர் லாற்ப் மீண்டும் ஆட்டத்தில் சமநிலையை உண்டுபண்ணினார். இருந்த போதும் 60 ஆவது நிமிடத்தில் றிவால்டோ தனது இரண்டாவது கோலை அடித்து பிரேசிலை முன்னிலைக்கு உயர்த்தினார். இறுதிவரை டென்மார்க்கும் தளராது ஆடி பல தடவை கோல்போட முயற்சித்தும் பயனளிக்காததால் பிரேசில் 3:2 என்று வெற்றிபெற்றது. வெற்றி பெற்றாலும் பிரேசில் சந்தித்த கடுமையான போட்டி இதுவாகும்.

03.07.98 மூன்றாவது கால் இறுதிப்போட்டியில் நெதர்லாந்தும் ஆர்ஜென்டீனாவும் மோதிக் கொண்டன. ஆட்டம் ஆரம்பித்து 12 நிமிடத்தில் நெதர்லாந்து ஒரு கோலைப்போட 18 நிமிடத்தில் பதிலுக்கு ஆர்ஜென்டீனாவும் ஒரு கோலைப்போட்டு ஆட்டத்தை விறுவிறுப்பாக்கியது. ஆட்டம் தொடர இரு அணியும் கோல் போட முடியாது தவித்தன. 77 ஆவது நிமிடத்தில் நெதர்லாந்தின் நியூமன் (Numan) சிவப்பு அட்டை காட்டி மைதானத்தை விட்டு வெளியேற பணிக்கப்பட்டதால் ஆர்ஜென்டீனாவுக்கு கோல்போடும் சந்தர்ப்பம் அதிகமாகக் காணப்பட்டபோதும், அது நடைபெறவில்லை. 86 ஆவது நிமிடத்தில் மீண்டும் ஒரு சிவப்பு அட்டை ஆர்ஜென்டீனாவின் ஒட்டேகாவுக்கு கொடுக்கப்பட 10 வீரர்களுடன் இரு அணியும் ஆட்டத்தை தொடர்ந்த போது, ஆட்டத்தின் இறுதி நிமிடத்தில் நெதர்லாந்தின் சுப்பர் ஸ்ரார் பேர்கம் அணியின் வெற்றிக்கான கோலை அடித்தார். இறுதியில் நெதர்லாந்து 2:1 என்று வெற்றிபெற்றது.

03.07.98 இறுதி கால்இறுதி போட்டியில் ஜேர்மனியும் குரோஷியாவும் கலந்து கொண்டன. அனுபவம் வாய்ந்த ஜேர்மனிக்கும் அனுபவம் குன்றிய குரோஷியாவுக்கும் போட்டி நடப்பதால் ஜேர்மனிக்கு சாதகமான முடிவையே பலரும் எதிர்பார்த்தனர். எதிர்பார்ப்பை முறியடிக்கும் விதத்திலேயே குரோஷியாவின் ஆட்டமும் அமைந்திருந்தது. ஆனால் கோல் அடிக்கப்படவில்லை. ஆட்டத்தின் திருப்பு முனைக்கு வித்திட்ட 43 நிமிட நேரத்தில் ஜேர்மனி வீரர் வோர்ன்ஸ் (Worns) சிவப்பு அட்டை மூலம் மைதானத்தைவிட்டு வெளியேற்றப்பட்டார். ஆட்டத்தின் 45 நிமிடத்தில் முதலாவது கோலை அடித்தது குரோஷியா ஆனாலும் பார்வையாளர்களுக்கு ஜேர்மன் அணி மீதுள்ள நம்பிக்கை கெட்டுவிடவில்லை. ஏனெனில் முதல் சுற்றில் யூகோஸ்லாவியாவையும் இரண்டாம் சுற்றில் மெக்சிக்கோவையும் ஆட்டத்தில் இறுதி நேரங்களில் எதிர்கொண்ட ஜேர்மனியை மறக்கமுடியவில்லை. இருப்பினும் குரோஷியாவின் தாக்குதலும் சளைக்காமல் தொடர 80, 85 நிமிடங்களிலும் மேலும் இரு கோல்களை போட்டு வெற்றியை உறுதிப்படுத்தியது. சுற்றில் 3:0 முன்னணியிலிருந்த குரோஷியா வெற்றிபெற்றது. இவ்வெற்றியே அனைத்து கால் இறுதிப்போட்டியிலும் ஏற்படுத்தப்பட்ட பெரியளவிலான வெற்றியாகும்.

பிரேசில் தவிர மற்றைய நாடுகளான பிரான்ஸ், நெதர்லாந்து, குரோஷியா என்பன உலகக்கிண்ணத்தை கைப்பற்றாத நாடுகளாகும். எனவே புதியநாடு ஒன்று உலகக்கிண்ணத்தை கைப்பற்றுமா? அல்லது 5வது தடவையும் சம்பியனாக பிரேசில் தெரிவாகுமா? என்பதை அடுத்த முரசில் அறிவீர்கள்.




## கண்ணோட்டம்

# பிரான்ஸ் - குரோசியா அரையிறுதியாட்டம்

எதிர்வரும் 08.07.98 அன்று 16வது உலகக்கிண்ணத்திற்கான அரையிறுதியாட்டத்தில் பிரான்ஸ்-குரோசியா மோதிக் கொள்ள உள்ளன. பிரான்ஸ் அணியின் பன்னிரு வீரர்கள் ஐரோப்பாவிலுள்ள முதன்மைக் கழகங்களில் விளையாடி வருவதுபோலவே குரோசியாவின் பதினைந்து வீரர்களும் விளையாடி வருகின்றனர். உடல் வலுவைப் பொறுத்தவரை பிரான்ஸ் அணியைக் காட்டிலும் குரோசிய அணி சற்றுச் சிறந்தது. நுட்பமான (Technick) விளையாட்டில் பிரான்ஸ் முன்னணி வகிக்கின்றது. அத்துடன் மைதான ஆதரவும் பிரான்சிற்குள்ளது.

சிறந்த தாக்குதல் வீரர்களைக்கொண்டது குரோசியா. சிறந்த பாதுகாப்பு வீரர்களையும், கோல் காப்பாளரையும் கொண்டது பிரான்ஸ் இவற்றினூடே நோக்கும்போது பிரான்ஸ் சிறந்த வெற்றிபெறும் வாய்ப்புள்ளதென்றாலும் சம நிகரான நிலைமையே முடிவைத் தீர்மானிக்கும்.

- ஜெ.ஜெ

# விம்பிள்டன் டெனிஸ் முடிவுகள்



பிரசித்திபெற்ற டெனிஸ் போட்டியாக கருதப்படும் விம்பிள்டன் பட்டத்திற்கான போட்டிகள் 05.07.98 முடிவுபெற்றன.

05.07.98 நடைபெற்ற ஆண்களுக்கான ஒற்றையர் ஆட்டத்தில் முதல்தர வீரரான அமெரிக்காவின் சம்பிறாஸ் ஐந்தாவது தடவையாக இப்பட்டத்தை பெற்றுக்கொண்டார். குரோசியாவை சேர்ந்த 14 தரத்திலுள்ள இவானிசெவிக் மூன்றாவது தடவையாக இறுதிப்போட்டத்தில் தோல்வியை தழுவிக் கொண்டார். அவர் சம்பிறாஸிடம் 7:6, 6:7, 4:6, 6:3, 2:6 என்று வெற்றியின் விளிம்பிலிருந்து விலகியதை அவதானிக்கமுடிகிறது.

04.07.98 நடைபெற்ற ஆண்கள் இரட்டையர் ஆட்டத்தில் நெதர்லாந்தின் வல்ரீங், கார்கள் சோடி அவுஸ்திரேலியாவின் ஜோடியை 2:6, 6:4, 7:6, 5:7, 10:8 என்று கடுமையான போட்டியின் மத்தியிலேயே வெற்றிகொண்டது.

04.07.98 நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் ஆட்டத்தில் மூன்றாமிடத்திலுள்ள செக் குடியரசின் நோவட்ரா தனது மூன்றாவது முறையான இறுதியாட்டத்திலேயே விம்பிள்டன் பட்டத்தை பெறமுடிந்தது. இதற்கு முன்னர் 1993 ஸ்ரெபி கிறாபிடமும் 1997 இல் மாட்டினா



ஹிங்கிஸிடமும் தோல்வியடைந்தார். இம்முறை அரையிறுதி ஆட்டத்திலேயே முதல்தர வீராங்கனை மாட்டினா ஹிங்கிஸை வெற்றிகொண்டு, இறுதியாட்டத்தில் பிரான்சின் சவ்சிபட்டை 6:4, 7:6 என்று இலகுவாக வெற்றியும் கொண்டார். இவ் வெற்றி மூலம் நோவட்ரா உலகத்தரத்தில் இரண்டாவது இடத்தையும் பெற்றுக்கொண்டுள்ளார்.

05.07.98 நடைபெற்ற பெண்கள் இரட்டையர் ஆட்டத்தில் முதல்தர சோடியான ஹிங்கிஸ், நோவட்ரா, இவ்விரு சோடி டவன்போட், சுகிரா சோடியை 6:3, 3:6, 8:6 என்று வெற்றிகொண்டது. ஒற்றையர் இரட்டையர் ஆகிய இரு ஆட்டங்களிலும் வெற்றி கொண்ட நோவட்ராவுக்கு இம்முறை விம்பிள்டன் அதிஷ்டம் கிடைத்திருக்கிறது.

மற்ற முறைகளை போல அன்றி இம்முறை விம்பிள்டன் போட்டிகள் மிகவும் பரபரப்பின்றி முடிவுற்றது. தொலைவில் விளையாட்டு ரசிகர்களின் ஆர்வம் இம்முறை உலகக் கோப்பை உதைபந்தாட்டத்தின் மீதே இருக்கிறது.

## வரலாற்றில் பதிந்த தவறுகள்

(உலக வரலாற்றில் பதிவு பெற்ற சில தவறுகள் பெரும் அனர்த்தங்களுக்குக் காரணங்களாகிவிட்டன. இத்தகைய அனர்த்தங்கள் சிலவற்றை ஈழமுரசு, வாசகர்களுக்கு தொகுத்துத் தருகின்றது.)

### உலகத்தின் முதல் மோட்டார் வண்டியோட்டியும், முதல் மோட்டார்வண்டி விபத்திற்குள்ளானவரும், வாகன விபத்திற்கு முதல் சிறைத்தண்டனை அனுபவித்தவரும்

நிக்கொலாஸ் குக்நோட் (Nicholas Cugnot) என்ற பிரெஞ்சு, பிரங்கி தொழிலாளி உலகத்தில் முதற் தடவையாக மூன்று சாதனைகளை நிலைநாட்டி புகழ்பெற்றுள்ளார்.

1769-ம் ஆண்டு 3 சில்லுகள் கொண்ட மோட்டார் வண்டியை உருவாக்கி உலகத்தில் முதலாவது மோட்டார் வண்டிக்காரன் என்ற பெயரைப் பெற்றார்.

ஆனால் அவரது கவலையீனமான வண்டி ஓட்டத்தினால், வண்டி சுவரில் சென்று இடித்து விபத்துண்டாகியதால், விபத்தில் முதலாவது குற்றவாளியானார். நிக்கொலாஸ் பாரதூரமான காயப்படவுமில்லை. விபத்து நடந்ததையிட்டு வருத்தப்படவுமில்லை. அதன் பின்பு அந்த வண்டியின் ஸ்ரியரிங், பிறேக் ஆகியவைவற்றை சரிப்படுத்தி 4 பேரை ஏற்றிக்கொண்டு ஒரு மணித்தியாலத்தில் இரண்டு மைல் தூரம் ஓடக்கூடிய வகையில் அதை புதுப்பித்து உருவாக்கினார்.

இதனால் பெரும் புகழ் பெற்ற அவருக்கு பிரான்ஸ் பாதுகாப்பு அமைச்சினால், இராணுவத் துருப்புகளைக் காவிச் செல்லும் பெரிய வாகனங்களை உண்டாக்குவதற்கு வியாபார ஒப்பந்தம் ஒன்று கொடுக்கப்பட்டது.

ஆனால் நிக்கொலாசின் வாகனங்களைச் சோதனை செய்தபோது அவை உயிருக்கு ஆபத்து தரக்கூடிய அளவிற்கு மோசமான நிலையில் உள்ளன என அறிவிக்கப்பட்டது. அதன் பின்பும் பல தடவை அவரது வாகனம் விபத்துக்களுக்கு உள்ளாகியமையால் அவர் உலகத்தில் முதற்தடவையாக வாகன விபத்துச் சிறைக்கு அனுப்பப்பட்டார்.

அவர் செய்த தவறுகளினால் இராணுவ வாகனம் தயாரிக்கக்கூடிய வாய்ப்பும் கிடைக்காமல், தனது கனவுகளையும் நிறைவேற்றாது 1804-ம் ஆண்டு காலமானார்.

### உடைந்த இதயத்தின் விலை மதிப்பு:-

ஏற்கனவே திருமணமான விமான ஓட்டி ஒருவர் விமானத்தில் வேலை செய்யும் (Steward) பணிப்பெண் ஒருத்தியை காதலித்து லண்டனிலுள்ள வீடொன்றில் அப் பெண்ணுடன் வசித்து வந்தார்.

ஒரு வருடமாக அவர்களின் காதல் வாழ்க்கை நன்றாகப் போய்க் கொண்டிருந்தது. படிப்படியாக அவர்களின் காதல் வாழ்க்கையில் கசப்பு ஏற்பட்டது. தனது காதலியுடன் குடும்ப தகராறு ஏற்பட்டு விமான ஓட்டி அவரை வீட்டைவிட்டு உடனடியாக வெளியேறும்படி கூறினார். அந்தப் பெண் தான் வீட்டை விட்டு வெளியேற 2, 3 நாட்கள் அவகாசம் தரும்படி அவரிடம் மன்றாட்டமாகக் கேட்டுக்கொண்டாள். அதற்கு அவரும் சம்மதித்து, விமானத்தில் தூரப் பயணம் செய்துவிட்டு பல நாட்கள் கழித்து வீடு திரும்பியபோது அவரின் காதலி வெளியேறி விட்டாள்.

வீடு மிகவும் நிசப்தமாகவும், சுத்தமாகவும் இருந்தது. ஆனால் தொலைபேசி மாத்திரம், செவிக்குழல் (Receiver) வெளியில் எடுத்து வைக்கப்பட்டிருந்தது. உடனடியாக அவர் ரெலிபோனை எடுத்து காதில் வைத்தபோது அமெரிக்க குரலில் நேரம் திருப்பித் திருப்பி கூறப்பட்டுக் கொண்டிருந்தது.

காதலனின் நடவடிக்கையால் ஆத்திரமடைந்த அப்பெண் அவனுக்கு பாடம் படிப்பிப்பதற்காக லண்டனிலிருந்து அமெரிக்காவில் உள்ள நேரம் அறிவிக்கும் கடிகாரத்துடன் தொடர்புகொண்டு ரெலிபோனை நிறுத்தாது அப்படியே வைத்துவிட்டார். விமான ஓட்டி வீடு வந்து சேரும் வரை தொடர்ந்து நேரம் அறிவித்துக் கொண்டிருக்கும். இதனால் ரெலிபோனுக்கு பெருந்தொகையான பணம் கட்டவேண்டி வரும். அதுவே தனது காதலனுக்கு தகுந்த தண்டனை என நினைத்து அவள் அப்படி செய்துவிட்டு சென்றாள்.

தன்னுடைய காதலி தன்னை பழி தீர்த்துக் கொண்டதை உணர்ந்த விமானஓட்டி தொலைபேசிக்கு கட்ட வேண்டிய பணத்தொகையை நோக்கியபோது 1200 பவுண்ஸ் ஆக இருந்தது அது.

— கவிதா —


5 யூலை
-
19 யூலை



துயர் துடைப்பு நாட்கள் 98

தொடரும் இடப்பெயர்வுகளால்
வீடுவாசல் இழந்து மரநிழலில்
பசியுடனும் பட்டினியுடனும் நோயுடனும்
வாழ்ந்து கொண்டிருக்கும் எமது
உறவுகளின் துயர் துடைக்க உங்கள்
வீடு தேடி வருகின்றோம்...
எம் உறவுகளின் துயர் போக்க
உங்களால் இயன்ற அதி உச்ச
பங்களிப்பை வழங்குங்கள்

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் — பிரான்ஸ்
26, Rue du Departement, 75018 Paris.
Tel: 01 40 38 30 74






எங்கும் கிடைக்கிறது







Marketed & Distributed
by
Ayngaran Limited
172, Woodmansterne Road,
London SW16 5TZ,
United Kingdom.
Tel: 0181 7645200
Fax: 0181 764 5255
E-mail:
bhasky@aol.com



போலி CD க்களை வாங்கி ஏமாறாதீர்கள். Bhasky முத்திரைகளை கவனித்து வாங்குங்கள்

# கலைந்த சொற்கள் எண்: 10

கீழ் உள்ளவற்றில் சொற்கள் கலைந்திருக்கிறது. சொற்கள் நேர் கோட்டிலும், இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ், கீழிருந்து மேல். மூலைப் பக்கம் இருக்கும். இச் சொற்களை கண்டு பிடித்து கோடிடவும். சொற்களில் சேராத சில எழுத்துக்கள் மேலதிகமாக உள்ளன.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆ | ண | வ | ம் | ச | ல் | த | டு | ப | ன் | ய | ப | அ |
| ர | மை | று | வ | த் | லை | ந | அ | இ | ரி | க | பு | ர |
| ம் | ட் | ம் | ப | த | ம் | கா | ந் | கா | ல் | ம் | ப் | ச |
| ப | து | த | அ | ம் | ப | யா | தி | த் | அ | க | கா | ன் |
| ம் | த் | த் | ர | மா | தி | அ | ய | அ | ம | ங் | க | வி |
| அ | ப | ய | ம் | ர | ந் | ர | க் | இ | ம் | த | யு | ஆ |
| அ | ஆ | ஆ | பா | பா | அ | கி | கி | கி | ர | ஆ | ம் | பு |
| ள | அ | த | வி | க் | ர | ட் | ரி | ன் | னி | தை | ல | ம் |
| வு | க | க | த | ம | கி | ம் | கை | சா | ச | ம் | வ | ந |
| ம் | ர | ம் | ம் | த | ச | ய | ச் | ப | ம் | ர் | தா | ஆ |
| ப | ந் | த | ம் | பா | ம | அ | சா | ம் | அ | கா | அ | ம் |
| வு | த் | ர் | ஆ | த | வ | ன் | சை | வி | சி | ங் | ய | ல் |
| அ | ழி | மி | வா | ச | கி | ம் | ய | சி | ட் | ல | அ | ய |
| ழ் | க | அ | ர | ச | கி | லி | சி | அ | ஆ | அ | ம் | தை |
| ந | க | ம் | ம் | அ | ம் | லி | இ | ரு | ம் | பு | று | பு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அபயம் | அவசரம் | அலட்சியம் | அலங்காரம் | அரவம் | அமிர்தம் | அமங்கலி |
| அதிகாலை | அரசன் | அளவு | ஆட்சி | அக்கிரமம் | அகம்பாவம் | அகிம்சை |
| அசம்பாவிதம் | அத்தியாயம் | அதிகாரி | அக்கினி | அத்தம் | இரும்பு | ஆவாரம் |
| பாரதி | ஆதங்கம் | ஆதவன் | ஆபத்து | ஆபாசம் | ஆயத்தம் | அகழி |
| ஆயுதம் | ஆரம்பம் | ஆரம்பம் | ஆலயம் | ஆதரவு | ஆதாரம் | நகம் |
| சத்தம் | பாக்கியசாலி | பாதகம் | இலிகிதம் | பயன்படுதல் | காப்பு | வறுமை |
| தைலம் | பாரம் | சமாதி | பகல் | புதையல் | சிலம்பு | சாபம் |
| வலம் | தூண் | வாசம் | புத்தம் | விக்கிரம் | அம்பு | அந்தியம் |
| அழிவு | அந்தியக்கிரியை | | | | | |

சொல்விளக்கம்:

அத்தம் - கை / அமங்கலி - கைம்பெண் / இலிகிதம் - புடைவைகள், திருமுகம்

பெயர்: . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

முகவரி: . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

பிறந்த நாள்: . . . . . . . . . . . . . . . . . . . .

சந்தாதாரராயின் சந்தா இல: . . . . . . . . . . . .

கலைந்த சொற்கள் எண்-10 இற்கான விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள்: 17.07.98

(போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

**விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:**

கலைந்த சொற்கள்
ஈழமுரசு - 22, Rue Perdonnet,
75010 Paris, France.

# கலைந்த சொற்கள் எண் - 9 விடைகள்



ஈழமுரசுவின் கலைந்த சொற்கள் பகுதிக்கு 250 இற்கும் மேற்பட்ட வாசகர்கள் விடையெழுதி அனுப்பியிருந்தார்கள்.

அவர்களில் சரியான விடையெழுதிய வாசகர்களில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து வாசகர் விபரங்கள் வருமாறு.

1) புவனி ரவி
7200 Grindsted,
Denmark
2) தேவகி குமார்
1400 Yverdon,
Swiss
3) திருமதி அருமைத்துரை
69168 - Wiesloch,
Germany
4) அகஷந்தினி
75017 Paris,
France.
5) திருமதி தி. சந்திரன் (கசி)
London E4 O 4JX,
U.K.

இவர்களுக்கு
**Lune International Paris**
நிறுவனத்தினரால் பெறுமதி மிக்க நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

இந்த கலைந்த சொற்கள் எண்-10 இற்கான சரியான விடையும், கலைந்த சொற்கள் எண்-11ம், 23 - 29 ஜூலை 98 ஈழமுரசில் வெளிவரும்.

தயாரிப்பு: சிவேந்து சுவந்திரராஜா


# ஆராதனா
## Housing Agency

**விற்பனைக்கு**

பாரீஸ் 18ème
அழகிய 2 Piéces appartement
விற்பனைக்கு உள்ளது.
கடன் வசதி செய்து கொடுக்கப்படும்.
உடன் தொடர்பு கொள்ளவும்
Tel: 01 40 34 20 90

# Centre Educatif Franco - Tamoul

பிரான்சிய கல்வி நிலையத்தின் 12-வது வருட மிகச் சிறந்த கல்வி சேவையின் தொடர்ச்சியாக மீண்டும் ஓர் புதிய விசேட பிரெஞ்சு ஆரம்ப வகுப்பு ஆரம்பம்.

வேலை பார்ப்பவர்களும் இடை நேரத்தில் கல்வி கற்றுக்கொள்ள வசதியாக சனி, ஞாயிறு தினங்களில் 16 மணி தொடக்கம் 17h30 மணி வரை நடைபெறவுள்ளது.

**திகதி: 11.07.1998**
**காலம்: 6 மாதங்கள்**

இவ்வகுப்பில் பேச, எழுத, வாசிக்க, உச்சரிக்க கூடிய முறையில் விசேடமாக நடைபெறவுள்ளது.

பிரெஞ்சு இலக்கணம் கற்றுக்கொள்ள, பேச, எழுதுவதற்காக ஓர் புதிய வகுப்பு ஆரம்பம்.

**திகதி: 18.07.1998**
**நேரம்: 15h45 முதல் 17h15 வரை**
**காலம்: 7 மாதங்கள்**

## உங்களுக்கு தெரியுமா??

**சிறுவர்களுக்கான வகுப்புகள் நடைபெறவுள்ளது.**

உங்கள் குழந்தை நாளை பிரெஞ்சு மொழியில் பேசுவதை தமிழில் மொழிபெயர்த்து உங்களுக்கு கூறவேண்டுமா? எமது தாய்மொழியை நன்றாக பேச எழுத விசேட சிறுவர்களுக்கான வகுப்பு ஆரம்பம்

**திகதி: 13.07.1998 பிற்பகல் 13h30**
**இடம்: 81, Rue de la Plaine, 75020 Paris.**
**M°: Maraichers**
1-வது மாடி கதவு இல: 33
**Tel: 01 46 48 30 52**

ஆரம்பமாகிவிட்டது

சுவிசில்

# GNANAM

## Telecom Centers




| | | |
|---|---|---|
| *சிறிலங்கா | – | 35Mn |
| *பாகிஸ்தான் | – | 30Mn |
| இந்தியா | – | 32Mn |
| கனடா | – | 100Mn |
| அமெரிக்கா | – | 100Mn |
| இத்தாலி | – | 100Mn |
| இங்கிலாந்து | – | 100Mn |
| ஜேர்மனி | – | 100Mn |
| அவுஸ்திரேலியா | – | 100Mn |
| சிங்கப்பூர் | – | 58Mn |
| பிரான்ஸ் | – | 135Mn |

வர்த்தகர்களுக்கு விசேட கழிவு உண்டு. கீழ்காணும் முகவரியில் தொடர்புகொள்ளவும்

பாரிசில் மக்களின் நம்பிக்கையைப் பெற்ற ஞானம் தொலைபேசி அட்டைகளை இப்பொழுது சுவிசில் சகல வணிக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**GNANAM** Telecom Centers

Militär Str-84, 8004 Zürich, Switzerland

Tel: 012420152 - Fax: 012420153

Mobil: 0794142867

* இரவு 7 மணி முதல் காலை 8 மணி வரை



கருமாரி மூவிஸ் வழங்கும்

| | | |
|---|---|---|
| 10.07.98 | வெள்ளி | 8.30 |
| 11.07.98 | சனி | 6.15 – 9.15 |
| 13.07.98 | திங்கள் | 6.15 – 9.15 |
| 14.07.98 | செவ்வாய் | 6.15 – 9.15 |

வெள்ளி, சனி, திங்கள், செவ்வாய்

**ESPACE CINEMA**

AUBERVILLIERS QUATRE CHEMINS

M° : QUATRE CHEMINS

**12.07.98 ஞாயிறு 3.00**

**TRIANTON**

**80Bd Barbes. 75018 PARIS**

**M° : ANVERS**



உலகக்கிண்ண உதைபந்தாட்டத்தை முன்னிட்டு ஞாயிறு ஒரு காட்சி மட்டும்.

24 மணி நேர தொடர்புகளுக்கு 01 48 34 11 59

நடிகர்கள்
புரட்சி கலைஞர் விஜயகாந்
பிரீதா விஜயகுமார்
தலைவாசல் விஜய்
ரஞ்சித்
ஷில்பா
மன்சூர் அலிகான்
ஜெய்சங்கர்
மனோரமா
வடிவுக்கரசி
மற்றும் பலர்

இசை
இளையராஜா

தயாரிப்பு
அ.செ. அப்பாஸ் ராவுத்தர்

அண்ணன் தங்கை பாசத்தை .. கல்வெட்டுகளைப் போல... ரசிகப் பெருமக்களின் நெஞ்சங்களில் நிலைத்து நிற்க வருகின்றான்

## நாணயமாற்று விகிதம்

| | $ | DM | £ | FFr | S.Fr |
|---|---|---|---|---|---|
| நியூயோர்க் | – | 0.55 | 1.64 | 0.16 | 0.65 |
| பிராங்பேட் | 1.82 | – | 2.99 | 0.30 | 1.18 |
| லண்டன் | 0.60 | 0.33 | – | 0.10 | 0.39 |
| பாரிஸ் | 6.09 | 3.35 | 10.03 | – | 3.96 |
| சூரிச் | 1.53 | 0.84 | 2.51 | 0.25 | – |
| பம்பாய் | 42.40 | 23.30 | 69.83 | 6.95 | 27.68 |
| கொழும்பு | 65.20 | 38.83 | 107.38 | 10.69 | 42.56 |

## சிறீ சேனகுரே - ஹேமா இணைந்து புதிய கட்சி ?

ஐக்கியதேசியக் கட்சியிலிருந்து ஏற்கனவே நிராகரிக்கப்பட்டவர்களும் கட்சியில் தற்பொழுது அதிருப்தி கொண்டவர்களும் இணைந்து புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. முன்னாள் அமைச்சர் சிறிசேனகுரே, பிரேமதாசாவின் பாரியார் ஹேமா ஆகியோர் இக் கட்சியை உருவாக்குவதில் முயற்சி எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இக் கட்சியில், ரணில் விக்கிரமசிங்காவின் தலைமைத்துவத்தில் அதிருப்தி கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் பலரும் இணைந்து கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஜப்பானில் 19 சிங்களவர்கள் கைது

சிறிலங்காவிலிருந்து மீன்பிடிப் படகு ஒன்றின் மூலமாக ஜப்பானுக்குள் பிரவேசித்த 19 சிங்கள இளைஞர்கள் ஜப்பானில் கைதுசெய்யப் பட்டுள்ளனர். நாத்தாண்டிய, வென்னப்புவ பகுதியைச் சேர்ந்த இவர்கள் தலா ஐம்பதினாயிரம் ரூபாவைச் செலுத்தி இப் பயணத்தை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கைது செய்யப்பட்ட இவர்கள் தற்பொழுது ஜப்பான் குடிவரவுத் திணைக்களச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## தென்மராட்சியில் 4864 பேருக்கு மலேரியா தாக்கம்

தென்மராட்சிப் பகுதியில் 4864 பேருக்கு மலேரியா நோயின் தாக்கம் காணப்பட்டுள்ளதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. கடந்த 6 மாத காலப்பகுதியிலேயே இந்நோயின் தாக்கம் தீவிரமாகக் காணப்படுகின்றது. பல்வேறு காரணமாக மலேரியா நோயொழிப்பு நடவடிக்கைகள் இப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படாமையினாலும், அதிக நுளம்புப் பெருக்கம் காரணமாகவுமே இந் நோய் தீவிரமடைந்துள்ளதாகவும் வைத்தியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### மரண தண்டனை....

இறுக்கமான தீர்ப்பு எதுவோ அளிக்கப்பட முடியாது. சர்வதேச அழுத்தங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கைதான் இதெனக் கவனிக்க வேண்டும். இவ்வாறு கொழும்பிலுள்ள மனிதவுரிமை சட்டத்தரணி ஒருவர் இந்த தீர்ப்பினைப் பற்றி கருத்துக் கூறுகையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 'அடிப்படையில் பிரச்சினை எங்கே இருக்கிறது. அது தமிழ் மக்கள் மேல் ஆழமான ஒரு இராணுவத்தை ஏற்படுத்தும் பாரதூரமான பிரச்சினை. அவ்வாறான பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமானால் வடக்கு கிழக்கிலிருந்து சிறிலங்கா இராணுவம் முழுமையாக விலக்கப்பட வேண்டும். மாறாக இத்தகைய தீர்ப்புகள் ஆழமான இராணுத் [illegible] சேவை செய்வதாகவே கருதமுடியும்.

உதாரணமாக இத் தீர்ப்பு வெளியாவதற்கு முதல்நாள் [illegible] பகுதியில் நிலைகொண்ட படையினரால் கொடூரமான பாலியல் வல்லுறவு படுகொலை மேற்கொள்ளப்பட்டுள்ளதே? அடிப்படையில் சிறிலங்கா இராணுவ மனோபாவம் தொடர்ந்தும் வெறிபிடித்துள்ள நிலையில் செயற்படும் போது இத்தகைய நீதி வழங்கல்கள் ஒரு மாற்றத்தையும் கொண்டுவரவோ அன்றி தமிழ் மக்களுக்கு நம்பிக்கையையோ தோற்றுவிக்கப்போவதில்லை' எனவும் அவர் தெரிவித்தார்.

## மன்னாரிலிருந்து 10 குடும்பங்கள் தமிழகம் சென்றன

மன்னார் மாவட்டத்திலிருந்து சுமார் 10 குடும்பங்களைச் சேர்ந்த 24 பேர் படகுகள் மூலம் கடந்த 5ம் திகதி தமிழகம் சென்றுள்ளனர். தனுஷ்கோடி கரையை வந்தடைந்த இவர்கள் யாவரும் தமிழக பொலிசாரினால் மண்டபம் அகதிமுகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

## தில்லை நகரிலிருந்து 250 குடும்பங்களை வெளியேற்ற முயற்சி

திருகோணமலை உட்துறைமுக வீதியில் அமைந்திருக்கும் தில்லைநகரைச் சேர்ந்த 250 இற்கும் மேற்பட்ட குடும்பங்களை அப் பகுதியில் இருந்து வெளியேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ் வெளியேற்ற முயற்சியைக் கண்டித்து தில்லைநகரவாசிகள் ஒன்றுதிரண்டு ஆர்ப்பாட்டம் ஒன்றினை கடந்த 3ம் திகதி நடாத்தியுள்ளனர். சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு திருமலைப் பிரதேச செயலகத்திற்கு முன்பாக இவர்கள், கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இப்பகுதியில் வசித்துவரும் தம்மை வெளியேற்ற கோருவது நியாயமற்ற செயல் எனவும் இதனை உடனடியாகக் கைவிட வேண்டுமெனவும் கோரி ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆர்ப்பாட்டத்தின் முடிவில் சிறிலங்கா அரசிற்கான வேண்டுகோள் மனு ஒன்றினையும் இவர்கள் கையளித்தனர்.

## நாட்டைவிட்டுத் தப்பியோடும் பாதாள உலக புள்ளிகளை பிடிக்க விசேட குழுக்கள்

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பாதாள உலக நடவடிக்கைகளில் ஈடுபட்டு தற்பொழுது நாட்டை விட்டுத் தப்பியோடும் பெரும் புள்ளிகளை கைது செய்வதற்காக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு இரண்டு விசேட குழுக்களை அமைத்துள்ளது. இக் குழுக்களில் இரகசிய பொலிசாரும் இராணுவ உளவுப் பிரிவினரும் அடங்குகின்றனர்.

இக் குழுக்கள் கொழும்பு விமான நிலையத்திலும் விசேட கண்காணிப்பை மேற்கொண்டு வருகின்றது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### புங்குடுதீவு....

ந்து கடற்படையினர் இப் பிரதேசத்தினை பொறுப்பேற்றிருந்தனர். புங்குடுதீவு பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் தளங்களை அழிக்குமாறு இவர்களுக்கு மேலிடம் உத்தரவிட்டதைத் தொடர்ந்தே கடற்படையினர் புலிகளின் தளங்கள் மீது தாக்குதலை தொடுக்கச் சென்றுள்ளனர்.

கடற்படையினரின் இந்த நடவடிக்கையை முறியடித்த புலிகள், அவர்களை மீண்டும் பின்வாங்கச் செய்துள்ளனர்.

பின்வாங்கிச் சென்ற படையினர் பொதுமக்கள் மீது தாறுமாறாக தாக்குதல்களை மேற்கொண்டபோது மூவர் காயமடைந்துள்ளனர்.

## போர்முனைக்குச் செல்ல அஞ்சிய சிப்பாய் தற்கொலை

சிறிலங்கா இராணுவத்திலிருந்து தப்பி வந்த சிப்பாய் ஒருவர் மீண்டும் இராணுவத்தில் இணைத்துக்கொள்ள அஞ்சியதால் கிருமிநாசினியை அருந்தி தற்கொலை செய்துள்ளார். இராணுவத்திலிருந்து தப்பி வந்த இவரை மீண்டும் இராணுவத்தில் சேர்ந்துகொள்ளுமாறு இவரது கிராமசேவை அதிகாரி வலியுறுத்தியதால் பீதியடைந்திருந்த இச் சிப்பாய், கிருமிநாசினியை அருந்தி தனது உயிரை போக்கிக்கொண்டுள்ளார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### களுத்துறை....

இதேநேரம், டக்ளஸ் தேவானந்தா மீதான தாக்குதல் தொடர்பாக 11 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது. இவர்கள் அனைவரும் இப்போது புலனாய்வுத் துறையினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவதாகவும் இப் 11 பேரில் மூவர் தேவானந்தா மீதான தாக்குதலில் நேரடியாக பங்கெடுத்துக்கொண்டதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### கிருஷாந்தி கொலை....

ளனர்.

பாலியல் வல்லுறவு, கடத்தல், கொலை உட்பட 8 குற்றச்சாட்டுகள் இவர்கள் மீது நிரூபிக்கப்பட்டிருப்பதாகவும் நீதிபதிகள் தெரிவித்துள்ளனர். எதிரிகளுக்கு மரணதண்டனை விதிக்கும் முன்பாக அவர்களை நோக்கிய நீதிபதிகள் ஏதாவது கூற விரும்புகின்றீர்களா எனக் கேட்டபோது தாம் நிரபராதி எனத் தெரிவித்த அவர்கள் மேலதிகாரிகளே கொலைகளைப் புரிந்துவிட்டு தம்மீது பழியைப் போடுவதாகவும், யாழ்ப்பாணத்தில் இவ்வாறாக செய்யப்பட்ட கொலைகள் ஏராளம் எனவும், அச்சடலங்கள் புதைக்கப்பட்ட புதைகுழிகள் 300 தொடக்கம் 400 வரையிலாக இருக்கின்றதெனவும் அவற்றை தம்மால் காண்பிக்கமுடியும் எனவும் தெரிவித்தனர்.

தீர்ப்பு வழங்கப்பட்டதும், எதிரிகளின் உறவினர்கள் சிலர் நீதி மன்றத்தில் மயங்கிவிழுந்தனர்.

## மரண அறிவித்தல்

ஈழத்தில் வேலணையை பிறப்பிடமாகவும் தாயகத்தை விட்டு அகதியாய் ஜேர்மனி கிறீபீல்ட் நகரில் Emilschofer Str.61. Krefeld வசித்தவருமாகிய செல்வராஜா, வாமதேவன் அவர்கள் கடந்தவாரம் திடீரென மரணமானார். இவரது மரணம் சில நாட்கள் கடந்தே தெரியவந்தது குறிப்பிடத்தக்கது. தகனக்கிரியையின் விபரம் பின்னர் அறிவிக்கப்படும் இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

நன்றி

K.T.C.E. V.Krefeld
கிறீபீல்ட் தமிழர் ஒன்றியம்
02151/397383/310460

AMV
IMPORT - EXPORT
அனைத்து மீன் வகைகளும் மொத்த விலையில் கொடுக்கப்படும். மரக்கறி வகைகளும் மலிவான விலையில் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். Rungis மரக்கறி வகைகளும் மொத்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
208, Rue du Fbg. St. Denis,
75010 Paris.
ஏற்றுமதி இறக்குமதியாளர்கள்
Tel: 01 44 72 91 25
Fax: 01 44 72 91 30
Pub

ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The BROADWAY, Southall, Middx. T.P: 0181 / 813 9126

# புதூரில் கண்ணிவெடித் தாக்குதல் உயரதிகாரி உட்பட 9 படையினர் பலி

## ஒரு வாரத்தில் நடந்த 2-வது தாக்குதல்

தனகராயன் குளப்பகுதியில் விடுதலைப் புலிகளால் வெற்றிகரமாக நடாத்தப்பட்ட கிளைமோர் தாக்குதல்களில் விமானப் படை அதிகாரி ஒருவர் உட்பட 12 சிப்பாய்களை இழந்த அரசிற்கு கடந்த வாரம் மீண்டும் ஒரு அதிரடியினை வன்னி புதூர் பகுதியில் புலிகள் கொடுத்துள்ளனர்.

புதூர் பகுதியில் நடாத்தப்பட்ட தாக்குதலுக்கும் விமானப் படையினரே இலக்காகியுள்ளனர். இத் தாக்குதலில் 'ஸ்குவாரொன்' தர அதிகாரி ஒருவர் உட்பட ஒன்பது படையினர் பலியாகியுள்ளனர். மேலும் இருவர் படுகாயப்படுத்தப்பட்டுள்ளனர்.

வாகனமொன்றில் இவர்கள் சென்று கொண்டிருந்த வேளையிலே, மாலை 4.50 மணியளவில் இக் கண்ணிவெடித் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. படையினர் பயணம் செய்த வாகனம் பல அடி தூரத்திற்கு உருக்குலைந்த நிலையில் வீசியெறியப்பட்டதாகவும் வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத் தாக்குதலை சிறீலங்கா இராணுவத் தலைமையகமும் ஒத்துக் கொண்டுள்ளதுடன், படையினர் தக்கவைத்துள்ளதாக கூறப்படும் பிரதேசங்களில் எவ்வாறு புலிகள் ஊடுருவி தாக்குதல்களை நடாத்துகின்றார்கள் என்பதை ஆய்வு செய்யுமாறும் உயரதிகாரிகளை பணித்துள்ளது.

## பாரிசில் எழுச்சி விழா

### துயர்துடைப்பிற்கு பகிரங்க பங்களிப்பு

(05.07.98)

உலகளாவிய ரீதியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் நடாத்தப்படும் துயர்துடைப்பு நாட்கள் பிரான்சில் எழுச்சி விழாவுடன் ஆரம்பமாகியது. இவ்விழாவில் பங்கேற்ற பொது மக்கள் மேடையில்வைத்து தமது பங்களிப்புகளை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திடம் ஒப்படைத்தனர்.

இவ் விழாவில் தஞ்சைப் பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் அவ்வை நடராஜன் அவர்களும், மலேசிய டாக்டர் அருள்மொழி பாரி அவர்களும் சிறப்புரையாற்றினர்.

இவ் விழாவில் கலந்துகொண்ட வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஒருவர் தனது மகளது பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த முழு நிதியையும் துயர் துடைக்கும் பணிக்கு வழங்கியமை அங்கு கூடியிருந்த மக்களின் உணர்வைப் பிரதிபலித்ததாக அமைந்திருந்தது.

## கிருசாந்தி கொலை வழக்கில் ஆறு பேருக்கு மரண தண்டனை

யாழ். கண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தி குமாரசாமி மீதான பாலியல் வல்லுறவு படுகொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சிறீலங்காப் படையினரில் 6 பேருக்கு கொழும்பு மேல் நீதி மன்றத்தில் மரணதண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இவ் வழக்கில் 1-ம் எதிரி லான்ஸ்கோப்ரல் சோமரட்ன ராஜபக்சன், 2-ம் எதிரி ஜெஎம். ஜெயசிங்க, 3-ம் எதிரி பிரதீப் பிரியதர்சன, 4-ம் எதிரி பிரிய சாந்த பெரேரா, 7-ம் எதிரி டி.எம். ஜெயதிலக, 8-ம் எதிரி இந்திரஜித் பெரேரா ஆகியோருக்கே மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 8-ம் எதிரியான இந்திரஜித் பெரேரா விசாரணை நடந்த காலகட்டத்தில் தப்பியோடி தலைமறைவாகியுள்ளார்.

இவ் வழக்கில் 6-ம் எதிரியான முத்துபண்டாவை நீதி மன்றம் விடுதலை செய்துள்ளது. ஜூரிகள் இல்லாமல் நடத்தப்பட்ட இவ் வழக்கில் நீதிபதிகள் மூவரும் ஏகமனதாக குற்றவாளிகளுக்கு தீர்ப்பினை வழங்கியுள்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

### மரண தண்டனை தீர்ப்பினால் தமிழ் மக்கள் நெகிழ்ந்து விடப்போவதில்லை

**- மனிதவுரிமை சட்டத்தரணி -**

யாழ். கண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தி குமாரசாமி மீதான பாலியல் வல்லுறவு படுகொலை வழக்கில் சிறீலங்கா சிப்பாய்களும், பொலிசாருமான அறுவருக்கு மரண தண்டனையை நீதிமன்றம் வழங்கியுள்ளதனால் தமிழ் மக்களுக்கு நீதி கிடைத்து விட்டதென்றோ அல்லது இது ஒரு

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## புங்குடுதீவு: புலிகளின் தளங்களை அழிக்க சென்ற படையினர் விரட்டியடிப்பு - 6 படையினர் பலி

புங்குடுதீவுப் பிரதேசத்திலுள்ள விடுதலைப் புலிகளின் தளங்களை அழிக்கவென சென்ற சிறீலங்கா கடற்படையினருக்கும் புலிகளுக்குமிடையில் பெரும் மோதலொன்று எழுந்துள்ளது.

இம் மோதலின் விளைவாக ஆறு கடற்படையினர் கொல்லப்பட்டதுடன், மேலும் நால்வர் படுகாயமடைந்துள்ளனர். படையினர் வசமிருந்த ஆயுத தளவாடங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

தீவுப் பகுதியில் நிலை கொண்ட இராணுவத்தினர் 'ஜெயசிக்குறு' போர்முனைக்கு அனுப்பப்பட்டதைத் தொடர்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## களுத்துறை சிறையில் துப்பாக்கி சூடு 3 தமிழ் கைதிகள் காயம்

களுத்துறை சிறைச்சாலையில் ஈ.பி.டி.பி. [illegible] கைதிகள் [illegible] தாக்கப்பட்டதைத்தொடர்ந்து சிறை அதிகாரிகள் கைதிகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் மூன்றுபேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

லண்டனில் புதுப் பொலிவுடன்
கணபதி தமிழ்க்கடை

உடன் மரக்கறி வகைகள், கடலுணவுகள், மளிகைப் பொருட்கள்
உங்கள் அனைத்து தேவைகளையும் ஒரே இடத்தில் பூர்த்தி செய்வதற்கு
Ganapathy Food & Wine
34, Ealing Road Wembley, Middx, Hao 4TL, U.K
Tel: 0181 -903 3184 / Fax: 0181 -903 3185
நண்டு £3.99
அறக்குளா (King Fish) £2.99
இறால் £1.49
விளைமீன் கும்பிளா சீலா £2.99
மரக்கறி (நம்நாட்டு வகை) .99Pence